பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
11 NOV 2015

# எங்கள் தேசம்

மாதம் இரு முறை | Engal Thesam | එංගල් දේසම් | GPO/QD/17/NEWS/2015

மலர்: 14 | இதழ்: 21 | நவம்பர் 01 – 14 ஹிஜ்ரி: 1437 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 30.00 | 304

17/11/15

2016 ஆம் ஆண்டுக்கான
கலண்டரை
உங்கள் விருப்பத்திற்கேற்ப
வடிவமைத்து
அச்சிட்டுக் கொள்வதற்கு
நாட வேண்டிய ஒரே இடம்
IPC
தொடர்புகளுக்கு: சகோ. ரிஸ்வான்
0777 41 21 46



11

**சம்பந்தன் ஐயா அவர்களே; பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கும் நீங்கள்தான் எதிர்க்கட்சித் தலைவர்**



13

**பலஸ்தீன்: அகன்ற முழு நிலத்தையும் மீட்பதற்கான போராட்டம்**

# முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதற்காக வெட்கித் தலை குனிகிறோம்

## பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்



அலுவலக நிருபர்

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதற்காக தாம் வெட்கித் தலைகுனிவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கவலை தெரிவித்தார். முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் போலவே தமிழ் மக்களுக்கும் எதிராக அநீதிகள் இழைக்கப்பட்டன என மேலும் அவர் தெரிவித்தார்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கு ஒன்று அண்மையில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கொழும்பு 07 இல் அமைந்துள்ள விளையாட்டுத்துறை அமைச்சு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

➡ 16

# முசலி மக்களின் நிலங்களை மீள பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும்

## ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார

**மக்கள் விடுதலை முன்னணி குரல் கொடுக்கும்**



இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் சுபிட்சமாக வாழ வேண்டிய தேவையுள்ளது. நாட்டு மக்களின் சுபிட்சத்துக்கு அரசாங்கம் பொறுப்பாகும். இந்த சுபிட்சத்தை இழந்துள்ள மக்களில் ஒரு பிரிவுதான் முசலி வாழ் மக்கள். அவர்கள் தனது சொந்த நிலங்களை இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களின் நிலங்களை மீளப் பெற்றுக் கொடுப்பது இந்த அரசாங்கத்தின் தார்மீகப் பொறுப்பாகும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லா எழுதிய 'மறுக்கப்படும் மீள்குடியேற்ற உரிமைகள்' எனும் நூலின் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

யுத்தம் முடிவடைந்த பின்பு இந்த நாட்டில் நிறைவேற்ற வேண்டிய பல தேவைகள் இருந்தாலும் முன்னுரிமைப்படுத்த வேண்டிய தேவையாக இந்தக் காணிகளை மீண்டும் பகிர்ந்தளிக்கும் செயற்பாடு நடந்திருக்க வேண்டும்.

➡ 16

# இனவாதத்தைத் தூண்டும் செயற்பாடுகளுக்கு எதிராக புதிய சட்டம்



தண்டனைக் கோவைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதனடிப்படையில், இன மற்றும் மதங்களை அடிப்படையாகக் கொண்டு மக்களிடையே ஆத்திரமூட்டும் செயற்பாடுகளுக்கும் மதவாத அடிப்படையில் தீங்கிழைக்கும் கருத்துக்களுக்கும் அவை தொடர்பிலான பிரசுரங்களுக்கும் தடை விதிக்கும் வகையிலேயே தண்டனைக் கோவைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

➡ 16

# மூன்றாவது இன்திபாழா போராட்டம்



பலஸ்தீன்-இஸ்ரேல் மோதல் உக்கிரமடைந்துள்ளது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து பலஸ்தீனில் மூன்றாவது இன்திபாழா போராட்டம் பிரகடனப்படுத்தப் பட்டதை அடுத்து அங்கு போர் உக்கிரமடைந்துள்ளது.

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதம் வாழும் இடமெல்லாம் எங்கள் தேசமே!

# வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

















வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி கடந்த மாதம் 23 ஆம் திகதி அட்டாளைச்சேனை, முல்லைத்தீவு, கொழும்பு ஆகிய பிரதேசங்களில் வெள்ளிக்கிழமை ஜுமுஆத் தொழுகையின் பின்னர் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. தேசப்பற்றுள்ள இளைஞர் அமைப்பின் அழைப்பின் பேரிலேயே இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் அமைதியான முறையில் இடம்பெற்றது.

# 'Denying The Right To Return'

# மீள்குடியேற்றத்தின் உரிமை மறுப்பு




கடந்த 30 வருட யுத்தத்தினால் ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டு அவர்களின் இருப்பிடங்கள் முற்றாகவும் பகுதியாகவும் சேதமாக்கப்பட்டுக் கொண்டிருந்த பயங்கர சூழ்நிலையில் சிலர் உள்நாட்டின் பல பிரதேசங்களிலும் வெளிநாடுகளிலும் தஞ்சம் புகுந்தனர். இவற்றில், வாழ்வாதாரங்களையும் வாழ்விடங்களையும் விட்டு திட்டமிட்டு விரட்டியடிக்கப்பட்டவர்களும் பலர் அடங்குவர்.

யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாறு வடமாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட முஸ்லிம் மக்கள் தம் வாழ்விடங்களுக்கு மீண்டும் நகரத் தொடங்கினர். என்றாலும், அரசியல் தலையீடும் இனத் துவேஷமும் தலைதூக்கின. பொறுப்புவாய்ந்த சில ஊடகங்களும் பொறுப்பற்ற விதத்தில் பக்கசார்பாக, உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டமையால் இம்மக்களின் மீள்குடியேற்ற மேம்பாடுகளில் பாரிய தடங்கள் ஏற்படத் தொடங்கின. இதனால், இன்று வரை 25 வருடங்கள் கடந்த நிலையிலும் மீள் குடியேற்றப்படாமல் எண்ணற்ற முஸ்லிம்கள் அகதி முகாம் வாழ்க்கையில் காலத்தைக் கடத்தி வருகின்றனர்.

இதன் பின்னணியில் இருந்து, சில உண்மைகளை நாட்டு மக்களுக்கும் இவ் எதிர்ப்பாளர்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டியுள்ள சந்தர்ப்பத்தில்தான், வட மாகாண முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஒரு பிரதேசமான முசலி தெற்குப் பிரதேசம் முக்கிய பாத்திரமாக அரங்குக்கு வந்தது.

எனவே, முசலியின் வரலாறு மற்றும் அதனுடன் இணைந்த காடழிப்பு மற்றும் நில உரிமை விவகாரங்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட ஆய்வு நூலே 'Denying The Right To Return' (மீள்குடியேற்றத்தின் உரிமை மறுப்பு) எனும் புத்தகமாகும்.

இந்நூல் 120 பக்கங்களில், ஆங்கில மொழி நடையில் பேராசிரியர் ஸாஹுல் எச். ஹஸ்புல்லாஹ் அவர்களின் உன்னத உழைப்பில் எழுதப்பட்டுள்ளது. எம்.எம். மஸ்தான், எஸ்.எச். றிஸ்னி, எம்.எஸ். தமீம், ஏ.ஜி. அனீஸ், எம்.எம்.எம். நியாஸ், ஏ.எஸ்.எம். நௌபல் ஆகியோர் இணைந்த குழு பெறுமதிவாய்ந்த இந்த ஆய்வு நூலுக்கு மகத்தான உதவி, ஒத்தாசைகளை வழங்கியிருக்கிறது.

சட்டவிரோதமான காடழிப்பு மற்றும் குடியேற்றம் பற்றிய குற்றச்சாட்டுகள், முசலி தெற்கு மக்கள் பரம்பல், நில அமைவிடம் மற்றும் குடியியல் வரலாறுகள், காடழிப்பு பற்றிய குற்றப் புலனாய்வு விசாரணைகள், குடியமர்த்தப்பட்ட மக்களின் நிலைப்பாடுகள், குடியுரிமை மறுப்புகள், பரிந்துரைகள் என்பன அடங்கிய தொகுப்பாக மிக ஆழமாக பேசும் வார்த்தைகளால் சமூகத்தின் கண்களைத் திறந்துவிட எத்தனிக்கிறது. பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் அவர்களின் 'மீள்குடியேற்றத்தின் உரிமை மறுப்பு' என்ற இந்த நூல்.

மீள்குடியேற்றதின் தேவையைப் பற்றிப் பேசும் இந்நூல் பின்வரும் எட்டு தலைப்புக்களைக் கொண்டுள்ளது.

1. Introduction.
2. Land and people of the 'contested region' musali south.
3. Allegations of 'unauthorized' forest clearance for resettlement.
4. Investigating allegations of 'illegal' forest clearance.
5. What is found to be lost on return ?
6. The plight of displaced and returnees of musali south.
7. Denying the right to return of the displaced of musali south.
8. Recommendations.

இலங்கை நிலப் பரப்பில் வெற்றிடமாக இருந்த காணிகள் அண்மைக் காலத்தில் இராணுவத்தினருக்கும் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன. எஞ்சிய சில பகுதிகளை வணிக நிறுவனங்கள் விலைகொடுத்து வாங்கின. இன்னும் சில பகுதிகளை இலங்கை அரசு பாதுகாக்கப்பட வேண்டிய இயற்கைக் காடுகளாக பிரகடனப்படுத்தியது. இதன் பின்னணியில் தோன்றியதுதான் முசலி தெற்கு பிரதேசத்தின் குடியுரிமைப் பிரச்சினையும்.

1990 காலப் பகுதியில் வடக்கின் தென் பிரதேசத்தில் அதாவது, வில்பத்து பிரதேசத்தில் வாழ்ந்த சுமார் 75,000 முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளால் துரத்தியடிக்கப்பட்டனர். யுத்த முடிவின் பின்னர் அதில் 75% ஆனோர் மீள்குடியேறினர். என்றாலும், அவர்களுடைய குடியேற்றத்துக்கு எதிராக குரல்கள் எழுந்தன. இதற்கு தக்க பதிலளிக்கக் கூடியதாகவும் இந்த ஆய்வு நூல் விளையப் பெறலாம்.

இப்பாரிய பணியை 25 வருடகால அனுபவத்தையும் அறிவையும் கொண்டு இத்துறையில் பாண்டித்தியம் பெற்ற பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் அவர்கள் செய்திருக்கிறார்.

பொதுமக்கள் விழிப்புணர்வைத் தூண்டுவதும் அவர்களின் கவனயீர்ப்பை முசலி தெற்கு பிரதேசத்தின் பக்கம் திருப்பி அம்மக்களுக்கான தீர்வுகளைப் பெற விளைவதும் மற்றும் அரசியல் சார் விழிப்புணர்வைத் தூண்டுவதும் இப்புத்தகத்தை மற்றுமொரு பணியாகவும் இருக்க முடியும்.

மேலும், நீதமான முறையில் இலங்கை அரசியல் சட்டத்தில் ஏற்புத் தகைமையுடைய மீள்குடியேற்றக் கொள்கை உருவாக்கம் ஒன்றை ஏற்படுத்துவதில் சிவில் சமூக அமைப்புகளை குரலுயர்த்த வழி செய்வதும் இவ்வாய்வுப் புத்தகத்தில் தொனிக்கும் எதிரொலிகளாகும்.





கொழும்பு தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டின் போது பேராதனை பல்கலைக்கழக ஆங்கிலத்துறை பேராசிரியை சுமதி சிவமோகன் மற்றும் பொறியியலாளர் ரீஷா யஹ்யா ஆகியோர் இந்நூலுக்கான ஆய்வுரை நிகழ்த்துவதையும் நூலாசிரியர் பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லா ஏற்புரை நிகழ்த்துவதையும் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவிடமிருந்து தொழிலதிபர் யஹ்யான் முதற் பிரதியை பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் [illegible] ஸைன் மர்ஸூக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்க்கப்படாத மீள்குடியேற்றத்தை முன்னெடுப்பவர் யார்?

கே. கான் – முல்லைத்தீவு

## அரியணையை தக்கவைக்கப் போராடியவர்கள் அரவணைத்தவர்களை அகழியில் வீழ்த்துவது நியாயமாகுமா?



வடக்கிலிருந்த முஸ்லிம்கள் பலவந்தமாக விரட்டியடிக்கப்பட்டு 25 வருடங்கள் கடந்துவிட்டன. 1990 ஒக்டோபர் இறுதி வாரத்தில் பாஸிஸ புலிகளால் குறுகிய கால அறிவித்தலின் பிரகாரம் வெறும் இரண்டு மணித்தியாலங்களில் வட மாகாண முஸ்லிம்கள் இனச் சுத்தி கரிப்புக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இலங்கையின் பெரும்பான்மைச் சமூகத்தின் ஆதிக்கப் பிடியிலிருந்து தனது சமூகத்தை மீட்டெடுக்க ஆயுத ரீதியாகப் போராடியவர்கள், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட இன்னொரு சிறுபான்மை, சமூகத்தை அதுவும் தங்களுடன் உரிமைக்காக குரல் கொடுத்து தோழமை பாராட்டப்பட்டவர்கள், இரவோடு இரவாக வேரறுக்கப்பட்டமை இலங்கை வரலாற்றில் மறக்க முடியாத ஒரு கறைபடிந்த நிகழ்வாகும்.

கறைபடிந்த இந்த வரலாறு, இம்முஸ்லிம்களின் வாழ்வியலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் அதிலிருந்து இன்று வரை மீள முடியாதவர்களாக காணப்படுகின்றனர். திசை காட்ட வேண்டியவர்களும் கரையேற்ற வேண்டியவர்களும் அவ்வப்போது தமது பயணத்தின் உதவியாளர்களாகவும் வழிகாட்டியாகவும் இம்மக்களை வைத்துக் கொண்டு தங்களைத்தான் கரையேற்றினார்களே தவிர, இந்த அப்பாவிகளைக் காப்பாற்றத் தவறிவிட்டனர்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஏழு வருடங்கள் இம்மக்களின் மீள்குடியேற்றத்தில் அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. இந்த விடயத்தில் முஸ்லிம் தலைமைகள் பலவீனப்பட்டவர்களாக இருப்பதும் தெளிவான விடயமாகும். பெரும்பான்மைக் கட்சியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் சரி, தனிக் கட்சியமைத்து அதனூடாக அரசியல் ரீதியாக போராட முற்பட்ட எம்பிக்களும் சரி முஸ்லிம் சமூகத்தின் முக்கியமான பிரச்சினைகள் என்று வரும்போது இவர்களெல்லாம் காணாமல் போய்விடுகின்றனர்.

வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் மற்றும் அடிப்படைத் தேவைகளை அரசுக்கு எடுத்துக் கூறி அவற்றிற்காக போராடும் வேகம் இந்த தலைமைகளிடம் கடுகளவும் கிடையாது. குறிப்பாக, முஸ்லிம் காங்கிரஸிடம் வட மாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் சம்பந்தமான ஆக்கபூர்வமான எந்தத் திட்டங்களும் இல்லை.

வன்னிப் பிரதேச மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினராகி மீள்குடியேற்ற அமைச்சராக இருந்து, இம்மக்களின் மீள்குடியேற்றத்தில் போதிய அக்கறை காட்டாதது வேதனை தருகிறது. அரியணையை தக்கவைக்கப் போராடியவர்கள் அரவணைத்தவர்களை அகழியில் வீழ்த்துவது நியாயமாகுமா?

அரசியல்வாதிகளை நம்பி இனிப் பயனில்லை என்று பட்டறிந்த இம்மக்கள் தாமாகவே களத்தில் இறங்கி தமது சொந்த இடங்களுக்குச் சென்று காணி, நிலங்களைச் சுத்தம் செய்ய ஆயத்தமாகும்போது அங்கேயும் இவர்களுக்கு நிர்க்கதியான நிலை கடந்த 25 வருடங்களாக இந்த மக்களின் சொத்துக்களை ஏகபோக உரிமையுடன் அனுபவித்து வந்தவர்கள், இவர்களின் மீள் வருகையைத் தொடர்ந்து கதிகலங்கிப் போய் அவற்றை தக்கவைத்துக் கொள்ள உரிமைப் போராட்டம் நடத்துகின்றனர்.

சிங்களப் பேரினவாதம் பேசி அப்பாவித் தமிழ் மக்களைத் தூண்டி வீதிக்கு விட்டவர்கள் தற்போது முஸ்லிம் இனவாதம் பேசி தமிழ் மக்களை மீண்டுமோர் இனப் பிரச்சினைக் குள் தள்ளிவிட்டு அரசியல் இலாபம் தேட முனைகின்றனர். எமது அழிந்துபோன ஆவணங்களைக் கேட்பவர்கள், ஏன்? தமது இறந்துபோன உறவுகளுக்கு ஆவணம் எடுக்க மறுக்கின்றனர். சமூகத்தின் வீரப் புருஷர்கள் என தங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்களின் துரோகத்தனத்தால் விரட்டப்பட்ட இம்மக்களை பரிதாபப்பட்டு வரவேற்க வேண்டியவர்களும் கூட இன்று எதிர்ப்புக் கோஷம் விடுக்கின்றனர்; மிரட்டுகின்றனர்.

இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு, மெக்ஸ்வல் பரணகம ஆணைக்குழு மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றின் பரிந்துரைகளில் கூட வட மாகாண முஸ்லிம்கள் மறக்கடிக்கப்பட்டமை வேதனைக்குரிய விடயமாகும். தனிப்பட்டவர்களின் கொலைக்குத் தீர்வு சொன்னவர்கள் அப்பட்டமான ஓர் இனச் சுத்திகரிப்பு நடந்தேறியதை அறியாதிருப்பது வெறும் வேடிக்கையாகும்.

இது விடயத்தில் முஸ்லிம் தலைமைகள் இன்னமும் மௌனம் காப்பது இம்மக்களுக்குச் செய்கின்ற பெரும் அநியாயமும் துரோக முமாகும்.

வட மாகாண முஸ்லிம்களின் தீர்க்கப்படாத மீள்குடியேற்றப் பிரச்சினைக்கு பாராளுமன்றத்தில் இருக்கும் 21 முஸ்லிம் உறுப்பினர்களும் பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளவர் என்பதை அவர்கள் மறந்து விட முடியாது.

25 வருடங்கள் கடந்தும் அகதி வாழ்க்கை வாழும்; தமது தாயக மண்ணுக்காக, சுதந்திர இருப்புக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் தாய்மாருக்கும் விதவைகளுக்கும் அங்கவீனர்களுக்கும் வயோதிபர்களுக்கும் இளைஞர்களுக்கும் சின்னஞ் சிறார் களுக்கும் இன்றைய நல்லாட்சி அரசாங்கம் தகுந்த தீர்வு வழங்க முன்வருமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம்

மலர்: 14 இதழ்: 21 நவம்பர் 01 - 14

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: ENGALTHESAMNEWS@GMAIL.COM

# மக்களிடம் உறுதியான நிலைப்பாடு வேண்டும்

இப்போதெல்லாம் ஊடகத்தைத் திறந்தாலே குற்றச் செயல்கள்தான் முன்னால் வந்து நிற்கின்ற நிலை காணப்படுகிறது. பத்திரிகைகளும் தொலைக் காட்சியும் சமூக ஊடகங்களும் குற்றம் நடைபெறுவது பற்றியோ, அதற்கு வகைகூற வேண்டியவர்கள் பற்றியோ கவலைப்படாமல், யார் இதனைச் சொல்வதில் முந்திக் கொள்வது, புகைப்பட விளக்கத்துடனான செய்தியை யார் முதலில் வெளியிடுவது என்பதில் கண்ணும் கருத்துமாய் உள்ளன.

அண்மைக் காலத்தில் நாட்டில் எல்லோராலும் பேசப்பட்ட சேயா செதவ்மி அல்லது வித்யா கொலையுடன் தொடர்புபடுத்தி நோக்கினாலும் வித விதமான புகைப்படங்களைப் பிரசுரிப்பதிலும் பல ஊகங்களைச் சுவைபட எழுதி வாசகர்களைக் கவர்வதிலும் ஊடகங்கள் பெரிதும் ஆர்வம் காட்டியதைக் கண்டோம். சேயாவைக் கொலை செய்தவனைக் கண்டுப்பிடித்து தூக்கிலிட வேண்டும் என்ற கோஷங்களும் வானைப் பிளந்தன. கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் மட்டுமன்றி, வடக்கிலும் கிழக்கிலும் ஏனைய பட்டி தொட்டிகள் எங்கும் இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தக் கொடூரச் செயலைச் செய்தவன் தண்டிக்கப்பட வேண்டுமென்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

ஒரு கொலை நடந்துவிட்டால் அதனால் நேரடியாகப் பாதிக்கப்படுவது, இழப்புக்களைச் சந்திப்பது அந்தக் குடும்பம்தான். ஏனையவர்கள் ஏதோ இரண்டொரு நாட்களுடன் மறந்து விடுவார்கள். ஆனால், நாட்டில் நடைபெறும் வேறு பல சம்பவங்கள் இதுபோன்று தனி மனிதனுடன் அல்லது ஒரு குடும்பத்துடன் முடிவடைவதல்ல. போதைப்பொருள் கடத்தல் என்பது முழுச் சமூகத்தையே குறிப்பாக, இந்த நாட்டு இளைஞர்களை முடமாக்கும் ஒரு கொடூரச் செயல். பல நூறு கிலோக்கள் பிடிபட்டாலும் அது குறித்து பொதுமக்கள் களமிறங்குவதைக் காண முடியாது.

உல்லாசப் பிரயாணிகளைக் குறிவைத்து பாலிய வன்முறையிலும் கொலையிலும் ஈடுபட்ட அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் இத்தகைய மக்கள் முன்னெடுப்புகளைக் காண முடியாதுள்ளது. பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஆயுதங்களைக் காட்டுவதற்கென்று அழைத்துச் சென்று, அவர்களாகவே கொலையுண்டதாகக் காட்டப்படும் கபட நாடகங்களுக்கு எதிராகவும் மக்கள் வீதியில் இறங்கவில்லை.

இது இவ்வாறிருக்க, அண்மையில் இலங்கையில் மட்டுமன்றி ஆசியாவிலேயே மிகப் பெரிய தொகை இலஞ்சம் பெற்ற விடயம் கையும் மெய்யுமாக பிடிபட்டுள்ளது. இதில் ஈடுபட்டவர்கள் சாதாரண போக்குவரத்துப் பொலிஸாரோ, வைத்தியசாலைகளின் காவற்காரர்களோ அல்ல. அவர்கள் கொழுத்த சம்பளம், தீர்வையற்ற வாகனச் சலுகைகள், கமிஷன் என பல சலுகைகள் கிடைக்கும் பெரிய அதிகாரிகளே. அதுவும் இலஞ்சமாகப் பெற்ற தொகை இந்த நாட்டு மக்களுக்குச் சேர வேண்டிய வரிப் பணம். ஒரு நாட்டின் பொருளாதாரத்தையே நாசமாக்கக் கூடிய இத்தகைய இலஞ்சம் மற்றும் ஊழல்களுக்கு எதிராக பத்திரிகைகளும் பெரிதாக எழுதவில்லை. சமூக வலைத்தளத்துக்கும் அது பெரிய செய்தியல்ல. சில வேளைகளில் பெண்களின் அரை நிர்வாணப் புகைப்படங்களுடன் தொடர்புபட்டிருந்தால் போட்டிருப்பார்களோ! இதுபோன்ற இன்னும் பல நிகழ்வுகளைச் சுட்டிக் காட்ட முடியும்.

புத்திஜீவிகள், நாட்டு நடத்தைகளில் கரிசனையுள்ளவர்கள் எனப் பலர் இருந்தாலும் விஷயங்கள் நகரும் விதத்தைப் பார்க்கும்போது ஏதோ ஒரு குறை இருப்பதுபோல் தெரிகிறது. மக்கள் உண்மையில் குற்றச் செயல்களை ரசனையோடு பார்க்கிறார்களா, வெறுப்புடன் பார்க்கிறார்களா என்று விளங்கவில்லை. ஒரு தீமையைக் கண்டால் கையால் தடுக்கவும் அல்லது நாவினால் பேசித் தடுக்கவும் அல்லது மனதினால் வெறுத்து ஒதுக்கவும்; அதனை விடக் கீழாகப் போக வேண்டாம் என்ற ஹதீஸை நம்பும் நம்மவர்களது நிலையிலும் பெரிய மாற்றம் இல்லை. அநியாயமாக பலர் கைது செய்யப்படுவது பற்றி, கொலை செய்யப்படுவது பற்றி, நிரபராதிகள் தண்டிக்கப்படுவது பற்றி எவ்வித கரிசனையும் காட்டாதவர்களாகவே இவர்கள் காணப்படுகின்றனர்.

இந்த நாட்டை குற்றச் செயல்கள் குறைந்த, அமைதியான நாடாக மாற்ற வேண்டுமானால் மக்களின் இந்த அசமந்தப்போக்கு அகற்றப்பட வேண்டும். ஏனோதானோ என்ற மனப்பான்மை நீக்கப்பட வேண்டும். குறைந்தபட்சம் இது பற்றிய சிந்தனையாவது நம்மிடத்தில் வர வேண்டும்.

# தேசிய பங்களிப்பினூடாக நாட்டை வளப்படுத்துவோம்



முஸ்னத் அகமது ஷரிபுத்தீன்

சிறுபான்மைச் சமூகங்களில் தமிழ்ச் சமூகம் ஒரு நூற்றாண்டு கால தனித்துவ அரசியல் பாதையை கடந்துவிட்டது. முஸ்லிம் சமூகம் அண்ணளவாக அரை நூற்றாண்டு காலத்தை தனித்துவ அரசியல் பாதையில் நகர்த்தியிருக்கிறது. விளைவாக தம்மைச் சார்ந்து நிற்கும் சமூகங்களுக்கு இவை எதைக் கொடுத்தன என்ற கேள்விக்கு திருப்திகரமான பதில் கிடையாது.

ஒரு தேசத்துள் பல சமூகங்கள் வாழும்போது ஒவ்வொரு தேசிய சமூகத்தின் தனித்துவ அடையாளங்களும் சமத்துவமாக மதிக்கப்படல் வேண்டும். தமது மொழி, கலாசாரம், சமயம், பண்பாடுகள், வழக்காறுகள் இழிவுபடுத்தப்படும்போது அல்லது இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படும்போது உணர்வுகளில் ஏற்படும் கொந்தளிப்பு வேகமானது எல்லா சமூகத்தவர்களுக்கும் பொதுவானது. அதிலும், தெற்காசிய நாடுகளில் கலாசாரம் பண்பாடுகள் மீதான மக்களின் மோகம் என்பது உலகில் வேறெங்கும் காண முடியாத அளவு கூடுதலானது. அந்த வகையில் பல்லாயிரக்கணக்கான உயிர்களையும் உடைமைகளையும் இரு தலைமுறைகளின் நிம்மதியான வாழ்க்கையையும் தொலைத்துவிட்டாலும் தமது சமூகத்தின் தனித்துவப் பண்புகளின் உரிய அங்கீகாரத்துக்கான போராட்டத்தை உரிய தளத்திற்குக் கொண்டு வருவதற்கான அரசியலை சிறுபான்மைச் சமூகங்கள் செய்திருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

பெரும்பான்மைச் சமூகங்கள் சிறுபான்மைச் சமூகங்களை சந்தேகக் கண் கொண்டு நோக்கும்போது தேசியவாதம் பின்தள்ளப்படும்; இனவாதம் உள்நாட்டு மோதலாக மாறும். அனைத்து சமூகங்களினதும் இயல்பு வாழ்க்கை சீரழியும். தேசிய அபிவிருத்தி நலிவடையும். சர்வதேச அரசியலின் நவகாலனித்துவத்துக்குள் அத்தேசம் சிறைப் பிடிக்கப்படும். இன்று எமது இலங்கைத் தேசம் இந்த இடத்தில்தான் இருக்கிறது.

நிலைமை நல்லதாக மாற வேண்டுமென்ற தேவை எல்லாத் தரப்பினருக்கும் இருக்கின்றது. ஆனால், அதற்கான பாதையில் சேர்ந்து பயணிக்க இதுவரை முடியவில்லை அல்லது தெரியவில்லை. முதலில் இது கலாசார மாற்றம் சார்ந்த விடயம் என்பதனை ஏற்றுக் கொண்டாக வேண்டும். சமமான பிரஜைகள்-சமமான இடம் என்பது ஆட்சித்துறைத் தத்துவமாக மாத்திரமல்லாமல், அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு பிரஜையின் வேதமாகவும் அனுஷ்டிக்கப்பட வேண்டும். அரசியல் கட்சிகள் தாம் சார்ந்த சமூகக் குழுக்கள் மத்தியில் இதனை ஊட்ட வேண்டும். பொது நிர்வாகப் பகுதியுள் அடங்கும் ஆளணித் தொகுதியினர் தமது அரச பணியினை அரசியல் பணியாக மாற்றிவிடாதிருக்க இக்கலாசாரத்துக்குப் பயிற்றுவிக்கப்பட வேண்டும். ஓராதியின் மூலம் இலாபமடைவதை பெரும் பாவமாக உணரும் கலாசாரம் அனைத்து சமூகங்களிடமும் இருக்க வேண்டும். இது தான் நிரந்தரத் தீர்வுக்கான பாதை என்பதனை அனைத்துத் தரப்பினரும் மக்களும் புரிந்து செயற்பட்டால் அழகிய தீர்வு வெகு தொலைவில் இல்லை.

சிறுபான்மைச் சமூகங்களுக்கெதிரான அரசின் பாரபட்சங்கள் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றன. ஆரம்பம் தொட்டு சிறுபான்மையின் நியாயத்துக்கான போராட்டத்துக்கும் நீண்ட வரலாறு இருக்கின்றது. அதன் இறுதிக் கட்டம் பேரிழப்புகள் நிறைந்தது.



அரசுக்கெதிரான நேரடி ஆயுத மோதலில் ஈடுபடாத முஸ்லிம் சமூகமும் இரு முனைத் தாக்குதல்களை எதிர்கொண்டிருக்கிறது பலத்தையும் இழந்திருக்கின்றது. இவற்றை எல்லாம் கணக்குப் பார்த்து நஷ்டயீடு கேட்க முடியாது. அதை விட எதிர் காலத்தை மனிதத்துவம் நிறைந்ததாக, மானுடவாதம் பாதுகாக்கப்படுவதாக மாற்றியமைப்பது என்பது பற்றி சிந்திப்பதே சிறந்தது. கடந்த காலத்தை அதற்கான ஆய்வுகூடமாகக் கொள்ள முடியும். சரியான திசையில் நகர்வதற்குக் கிடைத்த அனுபவமாகக் கருத முடியும். முடிந்து போனவற்றால் பயன் எதுவும் கிடைக்காது.

இந்த விடயத்தில் தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் இன முரண்பாட்டு அரசியலில் இப்போதைய நகர்வினை மீள்வாசிப்புச் செய்தாக வேண்டும். அரசாங்கத் தரப்பு அல்லது சிங்களத் தரப்பும் பெரும்பான்மை இனத்தின் பெருந்தன்மையை வெளிப்படையாகக் காட்ட முன்வர வேண்டும். மற்றொரு முக்கிய தரப்பாக இன முரண்பாட்டு அரசியலில் தொடர்புபட்ட முஸ்லிம் சமூகம் தேசிய அரசியல் ஓட்டத்தை புரிந்து கொள்ளாமல் உட்சமூக அரசியலில் கவனம் கலைந்து கிடப்பதை விடுத்து அவசர அவசரமாக தேசிய அரசியலில் கூடுதலான, காத்திரமான பங்கு பற்றுதலை உறுதிப்படுத்த வேண்டும்.

தரப்புக்கள் பரஸ்பர நம்பிக்கையின்னையும் நல்லுறவினையும் கட்டியெழுப்பி அனைவருக்குமான ஒரே தீர்வினை அரசியலமைப்புச் சட்டத்தினூடாக நிறுவிக் கொள்ள வேண்டும். அத்தகைய அரசியலமைப்பினை பாதுகாக்கும் தத்துவத்தை சுயாதீன நீதித் துறையிடம் முழுமையாக ஒப்படைக்க வேண்டும்.

➡ 16

எங்கள் தேசம் சந்தா விபரம்

உள்நாடு
தனிப்பிரதி: 30.00
வருட சந்தா: 1200.00
ஆறு மாதங்கள்: 600.00

வெளிநாடு
இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்: 3600.00
மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00
அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00
இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09.
Accont Name: SLJEI | Bank Account No. BOC: 372132 | Commercial Bank: 1320009182


தொடர்புகளுக்கு: 077 2992220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிர்வாக பயங்கரவாதத்தின் அதிஉச்ச புறக்கணிப்பு

# மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளப்படுமா?

அப்துல்லாஹ் ஹாஜி
வாழைச்சேனை




மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பிரதேசங்களிலும் முஸ்லிம்கள் பரந்து வாழ்ந்தனர். கல்வி, கலாசாரம், பொருளாதாரம், அரசியல், பண்பாட்டு அம்சங்கள் என்பன தமிழ் -முஸ்லிம் நல்லுறவைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்தவை. இனம், மதம், பிரதேச வேறுபாடுகளுக்கப்பால் புரிந்துணர்வுச் சூழலில் இம்மக்கள் வாழ்ந்து வந்ததால் விவசாயம், மீன்பிடி மற்றும் உற்பத்திப் பொருளாதாரத்தில் தன்னிறைவு கொண்ட பிராந்தியமாக அன்று மட்டக்களப்பு மாவட்டம் விளங்கியது.

வட கிழக்கில் கூர்மையடைந்த பயங்கரவாதப் போராட்டம் மட்டக்களப்பு மாவட்ட இனங்களிடையே நல்லுறவை சீர்குலைத்தது. முஸ்லிம்களின் உயிர், உடைமைகள் சூறையாடப்பட்டன. பாரம்பரிய இடங்களிலிருந்து விரட்டப்பட்டதுடன் குறுகிய நிலப் பரப்பிற்குள் அவர்களின் வாழ்விடங்கள் மட்டுப்படுத்தப்பட்டன. இதன் மூலம் பாரிய பொருளாதார இழப்புகளும் நாளாந்த ஜீவனோபாய பிரச்சினைகளும் இம்மாவட்ட முஸ்லிம் மக்களுக்கு ஏற்படத் தொடங்கின.

மறுபக்கம், நிருவாக ரீதியான இன ஒடுக்குமுறை நிருவாகத் துறையில் திட்டமிட்ட அடிப்படையில் இடம்பெற்று வந்தது. முஸ்லிம்களது இருப்புகள் ஆயுத பயங்கரவாதத்தால் அபகரிக்கப்பட்ட அதே சமயம், நிருவாகப் பயங்கரவாதம் இவர்களது சட்டபூர்வ காணி உரிமைகளை வலுவிழக்கச் செய்வதில் மிகவும் கச்சிதமாக தொழிற்பட்டது. இம்மாவட்டத்தில் சுமார் 62 குடியிருப்புகளிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் தொடர்பான பதிவாவணங்கள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் முறையாகப் பேணப்படவில்லை. இதனால் தான், முஸ்லிம்கள் இடம்பெயர்ந்த ஓரிரு கிராமங்களைத் தவிர ஏனைய கிராமங்கள் மட்டக்களப்பு மாவட்டதில் மீள்குடியேற்றக் கிராமங்களாக அங்கீகரிக்கப்படாதிருப்பதற்கு பிரதான காரணமாகும்.

இவை தவிர, பல இடங்களிலும் இம்மாவட்ட முஸ்லிம்களது விவசாய, குடியிருப்பு பிரதேசங்களின் எல்லைகள் நீதமற்ற முறையில் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் சட்டபூர்வ உரிமங்கள் அழிக்கப்பட்டன. மேலும், காணி தொடர்பான எந்தப் பிரச்சினையும் உடனுக்குடன் கவனத்திற் கொள்ளப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்பட்டது. கல்குடாத் தொகுதியிலுள்ள தொன்மை வாய்ந்த வாழைச்சேனை கிராமம் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சொந்தமானதாகும். இருந்தபோதும், வாழைச்சேனை பிரதான வீதியை அண்மித்ததாகவும் வாழைச்சேனை, மாவடிச்சேனை ஆகிய முஸ்லிம் அயற் கிராமங்களின் எல்லைகளுக்கு உட்பட்டதுமான தள வைத்திய சாலை, புகையிரத நிலையம், பொலிஸ் நிலையம், நீதிமன்றம், மின்சார அத்தியட்சகர் அலுவலகம், மிருக வைத்தியசாலை போன்ற அரச நிறுவனங்கள் முஸ்லிம் பிரதேசத்துக்குள் அமைந்திருந்த ஒரே காரணத்திற்காக எவ்வித அடிப்படையுமின்றி முஸ்லிம் குடியிருப்புகளை ஊடறுத்து, பொருத்தமற்ற முறையில் எல்லைகள் துண்டாடப்பட்டு, தற்போதும் வாழைச்சேனை தமிழ்ப் பிரதேச செயலகத்தால் அவை நிருவகிக்கப்படுவதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

அவ்வாறே, மட்டக்களப்பு மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு சுமார் 2633.1 ச.கி. மீற்றராகும். இம்மாவட்டத்தின் தற்போதைய 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் காத்தான்குடி, ஏறாவூர் பட்டினம், கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி), கோறளைப்பற்று மத்தி (வாழைச்சேனை) என்பன முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேச நிருவாகப் பிரிவுகளாகும்.

இம்மாவட்டத்தின் மொத்த சனத்தொகை தற்போதைய கணக்கெடுப்பின்படி 581223 ஆகும். இதில், முஸ்லிம்கள் சுமார் 153186 ஆக உள்ளர். இது மொத்த சனத்தொகையில் 26.35 வீதம்.இவற்றில், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் மேற்படி நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமுள்ள தற்போதைய காணியின் மொத்தப் பரப்பளவு சுமார் 35 ச.கி. மீற்றராகும். அதாவது, மாவட்ட மொத்த நிலப்பரப்பில் 26.35 சத வீதமான சுமார் 680 ச.கி. மீற்றர் நிலப் பரப்பிற்கு முஸ்லிம்கள் உரித்துடையவர்களாக இருந்தும் தற்போது 1.32 வீதமான சுமார் 35 ச.கி. மீற்றர் பரப்பளவு நிலமே இந்நான்கு செயலக நிருவாகங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த விபரங்கள் 1985, 1990 ஆம் ஆண்டுகளுக்குப் பின் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் வாழ்விடங்களும் விவசாயக் காணிகளும் பாதுகாப்பற்ற சூழ்நிலையால் இழைக்கப்பட்டு, அம்மக்கள் அனுபவிக்கும் காணித் தேவைக்கான நெருக்கடி நிலைமையை தெளிவாகக் காட்டுகின்றன.

இப்பிரதேச மக்கள் தமக்கு ஏற்பட்ட இடப்பெயர்வு, புறக்கணிப்பு, பொருளாதார இழப்பு எல்லாவற்றுக்கும் மூல காரணம் தங்களுக்கென தனியான அலகின்றி அநாதரவாக விடப்பட்டதே என்பதை தெளிவாக உணர்ந்திருந்தார்கள். இதனால் இவர்கள் கோறளைப்பற்று (வாழைச்சேனை), கோறளைப்பற்று வடக்கு (வாகரை) ஆகிய பிரதேசங்களில் தங்களது குடியிருப்பு காணிகளையும் தாம் இடம்பெயர்ந்ததால் இழந்த பாரம்பரிய விவசாய குடியேற்ற நிலங்களையும் தமது தொழில்களையும் பேணும் வகையில் 'நில ரீதியாக ஒன்றிணைந்த கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம்' எனும் புதிய நிருவாக அலகைக் கோரி பல வருடங்களாக அமைதி வழியில் போராடி வந்தனர்.

இதன் விளைவாக, 1998 ஆம் ஆண்டு உள்ளூராட்சி நிருவாக எல்லைகளை மறுசீரமைப்பது மற்றும் புதிய செயலகங்களை உருவாக்குவதற்கென அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட திரு. பலம்பலான ஆணைக் குழு செய்த சிபாரிசுக்கு அமையவும் 26. 12.2000 ஆம் திகதி அமைச்சரவை வழங்கிய அங்கீகாரத்திற்கு அமையவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 'கோறளைப்பற்று மத்தி' என்ற பிரதேச அலகினை முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட செயலகமாகவும் தமிழ் மக்களின் கோரிக்கையான 'கோறளைப்பற்று தெற்கு' என்றொரு செயலகத்தை தமிழ் மக்களுக்காகவும் உருவாக்கப்பட்டன. இவ்வுருவாக்கத்தின் போது கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) பிரதேச செயலக நிருவாகத்திற்கு உட்பட்ட ஐந்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் கோறளைப்பற்று தெற்கு (தமிழ் பிரதேசம்) செயலகப் பிரிவில் இணைக்கப்பட்டமை மாவட்ட மட்டத்தில் நடந்த எதுவித காரணமுமற்ற திட்டமிட்ட நில அபகரிப்புச் செயலாகும்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்டும் அதேவேளை, அரச ஆணைக் குழு சிபாரிசுடன் அமைச்சரவை அங்கீகரித்த 11 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய 240 ச.கி.மீ. பரப்பளவை நில அளவை செய்து எல்லையிட்டு அனுப்பி வைக்குமாறு மாவட்ட செயலகத்தை உள்நாட்டு அமைச்சு பணிப்புரை வழங்கியிருந்தும், 9 கிராம உத்தியோத்தர் பிரிவுகளைக் கொண்டே இச்செயலகம் இயங்க வேண்டும் என்ற உத்தரவை மாவட்ட அரசாங்க அலுவலகத்தால் வழங்கப்பட்டு இன்று வரை அவ்வாறே நடைமுறையில் செயற்படுத்தியும் வருகிறது. அமைச்சரவை அங்கீகரித்த 211 H. 211 B. மற்றும் 211 G/2 ஆகிய மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் முறையாக மத்தி செயலகத்திற்கு இன்று வரை கையளிக்கப்படவில்லை.

ஆயினும், மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகம் அமைச்சரவைத்தீர்மானத்தை ஏற்று முன்னைய 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை 2002 ஆம் ஆண்டின் கல்குடா தொகுதி தேர்தல் வாக்காளர் இடாப்பில் இடம்பெறச் செய்திருந்தும், 2004 ஆம் ஆண்டு மாவட்ட செயலக நிருவாகம் அதனை நீக்கியுள்ளதுடன் 211 H ரிதிதென்ன கிராம உத்தியோகத்தர் பிரிவையும் இல்லாமல் செய்து, அப்பிரிவில் உள்ளடக்கப்பட்டிருந்த கிராமங்களுக்கு 211 B புனானை கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் இலக்கம் கொடுக்கப்பட்டு இணைத்துள்ளது.

இப்படி, பல்வேறு நிருவாக ரீதியான நெருக்கடிகளுக்கும் நிருவாக அதிகார மறுப்புக்கு மத்தியிலும் கோறளைப்பற்று மத்தி செயலகம் இயங்கி வருகிறது.

15 வருடங்களுக்கு மேலாக முறையான அங்கீகாரத்துடன் இச்செயலகத்திற்கென குறித்தொதுக்கப்பட்ட நிலப் பரப்பை வர்த்தமானி அறிவித்தல் விடுக்க நில அளவை செய்து அனுப்பி வைக்கும்படி, உள்நாட்டு அமைச்சு எழுத்து மூலமாக மாவட்ட செயலகத்தைப் பணித்திருந்தும் இதுகால வரை நில அளவை செய்ய நடவடிக்கை எடுக்காமலிருப்பது இம்மாவட்ட முஸ்லிம் சமூகத்திற்குச் செய்துள்ள நிருவாகப் பயங்கரவாதத்தின் அதிஉச்சப் புறக்கணிப்பாகும்.

இச்செயலக நிலப் பரப்பானது இப்பிதேசத்திற்கு மாத்திரமல்லாது, மாவட்ட முஸ்லிம்களுக்குமுள்ள நிலப் பற்றாக்குறையின் ஒரு சிறு பகுதியையாவது பூர்த்தி செய்ய உதவும். ஆனால், மனிதாபிமானமற்ற, நியாயமற்ற இச்செயலினால் இம்மாவட்டத்தில் வாழும் மற்றுமொரு சிறுபான்மை இனமான முஸ்லிம்களை மிகக் குறுகிய நிலப் பரப்பிற்குள் சிறைப்படுத்தி திணறடிக்கச் செய்யும் அடக்கு முறையை என்னவென்று சொல்வது?

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக எல்லை அளவீடு தாமதப்படுத்தப்படுவதால் இம்மாவட்ட முஸ்லிம்கள் பல்வேறுபட்ட காணி மற்றும் நிருவாக ரீதியான பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

சுமார் 15 வருடங்களுக்கு முன் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட குறித்த 240 ச.கி. மீற்றர் பரப்பளவை நில அளவை செய்து எல்லையிட்டு வர்த்தமானி அறிவித்தல் செய்யாததன் காரணமாக குறித்தொதுக்கப்பட்ட பிரதேசத்தை முழுமையாக நிருவகிக்கத் தடையாக உள்ளது. இதன் காரணமாக தற்போது குடியிருப்புக்கும் அபிவிருத்திக்குமான காணிப் பற்றாக்குறை, காணிகளுக்கான அபரிமிதமான விலையேற்றம், சுற்றாடல் பாதிப்பு, வாழ்வியல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் என்பன எல்லை மீறி அதிகரித்துள்ளன. இப்பிதேசத்திலிருந்து வன்செயல் காரணமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளையோ, இப்பிரதேச முன்னெடுப்புகளையோ மேற்கொள்ளத் தடையாகயுள்ளது.

முஸ்லிம்கள் பலருடைய பூர்வீகக் காணிகளின் உரிமங்கள் இடப்பெயர்வின் போது காணாமல் போயுள்ளன. அவற்றைப் பெற்றுக் கொள்வதில் ஏற்படும் நிருவாகத் தடைகள்.

இப்பிரதேச முஸ்லிம்களுக்கு 1956, 1962, 1967 காலப் பகுதிகளில் மாவட்ட காணித் திணைக்கள அதிகாரியினால் வழங்கப்பட்ட காணி உத்தரவுப் பத்திரங்களுக்கு 1983 ஆண்டு உறுதி வழங்குவதற்காக உரிய பத்திரங்களைப் பெற்று, அதற்கான செலவுத் தொகையாக ரூபா 250 அறவீடு செய்து பற்றுச் சீட்டுகளும் வழங்கப்பட்டன.

➡ 16

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்பு தெருவோரச் சிறார்கள்: கேள்விக்குறியாகும் இளம் தளிர்களின் எதிர்காலம்



கொழும்பில் தொழில் புரியும் நான் மாதம் ஒருமுறை எனது சொந்த ஊரான சாய்ந்தமருதுக்குச் செல்வது வழக்கம். அன்றிரவு 7.30 மணியளவில் தனியார் பஸ்ஸை எதிர்நோக்கி கொழும்பு டெக்னிக்கல் சந்திக்கு விரைந்தேன். இரண்டு சிறுவர்கள் அங்கிருந்தவர்களிடம் தமக்கு சாப்பாடு வாங்கித் தருமாறு சைகை மூலம் வெளிக் காட்டி நின்றிருந்தார்கள். பரட்டைத் தலையும் கிழிந்த ஆடைகளுடனும் நின்றிருந்த அந்த சிறார்களுக்கு சிலர் பணம் கொடுத்தனர். இன்னும் சிலர் புறமுதுகு காட்டினர்.

இந்தச் சிறார்கள் போன்று பலர் அங்கு வந்து பிச்சை கேட்பது வழக்கம். ஆனாலும், இந்தச் சிறார்களின் நிலைமை கண்டபோது, இது விதியா அல்லது சதியா என்ற கேள்வி என்னுள் தோன்றியது.

இன்று, முழு உலகிலுமே வியாபித்து விஸ்வரூபம் எடுத்து நிற்கும் பிரச்சினைகளுள் ஒன்று வீதியோரச் சிறுவர்கள் பற்றியது. தான் தெரிந்தோ, தெரியாமலோ இது போன்ற சந்ததி ஒன்று தனது எதிர்காலத்தைத் தொலைத்து வீதியில் நிற்கத் தலைப்பட்டு விட்டது. இத்தகைய நிலை அதிகரித்துச் சென்றால், உலகின் முழு எதிர்காலமும் தலைகீழாக மாறிவிடும் அபாயம் ஏற்படலாம்.

சிறுவர்களுக்கான உரிமைகளும் இருக்கின்றன. பல்வேறு வயதெல்லைகளைச் சேர்ந்த சிறார்கள் தமக்குத் தேவையான ஆதரவும் அரவணைப்பும் கிடைக்காததால் வீதிகளையே தமது வாழ்விடமாக்கிக் கொண்டிருக்கின்றனர். அத்தகையவர்களை ஆதரவற்ற சிறார்கள், வீதியோரச் சிறார்கள் எனப் பாகுபடுத்திப் பார்க்கிறது இன்றைய உலகம். சமூக ரீதியாக அங்கீகரிக்கப்படாத, தவிர்க்கப்பட்ட ஒரு குழுவாகவே இந்த வீதியோரச் சிறார்கள் பார்க்கப்படுகிறார்கள்.

உலகில் 100 மில்லியனுக்கும் அதிகமான வீதியோரச் சிறுவர்கள் இருப்பதாக ஐ.நா. அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இலங்கையில் 5-14 வயதுக்குட்பட்ட 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீதியோரச் சிறுவர்கள் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நீடித்த யுத்தம் மற்றும் குடும்ப வறுமை போன்ற காரணிகளே இலங்கையில் வீதியோரச் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க பிரதான காரணிகளாக விளங்குகின்றன. எமது நாட்டைப் பொறுத்தவரை பிரதான நகரங்களை மையமாகக் கொண்டே இந்த வீதியோரச் சிறுவர்கள் காணப்படுகின்றனர். அதிலும், தலைநகரான கொழும்பிலேயே அதிகளவில் காணப்படுகின்றனர்.

**ஏ. முஹம்மத் பாயிஸ்**

கொழும்பு புறக்கோட்டை, கொம்பனித் தெரு, மருதானை போன்ற இடங்களில் இவர்களை அதிகம் காண முடிகிறது. இவர்களில் சிலருக்கு வீதியும் கடை விறாந்தைகளுமே முற்று முழுதான உறைவிடங்கள். இன்னுமொரு சாரார் குடும்பத்துடன் ஓரளவு தொடர்புடையவர்கள்; ஆனால் தெருவோரங்களில் காலம் கடத்துபவர்கள். இந்த இரண்டு சாராரில் முதற் பிரிவினரே மிகவும் பின்தள்ளப்பட்டுக் காணப்படுகின்றனர். அவர்களது முழு அன்றாட நடவடிக்கைகளும் (உண்ணுதல், உறங்குதல், மலம் கழித்தல், சம்பாதித்தல்) வீதியிலேயே கழிகின்றன.

## இன்றைய வீதிச் சிறுவர்கள் நாளை பெரியவர்களாக மாறுகின்றபோது அவர்களது எதிர்காலம் என்னவாகும்? எப்படி அமையும்? இன்று, சிறு சிறு சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் இவர்கள் நாளை பெரியவர்களாக மாறி எத்தகைய பாதகச் செயல்களில் ஈடுபடுவார்கள் என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாதுள்ளது.

இரண்டாவது சாரார் தனது குடும்பத்தால் போதியளவு பராமரிப்பின்றி கைவிடப்பட்டவர்கள். வறுமையும் வாழ்வதற்கு வீடு இல்லாததும் இவர்களின் தெருவோர வாழ்வுக்கு காரணங்களாகும்.

தெருவோரச் சிறார்கள் வேறுபட்ட பல காரணங்களால் இந்நிலைமைக்கு ஆளாகின்றனர். 40 வீதத்துக்கும் அதிகமானோர் தமது குடும்பத்தவர்களினாலேயே இந்நிலைமைக்கு மாறுகின்றனர். பொதுவாக, தந்தை போதைவஸ்துக்கு அடிமையாதல், விவாகரத்து, குடும்ப வறுமை காரணமாக சிறுவர்கள் கைவிடப்படுகின்றனர். மேலும், சட்டவிரோத கருத்தரிப்பு, நோய், பெற்றோரின்மை போன்றவையும் தெருவோரச் சிறார்கள் உருவாகுவதற்கு காரணங்களாக அமைகின்றன.

இவர்களது வருமான மார்க்கமாக பிச்சை எடுப்பது பிரதானமாகும். மூட்டை சுமத்தல், நடைபாதை வியாபாரத் தளங்களில் வேலை செய்தல், போதைப்பொருள் விற்பனை செய்தல், பாலியல் தரகர்களாக ஈடுபடல் போன்றவையும் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்தோடு, சிறு களவு, போதைவஸ்துப் பாவனை போன்ற சமூக விரோதச் செயற்பாடுகளிலும் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

இலங்கையில் சுமார் ஓர் இலட்சத்திற்கும் அதிகமான சிறுவர் தொழிலாளர்கள் காணப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிக்கின்றது. மேலும், வீதியோர சிறார்களைத் தொழிலுக்கு பயன்படுத்துபவர்கள் தொடர்பில் தகவல்கள் தெரிந்தால், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 1929 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத் தருமாறு பொதுமக்களிடம் அதிகார சபையினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தண்டனைச் சட்டக் கோவையின் பிரகாரம் 18 வயதிற்கு குறைந்தவர்கள் சிறுவராக கருதப்படுவதுடன், சிறுவர் மற்றும் இளையோர் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 16 வயதிற்கு குறைந்தவர்களும் சிறுவர்களாக கருதப்படுகின்றனர். எவ்வாறாயினும், இச்சட்டத்தின் பிரகாரம் 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இலங்கை அரசு வீதியோரச் சிறுவர்கள் உட்பட சகல சிறுவர்களையும் கவனத்தில் கொண்டு, 1991 ஆம் ஆண்டு ஐ.நா. சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் கைச்சாத்திட்டதுடன் 1998 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு சட்டத்தைக் கொண்டு வந்தது. ஆனாலும், அதிகரித்துச் செல்லும் வீதியோரச் சிறுவர்களின் எண்ணிக்கையை அரசினாலோ அல்லது பொது அமைப்புகளினாலோ கட்டுப்படுத்த முடியாத நிலைமையே தொடர்ந்தும் காணப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் வீதியோரச் சிறுவர்களைக் கட்டுப்படுத்துவதற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றபோதும் அவற்றில் காணப்படும் தொய்வு நிலைமைகளால் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாதுள்ளது.

கொழும்பு போன்ற நகரப் புறங்களில் காணப்படும் வீதியோரச் சிறுவர்களைப் பிடித்து சிறுவர் இல்லங்களில் சேர்க்கும் நடவடிக்கைகள் 2008 ஆம் ஆண்டு அரசினால் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம், வீதியோரச் சிறுவர்களாக அலைந்து திரியும் 5 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களைத் தேடிப் பிடித்து சிறுவர் இல்லங்களில் ஒப்படைத்து, அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் வழங்கி கல்வி அறிவைப் புகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தினாலும் பிரதேச பொலிஸ் நிலையங்களினூடாகவும் ஆரம்பிக்கப்பட்ட இ[illegible] நடவடிக்கை மூலம் சிறுதொகையான சிறுவர்களே பிடிக்கப்பட்டு அவர்கள் சிறுவர் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், தற்போது அந்நடவடிக்கை கைவிடப்பட்டுக் காணாமல் போயுள்ளது.

இன்றைய வீதிச் சிறுவர்கள் நாளை பெரியவர்களாக மாறுகின்றபோது அவர்களது எதிர்காலம் என்னவாகும்? எப்படி அமையும்? இன்று, சிறு சிறு சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் இவர்கள் நாளை பெரியவர்களாக மாறி எத்தகைய பாதகச் செயல்களில் ஈடுபடுவார்கள் என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாதுள்ளது.

வீதியோரச் சிறுவர்களை பலர் சட்டவிரோத நடவடிக்கைக்குப் பயன்படுத்துவதுடன் அவர்களாலோ அல்லது அவர்கள் மீதோ பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களும் அதிகளவில் இடம்பெறுவதாகக் கூறப்படும் நிலையில், இவ்வாறான சிறுவர்களைப் பாதுகாக்க அரசாங்கம் முன்னரை விடவும் முனைப்பாகவும் உறுதியாகவும் செயற்பட வேண்டும். இல்லாவிட்டால் இச்சிறுவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாவது மட்டுமன்றி, விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலைகளும் உருவாகிவிடும்.

எனவே, அரசாங்கம் இந்த வீதியோரச் சிறுவர்கள் விடயத்தில் காலம் தாமதியாது உரிய நடவடிக்கைகளை எடுத்து அவர்களின் எதிர்காலத்தை பாதுகாப்புமிக்கதாக மாற்ற உதவ வேண்டும். மட்டுமன்றி, இலங்கைப் பிரஜைகளான எம் ஒவ்வொருவரினதும் பொறுப்பும் கடமையும் என்பதை பொறுப்புடன் உணர்ந்து செயற்படுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்லாட்சி எண்ணக்கரு வெறும் கற்பனையாகுமா?



எம்.எச்.எம். ஹஸன்



ஜனநாயக சமூகத்தின் வெற்றி புத்தி ஜீவிகளான குடிமக்களிலேயே தங்கியுள்ளது. ஜனநாயக விழுமியங்கள், உரிமைகள், கூட்டு வாழ்வுக்கான பண்பாடுகளை அனுபவிக்கும் தகைமை அல்லது தேர்ச்சி ஆகியவை மக்களிடையே இல்லாதபோது அல்லது குறைவாக இருக்கும்போது இருபக்க எதிர்பார்ப்புகளும் வீணாகிவிடும் ஆபத்துள்ளது. ஐரோப்பிய சமூகத்தில் ஜனநாயகம் ஒரு வாழ்க்கை முறையாக வெற்றி நடை போடுவதற்கும் ஏனைய சமூகங்களில் அது தோல்வி காண்பதற்குமான பிரதான காரணி, ஜனநாயக விழுமியங்கள் பற்றிய சரியான புரிதல் இல்லாத குடிமக்கள் என்று பொதுவாகக் கூறலாம்.

இலங்கையின் தற்போதைய நிலையும் இதனை ஒத்ததாகத்தான் உள்ளது. இந்நாட்டில் உயர் சிந்தனையுள்ள ஜனநாயக விழுமியங்களை மதிக்கும் பலர் இருந்தாலும் தன்னிச்சையாக அடிமைத்தனத்தை ஏற்றுக் கொள்ளும் பலரும் இருப்பது தெரிகிறது. ஜனாதிபதி தனது பாரிய கட்டவுட்களை தெருவெங்கும் வைக்க வேண்டாம் என்று கேட்டாலும் அதையும் மீறி கட்டவுட் கலாசாரத்தை கடைப்பிடிப்பவர்களைக் காணலாம். வேறு பல அமைச்சர்களது பாரிய கட்டவுட்களும் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ளன. அவர்களைக் கேட்டால், அரசாங்கத்தின் செலவில் வைக்கப்படவில்லை என்றும் வர்த்தகக் கம்பனிகளின் அல்லது தனியார் அனுசரணையில் வைக்கப்பட்டதாகவும் கூறுவர். ஆனால், அந்தக் கம்பனிகளும் தனி மனிதர்களும் எந்த எதிர்கால எதிர்பார்ப்பும் இல்லாமலா இவ்வளவு பெரும் செலவில் கட்டவுட் வைப்பார்கள் நல்லாட்சி ஜனநாயகம் என்று தொண்டை கிழியப் பேசினாலும் அதனை நடைமுறைப் படுத்த விட மாட்டோம் என்று சிலர் முனைப்பாக இருப்பதைத்தான் இது காட்டுகிறது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சுயாதீன தொலைக்காட்சி சேவையில் ஒப்பந்தம் செய்து கொண்ட தொகையை மீறி மேலதிகமாக 11 கோடி ரூபா பெறுமதியான விளம்பரங்களை ஒளிபரப்புச் செய்த மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து அத்தொகையை மீட்டெடுக்கும் வகையில், ஊழல் குற்றச்சாட்டு விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டமை தெரிந்ததே. ஆனால், தெரியாத விடயம் ஒன்றுமுள்ளது. அதுதான், மஹிந்த ராஜபக்ஷ விசாரணைக்குப் போன இடத்தில் குதூகல வரவேற்புடன் உபசாரம் செய்யப்பட்டமையாகும். நாட்டில் நடைபெறும் வேறு குற்றச் செயற்பாடுகளின் போது இத்தகைய வரவேற்பு அளிக்கப்படுகின்றதா? மஹிந்த ராஜபக்ஷ அப்படியொரு வரவேற்பையும் உபசரிப்பையும் கேட்டாரா? வீணாகப் பாய்ந்து கொடுத்து தமது கண்ணியத்தையும் பாழ்படுத்திக் கொள்ளும் பணியை ஏன் இந்த விசாரணை அதிகாரிகள் செய்கின்றார்கள் என்று தெரியவில்லை. சிலவேளை, அடிபணிந்தே வாழ்ந்ததன் பழக்கதோஷமோ தெரியாது.

ஜனாதிபதித் தேர்தலின்போது முன்வைக்கப்பட்ட முக்கிய குற்றச்சாட்டுகளில் ஒன்று, ராஜபக்ஷ குடும்பம் பற்றியது. ராஜபக்ஷ முழுக் குடும்பமுமே இராஜபோகத்தை அனுபவிப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டது. இப்போது மைத்திரியின் ஆட்சியில் அந்தளவு போகாவிட்டாலும் அவரது மகளை பாடசாலைகளின் விழாக்களுக்கு பிரதம அதிதியாக அழைக்கத் தொடங்கியுள்ளனர். பழம் பெரும் ஆசிரியைகள், அதிபர், கல்விக் காரியாலயத்தின் அதிகாரிகள் புடை சூழ வரவேற்பளித்து அழைத்துச் செல்லும் காட்சி அண்மையில் கம்பஹாவின் பிரபல்யமான மகளிர் பாடசாலை ஒன்றில் நிகழ்ந்தது. தான் அரசியலுக்கு வந்து கால் நூற்றாண்டைக் கடந்தும் குடும்பத்தை அரசியலில் சேர்த்துக் கொள்ளவில்லை என்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஒரு சாதனையாகவும் தனித்துவமாகவும் பேசப்பட்டன. அதனைத் தொடர விட்டார்களா? ஆளாளுக்கு ஒவ்வொரு விதமாகச் செயற்பட்டு, விரும்பியோ விரும்பாமலோ ஜனாதிபதியின் குடும்பத்தை மீடியாக்களுக்குள் இழுக்கின்றோம் என்றுதானே பலரும் அடம்பிடிக்கிறார்கள்.

ஏற்கனவே ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபை கூட்டத் தொடருக்கு தனது மகனை அழைத்துச் சென்ற விடயமும் பேசு பொருளாகியுள்ள நிலையில், அவரது புகழுக்கு இழுக்கான விடயங்களாகவே இவை பார்க்கப்பட வேண்டும். இப்படித்தான் மஹிந்தவும் முதலில் தான் மட்டும்தான் வந்தார். பிரதமராகும்போது கைக்கும் காலுக்கும் ஆட்கள் இருக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் போட்டி போடும் போதுதான் அமெரிக்காவில் குடியுரிமை பெற்றிருந்த பஷிலும் கோதபாயவும் வந்தார்கள். டலஸ் அழகப்பெருமவும் அமெரிக்காவில் இருந்து வந்துதான் தேசியப் பட்டியலில் பாராளுமன்றம் சென்றார். பின்னர் படிப்படியாக நாமலும் மற்றவர்களும் அதிகாரம் செய்யத் தொடங்கினர். ரகர் விளையாட்டும் தொலைக் காட்சி விளையாட்டு அலைவரிசையும் கூட படிப்படியாகக் குடும்பச் சொத்தாக மாறின. இதிலே அவர்களது பக்கத்திலேயே குறைபாடு இருப்பது போன்று ஜனநாயக விழுமியங்கள் தெரியாமல் மன்னராட்சியாக நினைத்துக் கொண்டு இளவரசர்களாக்கி சேவகம் புரியவும் புகழாரம் சூடவும் ஏன்? சிலபோது முடிசூடவுமே செய்கிறார்கள் என்றால் பிழையல்ல.

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவைத் தோற்கடிக்கவெனக் களமிறங்கிய புத்தி ஜீவிகளிடையே புதிய ஆட்சி பற்றியோ, புதிதாக வரும் ஜனாதிபதி பற்றியோ பெரிய எதிர்பார்ப்புகள் இருக்கவில்லை. அவர்கள் வந்து, தேனும் பாலும் பெருகியோடச் செய்வார்கள் என்று நம்பவும் இல்லை. மஹிந்த தொடர்ந்து இருப்பது நாட்டுக்கு ஆபத்து; நாட்டின் ஜனநாயகத்துக்கு, மக்களுக்கு ஆபத்து வரும் என்றும் எந்த விலை கொடுத்தும் அதனை முறியடிக்க வேண்டும் என்றுதான் பலரும் களமிறங்கினர். சாதாரண பொதுமக்களைப் பொறுத்தமட்டில் மலிவு விலையில் பொருட்கள், கீழ் கட்டமைப்பு வசதி, ஊதிய அதிகரிப்பு என்ற நோக்கங்கள் இருந்திருக்கலாம்.


கட்டமைப்பு ரீதியாகப் பார்க்கும்போது புதிய அரசாங்கம் பலவற்றைச் சாதித்துள்ளமையை அறிய முடிகிறது. ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட்டு, அரசியல் அமைப்பு சபை அமைக்கப்பட்டு, 11 சுயாதீனக் குழுக்களும் ஸ்தாபிக்கப்பட்டு அரச நிர்வாகம் ஒளிவு மறைவற்றதாக, அரசியல் தலையீடு அற்றதாக மாற்றப்பட்டிருப்பது தெரிகிறது.

ஜனாதிபதியோ, பிரதமரோ அல்லது அமைச்சர்களோ பொலிஸாரின் கடமை விடயத்தில் தலையிடாதிருக்கும் போக்கு காணப்படுகிறது. அண்மைக் காலத்தில் பல எம்பிக்கள், மாகாண சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின் பிணை வழங்கப்பட்டதே தவிர, அவற்றில் அரசியல் தலையீடுகள் இருக்கவில்லை. அண்மையில், உயர் இராணுவ அதிகாரிகள் இருவரை தனக்கு அறிவிக்காமல் விசாரணைக்கு உட்படுத்தியமை கவலைக்குரியது என்று ஜனாதிபதி தெரிவித்தமை இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டும். ஜனாதிபதி இவற்றில் தலையிடுவதில்லை என்பதையே இது காட்டுகிறது. ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் சிலருக்கு எதிராகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இவை முன்னர் நாம் நினைத்தும் பார்க்க முடியாத நிலைமையாகும்.

தாம் வாக்களித்து தெரிவு செய்த எம்பிக்கள் தமக்கு சட்டத்துக்கு அப்பால் நின்று உதவி செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் அப்படி உதவாதபோது ஏசிப் பேசி விமர்சிப்பதும் ஜனநாயகமாகாது. ஆனால், எமது நாட்டு ஜனநாயகத்தில் அவை முக்கிய பகுதிகளாகவே கருதப்படுகின்றன. போதைவஸ்து கடத்தல்காரர்கள் பிடிபடுகிறார்கள். குற்றம் சாட்டப்பட்ட உயர் இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. அதற்காக நீதிபதிகள் தண்டிக்கப்படவோ, வெள்ளை வானில் கடத்தப்படவோ இல்லை. அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மூடு மந்திரமாக இல்லை. மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைகள், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் காணாமற் போனோர் தொடர்பான அறிக்கைகள் அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அன்றைய வெளிநாட்டமைச்சர் இவற்றை முன்னரே, ஜெனீவாவில் சமர்ப்பித்திருந்தால் தருஸ்மான் மர்சூக்கி தலைமையிலான குழுவின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் மஹிந்த இன்னும் ஜனாதிபதியாக இருந்திருப்பார். யுத்த வெற்றிக்குப் பிறகாவது மனித உரிமை காக்கும் விடயத்தில் கவனம் செலுத்தியிருப்பின் வீணாக இரண்டு வருடங்கள் முன்னதாகவே பதவியை இழந்துவிட்டு பின்வரிசை எம்பியாக இருந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

கோமின் தயாசிறி முன்னைய அரசுக்கு மிகவும் விசுவாசமான ஒரு சட்டத்தரணி. முன்னைய அரசாங்கத்தின் சார்பில் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குச் சென்றவர். சிராணி பண்டாரநாயக்க விடயத்தில் கூட மஹிந்தவின் கருத்துடன் ஒத்துப்போனவர். ஆனால், இன்று முன்னைய அரசாங்கம் மனித உரிமைகள் விடயத்தில் பாரிய தவறுகள் விட்டதையும் ரணில் விக்கிரமசிங்க சமயோசிதமாக சர்வதேசத்துடனும் இணைந்து நடக்கும் போக்கினால் இலங்கையை ஆபத்தில் இருந்து காப்பாற்றி இருப்பதாகவும் ஓர் அறிக்கையில் கூறியுள்ளார். அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூட உள்நாட்டு விசாரணைக்கு ஏன் வீணாகப் பயப்பட வேண்டும் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

➡ 14




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 3 க்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015

தொடர் 10



இஸ்மாயில் முஹம்மது அலி ஜின்னாஹ் (SLEAS)
(உதவிக் கல்விப் பணிப்பாளர் - திட்டமிடல்)

அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சையில் பாடசாலை நிர்வாகம் தொடர்பான சம்பவக் கற்கை வினாப் பத்திரத்துடன் தொடர்புடைய கல்வி நிர்வாக எண்ணக்கருக்களை எமது பத்திரிகையில் தொடராக பிரசுரிக்க தீர்மானித்துள்ளோம். இப்பரீட்சைக்குத் தயாராகும் பரீட்சார்த்திகளுக்கு இப்பகுதி உதவியாய் அமையலாம் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.
- ஆசிரியர் பீடம் -

# இலங்கைக் கல்வியின் நோக்கங்கள்

### கல்வி முறைமை

ஆரம்பக் கல்வி பல்கலைக்கழகம் முதல் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வியினை வழங்குவதே இலங்கை அரசின் கொள்கையாகும். அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்விக்கான சம வாய்ப்பினை உறுதி செய்தல் மற்றும் இலங்கைத் தீவின் சகல பிரதேசங்களும் கல்விப் பிரதேசத்திற்காக பாடசாலை வலயமைப்பினை உருவாக்குதல் என்பன பிரதான கொள்கைச் செயன் முறையாகும். அனைத்து ஆசிரியர்களும் அரசினால் நியமனம் செய்யப்படுவதோடு அவர்களின் சம்பளங்களும் அரசின் மூலமே வழங்கப்படுகின்றது. தற்போது ஆசிரியர், மாணவர் விகிதம் 1:17 ஆக காணப்படுகிறது.

மாணவர்களுக்கான இலவச பாடநூல், போஷாக்கு உணவு, சீருடை, பாதணி போன்றவை அரசினாலே வழங்கப்படுவதோடு விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வி வாய்ப்பும் பரவலாக வழங்கப்படுகின்றது. பொதுக் கல்வி 13 வருட கால வயதெல்லை கொண்டதாகும். அது 5 தொடக்கம் 18 வரையாகும். கட்டாயக் கல்வி வயதெல்லை 5 தொடக்கம் 14 வரையாகும்.

பிள்ளை பிறந்ததிலிருந்து ஐந்து வயது வரையான பிள்ளைகள் முன்பள்ளிக் கல்வி பெறுவதோடு பாடசாலைக் கட்டாயக் கல்வி பெற்ற பின் தொழிற் கல்விவாய்ப்பு வழங்கப்படுகின்றது. இடைநிலைக் கல்வியினை பூரணமாக பூர்த்தி செய்தவர் பல்கலைக்கழக மற்றும் மூன்றாம் நிலைக் கல்விவாய்ப்பினைப் பெறுகின்றனர்.

### பல்வேறுபட்ட கல்வி படிமுறைகள்

1. முன்பள்ளி காப்பு மற்றும் கல்வி
2. பொதுக் கல்வி (பாடசாலைக் கல்வி)
3. மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வி
4. தொழில் பயிற்சி மற்றும் தொழிநுட்பக் கல்வி

இலங்கையின் தேசியக் கல்வி கொள்கையினை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு கல்வி அமைச்சு, மாகாண கல்வி அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### முன்பள்ளிக் கல்வி

குழந்தையின் உடல், உள, சமூக, மனவெழுச்சி அபிவிருத்தியினை மையமாகக் கொண்டு குழந்தைப் பருவ காப்பு மற்றும் கல்வி தொடர்பான கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதற்காக, மாகாண சபைகளினூடாக முன்பள்ளிப் பாடசாலைகளை நிர்வகிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

குழந்தைப் பருவ காப்பு மற்றும் கல்வி ஐந்து வருடங்களும் இரண்டு படிமுறைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

1. 0-3 வருடங்கள் - குழந்தைப் பருவம்
2. 4-5 வருடங்கள் - முன்பள்ளி கல்விப் பருவம்

குழந்தைப் பருவ பொறுப்பு சுகாதார அமைச்சினைச் சாரும். முன்பள்ளிக் கல்விப் பருவக் கல்வி தொடர்பான பொறுப்பு உள்நாட்டு அலுவல்கள் அதிகார சபையின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. பாடசாலை தொகைமதிப்பு அறிக்கையின்படி 90 பிள்ளைகள் பாடசாலை நுழைய முன் முன்பாலர் கல்வியினை பெறுபவர்களாக இருக்கின்றனர்.

### பொதுக் கல்வி

பாடசாலை முறைமையில் 1-13 வரையான தரங்கள் காணப்படுவதோடு 1-5 வரையான வகுப்புக்களை ஆரம்பக் கல்வி என்றும் 6-13 வரையான தரங்களை இடைநிலைக் கல்வி எனவும் வகைப்படுத்தப் படுகின்றன.

### ஆரம்பக் கல்வி

முதல்5வருடங்களும் ஆரம்பக்கல்வி பெரும்தரங்களை உடையது இது 3 கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. முதன்மை நிலை 1- தரம் 1-2
2. முதன்மை நிலை 2- தரம் 3-4
3. முதன்மை நிலை 3- தரம் 5

ஒவ்வொரு முதன்மை நிலையிலும் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளைப் பெற வேண்டும். அத்தோடு, ஒன்றிணைக்கப்பட்ட ஆரம்பக் கல்வி பாடவிதானத்தை கற்பித்தல் வேண்டும். பிரதான 4 பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

1. மொழி (தாய் மொழி)
2. கணிதம்
3. சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்
4. சமயம்

செயற்பாட்டு ரீதியான வாய்மொழி ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றது. ஒவ்வொரு முதன்மை நிலையிலும் மாணவர் மைய மற்றும் செயற்பாட்டு ரீதியான கற்பித்தல் முறை நடைமுறைப் படுத்தப்படுகின்றது. ஆரம்பக் கல்வி முடிவில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் நடத்தப்படுகின்றது.

### இடைநிலைக் கல்வி

இடைநிலைக் கல்வி எட்டு வருடங்களைக் கொண்டது. அது மூன்று மட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. கனிஷ்ட இடைநிலை - 6-9 வரை
2. சிரேஷ்ட இடைநிலை- 10-11 (க.பொ.த. சா/த )
3. சிரேஷ்ட இடைநிலை- 12-13 (க.பொ.த. உ/த )

**1. கனிஷ்ட இடைநிலை மட்டம்**

ஆரம்பக் கல்வி ஒன்றிணைக்கப்பட்ட பாடத் திட்டத்திலிருந்து பாடத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானம் கற்பிக்கப்படுகின்றது. இது பொதுவான கலைத்திட்டமாக காணப்பட்ட போதிலும், சில பாடங்களை மாணவர்கள் அவர்களின் விருப்பத்தின் பேரில் தெரிவு செய்து கொள்ள முடியும்.

பாடசாலை மட்டக்கணிப்பீடு (SBA) இம்மட்டத்தில் அறிமுகம் செய்யப்படுகின்றது. அத்தோடு, இரு மொழி கற்றலுக்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில பாடங்களை ஆங்கில மொழியில் கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

1-9 வரையாக கட்டாயக் கல்வி இம்மட்டத்தில் வழங்கப்படுவதோடு 93% மாணவர்கள் கட்டாயக் கல்வியினைப் பூர்த்தி செய்கின்றனர்.

**2. சிரேஷ்ட இடைநிலை மட்டம் (க.பொ.த. சா/த)**

கனிஷ்ட இடைநிலை மட்டத்தினைப் பூர்த்தி செய்தவர்கள் இரண்டு வருட பாடநெறியினைக் கொண்ட சிரேஷ்ட இடைநிலை மட்டத்திற்கு உள்வாங்கப்படுகின்றனர். இம்மட்ட இறுதியில் (க.பொ.த. சா/த) தேசிய பரீட்சைக்கு முகம் கொடுக்க வேண்டும். பாடவிதானத்தில் 6 கட்டாயப் பாடங்களுடன் தொகுதிப் பாடங்களில் இருந்து மூன்றினைத் தெரிவு செய்து மொத்தம் 9 பாடங்களாக கற்பிக்கப்படுகின்றன. தாய்மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்று அதில் மூன்று திறமை சித்தி பெற்றவர்கள் க.பொ.த. (உ/த)ல் கற்க சந்தர்ப்பம் பெறுகின்றனர். சராசரியாக 60% மாணவர்கள் இதற்கு தகுதி பெறுகின்றனர்.


**3. சிரேஷ்ட இடைநிலை மட்டம் (க.பொ.த. உ/த)**

க.பொ.த. (உ/த) இரண்டு வருடங்களைக் கொண்டதாகும். பல்கலைக்கழக தெரிவினை நோக்காகக் கொண்டு க.பொ.த. (உ/த) பரீட்சை நடத்தப்படுகின்றது.

- மாணவர்கள் மூன்று பாடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.
- விஞ்ஞானம், வர்த்தகம், கலை, தொழிநுட்பம் என்ற நான்கு பாடத் துறைகளைக் கொண்டது.
- எல்லா மாணவர்களும் சாதாரண ஆங்கிலம் மற்றும் பொதுச் சாதாரண பரீட்சைக்குத் தோற்றல் வேண்டும்.
- உயர் தர பரீட்சையில் பெறும் புள்ளிகள் இஸட் புள்ளி Z புள்ளி அடிப்படையில் கணிக்கப்படும்.

சராசரியாக 60% தகுதி பெறும் மாணவர்களில் 15% வீத மானவர்களே பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். பல்கலைக்கழக பிரவேசத்தைப் பெறாத மாணவர்களுக்கு மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழிநுட்பக் கல்விக்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## இலங்கை கல்வி முறைமையின் கட்டமைப்பு




### பாடசாலை முறைமை


இலங்கைப் பாடசாலை முறைமையின் கீழ் 10,012 பாடசாலைகள் இயங்குவதோடு இவை 560 பிரிவுகளாகவும் காணப்படுகின்றன. இவை கல்வி அமைச்சு மூலம் நிர்வகிக்கப்படும் பாடசாலைகள், தேசிய பாடசாலைகள், மாகாண பாடசாலைகள் என வகுக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. தேசிய பாடசாலைகள் மத்திய அரசு மூலமும் மாகாண பாடசாலைகள் மாகாண சபை நிர்வாகத்தின் கீழும் நிர்வகிக்கப்படுகின்றன.

| மாகாண/தேசிய பாடசாலை | | | மாணவர்கள் |
|---|---|---|---|
| தேசிய பாடசாலை | 350 | 3.5% | 797,300 |
| மாகாண பாடசாலை | 9662 | 96.5% | 3,239,857 |
| மொத்தம் | 10012 | 100% | 4,037,157 |

அரச பாடசாலைகள் தரம் மற்றும் பாடநெறியினை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. 1 AB பாடசாலை
   உயர் தரம் வரை வகுப்புகள் காணப்படுகின்ற, கலை, வர்த்தகம், விஞ்ஞான பிரிவுகளை உள்ளடங்கிய பாடசாலைகள்.
2. 1c பாடசாலை
   உயர் தரம் வரை வகுப்புகள் காணப்படும் கலை, வர்த்தக, பிரிவுகளை உள்ளடங்கிய பாடசாலைகள்.
3. Type 2
   க.பொ.த. சாதாரண தரம் வரை வகுப்புகள் காணப்படும் பாடசாலைகள்.
4. Type 3
   ஆரம்ப வகுப்பு மற்றும் சிலபோது 8 ஆம் வகுப்பு வரையுள்ள பாடசாலைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




-மலைஞானி

# கூட்டு உடன்படிக்கையில் இழுபறி

## முதலாளிமார் தரப்பு என்ன சொல்கிறது?

ஆறாவது தடவையாகவும் கூடிய சம்பளப் பேச்சுவார்த்தை மறு திகதி குறிப்பிடப் படாமல், எந்த முடிவையும் எட்டாமல் கலைந்திருக்கிறது. மார்ச் 31 ஆம் திகதியோடு இரண்டாண்டு கால பெருந்தோட்ட கூட்டு ஒப்பந்தம் காலாவதியாகி ஏழு மாதங்கள் கழிந்துவிட்டன. கூட்டு ஒப்பந்த முறை ஏற்பட்ட பின்னர், ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் எந்தவொரு முடிவுமில்லாமல் இவ்வளவு காலத்துக்கு இழுபறி பட்டதேயில்லை.

இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன.

முதலாவது, பாராளுமன்றத் தேர்தலில் வாக்குகளைக் கொய்யலாம் என்ற எதிர்பார்ப்புடன் ஆயிரம் ரூபாவை தின வேதனமாகப் பெற்றுத் தருவோம் என இ.தொ.கா. தன்னிச்சையாக அறிவித்தது. இந்த அறிவிப்பு, தேர்தலில் ஆறுமுகன் எதிர்பார்த்த வெற்றியைப் பெற்றுத் தரவில்லை என்பது ஒருபக்கமிருக்க, அதுவே இத்தனை மாதங்களாக இப்பேச்சுவார்த்தை இழுபடவும் காரணமாயிற்று. கூட்டு ஒப்பந்தம் என்பது சம்பள அதிகரிப்பு அடங்கலாக பல்வேறு நலன்கள் மற்றும் உரிமைகள் தொடர்பாக செய்து கொள்ளப்படும் ஒரு சட்டரீதியான உடன்படிக்கை. அதை அவ்விதமே பார்க்காமல் வாக்குகளை அள்ளித் தருமா என்று பார்த்தது முதல் தவறு.

இரண்டாவதாக, ஒரு பேச்சுக்கு ஆயிரம் ரூபா என அறிவித்துவிட்டாலும் இ.தொ.கா. விடாப்பிடியாக அதில் நின்றிருக்கக் கூடாது. ஏழு மாதங்களாக இந்த இழுபறி நிலை நீடிப்பதால், மறைமுகமாக தேயிலை உற்பத்தியை இது பாதித்திருப்பது ஒரு புறம் என்றால், தோட்ட நிர்வாகங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே பகைமை உணர்வுடன் கூடிய ஓர் ஒத்துழைக்காத தன்மையும் நிலவத் தொடங்கியிருக்கிறது. இழுபறி நிலை நீடிக்கும்போது இதன் தோற்றங்கள் மாற்றங்களுக்கு உள்ளாகலாம். எனவே இப்பிணக்கு நிலைமையை முடிவுக்குக் கொண்டு வர வேண்டியது, தற்போதைய நிலையில், அரசின் கடமை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

ஆயிரம் ரூபா அதிகரிப்பு என்பது தொழிலாளர்கள் கேட்ட அதிகரிப்பு அல்ல. ஆனால், அதைப் பெற்றுக் கொடுத்தால் யாரும் வேண்டாம் எனச் சொல்லப் போவதில்லை. அண்மையில் ஆயிரம் ரூபா என்ற அறிவிப்பை ஒரு தேர்தல் ஸ்டேண்ட் போல இ.தொ.கா. முன்வைக்க, திகாம்பரம் - இராதா கிருஷ்ணன்-மனோ கணேசன் கூடாரம் இதை ஒரே பிடியாகப் பிடித்துக் கொண்டது. ஆயிரம் ரூபா வேதனம் என்பதை நிச்சயமாகத் தெரிந்து வைத்திருந்த இராதா-திகா கூட்டணி, ''தொழிலாளர் வேதன உயர்வு தொடர்பாக நாம் பேசுவதற்கு ஒன்றுமில்லை. இ.தொ.கா. ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொடுக்குமானால் எமக்கு ஆட்சேபனை இல்லை. அதற்கு பூரண ஆதரவு வழங்குவோம்'' என வஞ்சகப் புகழ்ச்சி பரப்புரையை மேற்கொண்டு விட்டு சும்மா இருந்துவிட்டது. அதாவது, இ.தொ.கா. போட்ட தேர்தல் குண்டை, இராதா-திகா கூட்டணி திருப்பியடித்து, ஒன்றுமில்லால் ஆக்கிவிட்டது.

இந்த இரு பிரிவினரும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். இரண்டுமே பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டே! ஆனால், இந்த இரண்டு நகர்வுகளும் தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்க்க உதவவுமில்லை. நீடித்து நிலைக்க மட்டுமே உதவியிருக்கின்றன என்பதை நாம் மறந்து விடலாகாது. அதாவது, சம்பள உயர்வைப் பெற்றுத் தரும் முழுப் பொறுப்பையும் இ.தொ.கா.விடம் விட்டு விட்டு, ஏனைய மலையகக் கட்சிகள் வேடிக்கை பார்க்கப் போய்விட்டன.

இந்தத் தொடர் பேச்சுவார்த்தைகளின் போது இ.தொ.கா. தொழிற் சங்கத்தின் சார்பாக பதுளை வேலாயுதம் கலந்து கொள்ளவில்லை. சுமார் ஒரு வருட காலமாக சுகவீனமுற்ற நிலையில் நாட்களை நகர்த்திக் கொண்டிருந்தார் வேலாயுதம். இதனால் தான் அவர் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை. தேசியப் பட்டியலில் அவர் பெயர் வைக்கப்பட்டது. எனினும், தேசியப் பட்டியலிலிருந்து உறுப்பினர்களை நியமிக்கும்போது அவரை ரணில் தவிர்த்து விட்டார். அவரது உடல் நிலையே இதற்குக் காரணம். எனினும், அவரை பாராளுமன்ற உறுப்பினராக நியமித்து கௌரவம் அளித்திருக்கலாம் என்று ஒரு கருத்தும் முன்வைக்கப்படுகிறது. இது அவருக்கு ஒரு தெம்பையும் மகிழ்வையும் அளித்திருக்கும் என்றும் கூறப்படுகிறது.

பழம் பெரும் தொழிற்சங்கவாதி என்ற வகையிலும் தமது பக்க நியாயங்களை ஆணித்தரமாக முன்வைக்கக் கூடிய மும்மொழியாற்றலும் நெஞ்சுரமும் கொண்ட ஊவா மகனை மலையகம் இழந்திருக்கிறது என்பதை இங்கே பதிவு செய்ய வேண்டும். மரணம் மனிதனுக்கு இயல்பானது என்பதோடு எப்போது வேண்டுமானாலும் மரணம் ஒருவரை விழுங்கிவிடக் கூடியது என்பதும் உண்மையே. எனினும், இ.தொ.கா.வினால் கற்பனையேனும் பண்ணிப் பார்க்க முடியாதிருந்த காணி உறுதியுடனான வீடு என்ற திட்டத்தை குறுகிய காலப் பகுதிக்குள் உருவாக்கி அதைச் செய்தும் காட்டினார் என்ற வகையில் மலையகம் அவருக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் அவரது குடும்பத்துக்கு எங்கள் தேசம் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம். மலையகம் ஒரு முக்கியமான காலகட்டத்தில், அடுத்த திருப்புமுனைக்காக எதிர்பார்த்திருக்கையில், அனுபவமும் ஆற்றலும் சிந்தனைத் திறனும் எடுத்ததை முடிக்கும் திடசங்கற்பமும் கொண்ட மலையக மைந்தனை இழந்திருப்பது, நிச்சயம் ஒரு பேரிழப்பே!

இக்கூட்டு ஒப்பந்தப் பேச்சுவார்த்தையில் நீண்ட காலமாகப் பங்குபற்றி வந்தவர் என்ற வகையில் அவரது மறைவு, பெரும் பின்னடைவே. வெளிப்படையாகப் பேசக் கூடிய, ஊடகவியலாளர்களுடன் நண்பனைப் போல் பழகக் கூடிய ஒருவரை இழந்திருக்கிறோம். பேச்சுவார்த்தைகளில் பங்கு கொண்டு வந்த மூத்த தொழிற்சங்கவாதியான ஓ.ஏ. ராமையாவைக் கடந்த வருடம் இழந்தோம். இவ்வாண்டில் வேலாயுதத்தை இழந்திருக்கிறோம். எனவே, முதலாளிமார் சம்மேளனத்துடன் நடக்கும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளக் கூடிய ஒரு தமிழரை தெரிவு செய்து அனுப்ப வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. இவ்விடயம் தொடர்பாக முதலாளிமார் சம்மேளனத்துடன் மலையக அமைச்சர்கள் பேசி ஓர் ஏற்பட்டுக்கு வர வேண்டும். ஏனெனில், இலட்சக்கணக்கான தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் நலன்கள் குறித்து விவாதிப்பதற்கான வாய்ப்பை முத்து சிவலிங்கம் மற்றும் ஆறுமுகனிடம் மாத்திரம் கையளித்து விட முடியாது.

இனி இரண்டாவது காரணத்துக்கு வருவோம்.

ஆயிரம் ரூபா வேதன அதிகரிப்பு பற்றி விளையாட்டாகவோ அல்லது சீரியஸாகவோ குரல் எழுப்புவதற்கு முன்னர், முதலாளிமார் சம்மேளனத்துக்கு இருக்கக் கூடிய சாதக, பாதக அம்சங்கள் பற்றி யோசித்துப் பார்த்திருக்க வேண்டும்.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக தேயிலை விலையில் பாரிய சரிவு ஏற்பட்டிருக்கிறது. எமது தேயிலையை வாங்கும் மத்திய கிழக்கு நாடுகள் ரஷ்யா, எகிப்து, லிபியா ஆகிய நாடுகளில் யுத்தம் நடைபெற்று வந்திருக்கிறது. உள்ளூர்க் கிளர்ச்சிகள் இடம் பெற்று வந்துள்ளன. உலகளாவிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. முதலாளிமார் சம்மேளனம் இவற்றைச் சுட்டிக் காட்டுவதோடு, ஒரு கிலோ தேயிலையை உற்பத்தி செய்ய 450 ரூபா செலவிட்டு அதைத் தேயிலை ஏல விற்பனையில் 370 ரூபாவிற்கு விற்கிறோம் என்று கூறுகிறது.

**தேயிலை, இறப்பர் உற்பத்தித் துறையில் பாரிய நெருக்கடி நிலை நிலவுவதாக அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருப்பதும், மாற்று ஏற்பாடுகளை செய்யவிருப்பதாக கூறியிருப்பதும் துரைமார் சங்கத்தின் நிலைப்பாட்டுக்கு சாதகமாக அமைந்திருக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும்.**

கிலோவுக்கு 80 ரூபா நஷ்டமடைவதாகவும் உற்பத்திச் செலவில் எழுபது சதவீதம் தொழிலாளர் தொடர்புடையது என்றும் புள்ளி விவரங்களைத் தருகிறது.

புதிய பல நாடுகள் தேயிலை உற்பத்தி செய்ய முன்வந்துள்ளதை அந்த நாடுகளின் உற்பத்திச் செலவு குறைவு என்பதால் எமது விலையை விட குறைவான விலைக்கு அவற்றால் உலகச் சந்தையில் விற்பனை செய்ய முடிகிறது என்றும் சம்மேளனம் காரணம் காட்டுகிறது.

உலக பொருளாதார நெருக்கடி காரணமாக கொழும்பு ஏல விற்பனைக்கு கொண்டு வரப்படும் தேயிலையின் 60-70 சதவீதமே விலைப்படுகிறது என்றும் மிகுதி தேங்கி விடுகிறது என்றும் சுட்டிக் காட்டப்படுவதோடு இவ்வாறான தேக்கம் முன்னெப்போதும் நிகழ்ந்ததில்லை என்றும் குறிப்பிடப்படுகிறது.

➡16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ்-முஸ்லிம் சிநேகபூர்வ கலந்துரையாடல் மூலம் வட மாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை சாத்தியப்படுத்த முடியும்"

## பாராளுமன்ற உறுப்பினர் கே. காதர் மஸ்தான்



நேர்காணல்: ஏ. முஹம்மத் பாயிஸ்
ஐ.எம். இர்சாத்

முஸ்லிம்கள் மீள்குடியேற்றப்படுவதில் வட மாகாண சபையின் தலையீடுகள் காணப்படுகின்றன. தமிழ் மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதால் முஸ்லிம்களின் கஷ்டங்களையும் அவர்கள் நன்கு உணர்ந்திருப்பார்கள். தமிழ் மக்கள் சிலர் மீளக் குடியேறிய முஸ்லிம்களின் காணிகளையும் சொத்துக்களையும் பாதுகாத்து திரும்பக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, புரிந்துணர்வுடனான ஓர் அரசியலை, சிநேகபூர்வமான கலந்துரையாடலை தமிழ் மக்களுடன் மேற்கொள்கின்ற போது முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு அவர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று நம்புகின்றேன் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. காதர் மஸ்தான் தெரிவித்தார். அவர் எங்கள் தேசத்துக்கு வழங்கிய நேர்காணலிலே இவ்வாறு தெரிவித்தார். அவருடனான நேர்காணலை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

**எங்கள் தேசம்:** உங்களது அரசியல் பிரவேசம் தொடர்பாக கூற முடியுமா?

**கே. காதர் மஸ்தான்:** எனது குடும்பம் வியாபாரத்தை தொழிலாகக் கொண்டது. இந்தக் குடும்பத்திலுள்ள ஒவ்வோர் அங்கத்தவரும் இனம், மதம் பாராது சமூகப் பணியில் ஈடுபாடுள்ளவர்கள். தேர்தல் காலங்கள் வந்தால் அதில் போட்டியிடுமாறு இந்த ஊர்மக்கள் என்னை ஆர்வமூட்டுவார்கள். அவர்களின் அன்பான வேண்டுகோளை தட்டிக்கழித்து வந்த நான், இனியும் அவ்வாறிருப்பது முறையல்ல என்பதை உள்ளூர உணர்ந்தேன். அதனால்தான், கடந்த பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிட்டேன். முதன் முறையாக போட்டியிட்டு மக்களின் ஆதரவுடன் வெற்றி பெற்றிருக்கிறேன். எனது இந்த வெற்றிக்கு காரணமான வன்னி மாவட்ட மக்களுக்கு நான் என்றும் நன்றிக்கடன் பட்டவன்.

**எங்கள் தேசம்:** ஐ.தே.க. எழுச்சி பெற்றிருந்த நிலையில், நீங்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறீர்கள். இந்த வெற்றிக்கான காரணம் என்னவென்று கூற முடியுமா?

**கே. காதர் மஸ்தான்:** தேசிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டத்தில் சிறுபான்மை மக்களுடைய விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சாதகமான போக்கைக் கடைப்பிடித்தார். அவருடைய அரசியல் முன்னெடுப்பு சிறந்ததாக அமைந்ததால் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்து போட்டியிட தீர்மானித்தேன். அதேபோன்று, எமது சேவை இனம், மதம் பாராது மேற்கொள்ளப்பட்டதால் கடந்த பொதுத் தேர்தலில் மூவின மக்களும் எமக்கு கணிசமாக வாக்களித்தார்கள். அதேபோன்றுதான், வன்னி மாவட்டத்தில் நேர்மையாக சேவை செய்யக் கூடிய அரசியல் தலைமை மக்களுக்கு தேவைப்பட்டிருந்தது. வன்னி மாவட்ட அரசியல் சூழமைவுகளைப் பார்க்கும்போது எமக்கான வெற்றிவாய்ப்பும் சாதகமாகக் காணப்பட்டது.

இலங்கையில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிட்டு வெற்றியீட்டிய ஒரே ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினராக நான் இருக்கின்றேன். நான் முதன் முதலாக அரசியலில் போட்டியிட்டவன் என்றாலும், மக்களுக்கு நான் புதியவனாக இருக்கவில்லை. இந்நிலையில்தான் மக்கள் என்னைத் தெரிவு செய்தார்கள்.

**எங்கள் தேசம்:** வட மாகாண முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெறும் இவ்வேளையில், அவர்கள் மீள்குடியேறுவதிலும் மீள்குடியேற்றப்பட்டதிலும் இடையூறுகள் காணப்படுகின்றன. இதனை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

**கே. காதர் மஸ்தான்:** மீள்குடியேற்றம் இன்னும் தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையாகவே தொடர்கிறது. மீள்குடியமர்த்தப்படும் மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் வாழ்வாதாரம், அவர்கள் வாழ்வதற்கான வீடு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பன இன்னும் முறையாகச் செய்து கொடுக்கப்படவில்லை.

இம்மக்களில் பெரும்பாலானவர்கள் விவசாயத்தை நம்பியவர்கள். இவர்கள் தமது வாழ்வாதாரத்தை ஈட்டிக் கொள்வதற்கான போதியளவு வசதிகள் இல்லாமல் இருக்கிறார்கள்: இவற்றை நிவர்த்திக்க வேண்டியுள்ளது.

மேலும், வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்கள் இப்போது பல குடும்பங்களாகப் பெருகியுள்ளன. இவர்கள் மீளக் குடியேற வேண்டுமென்றால், இவர்களுக்கான காணி மற்றும் வீட்டு வசதிகள் என்பன முறையாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இந்த விடயங்களில் காணப்படும் குறைபாடுகள்தான் மீளக் குடியமர்த்தப்படுவதிலுள்ள பிரச்சினைகளாகும்.

இன்னும், மீள் வருகையை வடபுலத்து உறவுகள் ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவைப்பாடுமுள்ளது. முஸ்லிம்கள் மீள்குடியேற்றப்படுவதில் வட மாகாண சபையின் தலையீடுகள் காணப்படுகின்றன. தமிழ் மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதால் முஸ்லிம்களின் கஷ்டங்களையும் அவர்கள் நன்கு உணர்ந்திருப்பார்கள். தமிழ் மக்கள் சிலர் மீளக் குடியேறிய முஸ்லிம்களின் காணிகளையும் சொத்துக்களையும் பாது காத்து திரும்பக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, புரிந்துணர்வுடனான ஓர் அரசியலை, சிநேக பூர்வமான கலந்துரையாடலை தமிழ் மக்களுடன் மேற்கொள்கின்றபோது முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு அவர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று நம்புகின்றேன்.

**எங்கள் தேசம்:** வட மாகாண முஸ்லிம்களின் பல ஏக்கர் காணிகள் பாதுகாப்புப் படையினரால் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், இவர்களை மீளக் குடியமர்த்துவதில் தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

**கே. காதர் மஸ்தான்:** வட மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு அதிகமான காணிப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. வில்பத்து, சிலாபத்துறை போன்ற காணிகள் பிரச்சினைக்குரியதாகவுள்ளன. வில்பத்துக் காணிப் பிரச்சினை அண்மைக் காலமாக வெகுவாகப் பேசப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சுமுகமான பேச்சுவார்த்தை மூலம் அங்குள்ள பூர்வீக முஸ்லிம்களுக்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அதேபோன்று, சிலாவத்துறை முஸ்லிம்களின் காணிகளும் கடற்படையினரால் சுவீகரிக்கப்பட்டு முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இதுவும் தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை.

இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ் மக்களின் பல ஏக்கர் காணிகள் இந்த அரசாங்கத்தில் மீளக் கையளிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, எமது முஸ்லிம்களின் காணிகளும் மீளக் கையளிக்கப்படும் என்று நான் நம்புகின்றேன். இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் ஆகியோருடன் பேசியும் வருகின்றேன்.

**எங்கள் தேசம்:** நீங்கள் முஸ்லிம் காங்கிரஸுடன் இணையப் போவதாக அண்மையில் சில தகவல்கள் வெளியானதே?

**கே. காதர் மஸ்தான்:** அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்கள் வன்னி மாவட்ட அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாட என்னை அழைத்தபோது, தாருஸ் ஸலாமில் நடந்த அந்தக் கலந்துரையாடலுக்கு நான் சென்றிருந்தேன். அங்கு வன்னி மாவட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடினோம். இந்த இடத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீமாக இருந்தாலும் சரி, அமைச்சர் றிஷாட் பதியுதீனாக இருந்தாலும் சரி வன்னி மாவட்ட மக்களின் தேவைகளைப் பெற்றுக் கொடுக்க யாரோடு வேண்டுமானாலும் இணைந்து பணியாற்ற நான் தயாராகவுள்ளேன்.

இது தேசிய அரசாங்கம் என்ற வகையில், பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் பிரதான பங்காளிகளாகவுள்ளன. நான் பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதால் எமக்கு கட்சி மாற வேண்டிய தேவையில்லை. வன்னி மாவட்ட மக்களின் தேவைகளை ஜனாதிபதி அவர்களுடன் கலந்துரையாடியும் ஏனைய அரசியல் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலமும் பெற்றுக் கொடுக்க நான் முயற்சி செய்வேன். ▪

**புரிந்துணர்வுடனான ஓர் அரசியலை, சிநேகபூர்வமான கலந்துரையாடலை தமிழ் மக்களுடன் மேற்கொள்கின்ற போது முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று நம்புகின்றேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தன் ஐயா அவர்களே; பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கும் நீங்கள்தான் எதிர்க்கட்சித் தலைவர்



## அமைச்சர் றிஷாட் பதியுதீன்

எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற சம்பந்தன் ஐயா அவர்களைப் பார்த்து நான் ஒன்று கேட்கின்றேன்; உங்களுக்கு 16 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். நீங்கள் இந்த நாட்டிலே எதிர்பார்க்கின்ற ஒரு தீர்வை, பொறிமுறையை இந்தப் பாராளுமன்றம் அங்கீகரிக்குமென்றோ அல்லது நீங்கள் விரும்புவதை இந்த அரசு தருமென்றோ நினைப்பீர்களாக இருந்தால், பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்துக்கும் உதவுவது உங்களது கடமையென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிஷாட் பதியுத்தீன் தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அறிக்கை தொடர்பில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது;

இலங்கையில் இனங்களுக்கிடையிலான முறுகல் கடந்த 3 தசாப்த காலமாக உக்கிரம போராக வெடித்தது. அதன் வரலாறு நீண்டது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த பல அரசுகள் பல்வேறு தீர்வு முயற்சிகளை மேற்கொண்டுதான் வந்திருக்கின்றன. சிறிமா-சாஸ்திரி, பண்டா-செல்வா, டட்லி-செல்வா என பல ஒப்பந்தங்களைக் கண்டிருக்கிறோம். என்றாலும் அண்மைக் கால வரலாற்றில் 1987 இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கை, 2002 இல் நோர்வேயோடு மேற்கொள்ளப்பட்ட மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை, அதனைத் தொடர்ந்து 2006 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் என்பவற்றில் எல்லாம் முஸ்லிம் சமூகத்தினுடைய கரிசனைகள் முறையாக உள்வாங்கப்படவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

கடந்த அரசாங்கத்தில் சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தின் பேரில் தோற்றுவிக்கப்பட்ட LLRC உள்ளகப் பொறிமுறை 2006 மாவிலாறு முதல் 2009 முள்ளிவாய்க்காலில் போர் முடியும் வரை குறிப்பாக, தமிழ் சமூகத்துக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்கே முன்னுரிமை கொடுத்துள்ளது. ஆனால், முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை குறைந்தபட்சம் 1985 முதல் இன்று வரை எங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை அடைந்து கொள்ள முடியாத நிலையே காணப்படுகின்றது. அவை குறித்து உண்மைகளைக் கண்டறியவும் தீர்வுக்கான முன்மொழிவுகளை முன்வைக்கவும் எந்தவொரு பொறிமுறையும் அமையவில்லை.

எந்தவொரு பொறிமுறையாக இருந்தாலும் முஸ்லிம்களின் விவகாரங்களை முறையாக உள்வாங்குவதற்கான ஏற்பாடுகளை இந்த நல்லாட்சி அரசாங்கம் செய்து தர வேண்டுமென்று முதலில் நான் வேண்டுகின்றேன். நாம் அனைவரும் இலங்கையர். இன ரீதியாகவோ, மொழி ரீதியாகவோ அல்லது மத ரீதியாகவோ எமது பிரச்சினைகளை வேறுபடுத்திக் கையாள்வதை நாம் ஒருபோதும் விரும்பவில்லை. அத்தகைய பாகுபாடுகளின் மூலம் கடந்த காலங்களில் இடம்பெற்றது போன்று இனவாதம் ஒரு சமூகத்தின் மீது திணிக்கப்படுவதை நாங்கள் விரும்புவதுமில்லை. இன்றைக்கு ஜனாதிபதியும் பிரதமரும் அந்த நம்பிக்கையை ஓரளவு ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

இன்று நாங்கள், வடபுலத்து முஸ்லிம்களுடைய மீள்குடியேற்றம் பற்றிப் பார்க்க வேண்டும். குறிப்பாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் தங்களுடைய 30 வருட போராட்டத்தைப் பற்றியும் அதனால் ஏற்பட்ட அழிவுகளைப் பற்றியும் தமது மக்களுடைய மீள்குடியேற்றத்தைப் பற்றியும் தங்களுக்கான ஒரு தீர்வைப் பற்றியுமே இங்கு பேசுகின்றார்கள். ஆனால், ஒரே மொழியைப் பேசுகின்ற முஸ்லிம் சமூகம் இரவோடிரவாக இரண்டு மணித்தியால அவகாசத்திலே, யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்ட வரலாற்றை இன்று அவர்கள் மறந்திருக்கின்றார்கள். அதேபோல, இரண்டு நாட்கள் அவகாசத்திலே 60,000 க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களிலிருந்து வெளியேற்றப்பட்டதையும் அவர்கள் மறந்திருக்கின்றார்கள்.

அன்று எங்களுடைய சமூகம் வருவதற்குப் பாதைகள் கூட இருக்கவில்லை. பாலங்களை உடைத்து படகு மூலம் கடல் வழியாகச் செல்லுமாறு இந்த முஸ்லிம்களை அச்சுறுத்தினார்கள்; சொத்துக்களைப் பறித்தெடுத்தார்கள்; கையிலிருந்த பணத்தைப் பறித்தெடுத்தார்கள். அதேபோல், அவர்கள் அணிந்திருந்த தங்க நகைகளையும் பலவந்தமாகக் கழற்றி எடுத்துவிட்டு வெறுங்கையோடு வெளியேற்றப்பட்டார்கள். கடல் வழியாக படகு மூலம் வருகின்றபோது, ஒரு தாயின் கையிலிருந்த குழந்தை தவறிக் கடலிலே விழுந்ததை அரை மணி நேரத்துக்குப் பிறகுதான் அந்தத் தாய் உணர்ந்தாள். அவ்வாறான துன்பங்களை எல்லாம் அனுபவித்த ஒரு சமூகத்தின் மீள்குடியேற்றம் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மிகவும் நாகரிகமில்லாமல் நடந்து கொண்டிருக்கின்றது.

வட மாகாண சபையை இரண்டு வருடங்களாக ஆட்சி செய்பவர்கள், இந்த வடக்கு முஸ்லிம்களுடைய மீள்குடியேற்றத்தைப் பொருட்படுத்தாமல், புட்டும் தேங்காய்ப்பூவும் போல முஸ்லிம்-தமிழ் சமூகங்கள் வாழ வேண்டும் என்று அறிக்கைகளை விடுக்கின்ற அரசியல்வாதிகளாகத்தான் தொடர்ந்தும் இருந்து வருகிறார்கள். பாராளுமன்றத்திலும் மாநாடுகளிலும் ஏன்? உலகமெல்லாம் சென்று இவர்கள் பேசுகிறார்கள். ஆனால், இந்த வடபுலத்து முஸ்லிம் சமூகம் தங்களுடைய சொந்த மண்ணுக்கு குடியேறச் சென்றால், அவர்களை புத்தளத்திலிருந்து வருகின்றவர்கள், கொழும்பிலிருந்து வருகின்றவர்கள் என்று பொய் வதந்திகளைக் கி ளப்பி விடுகிறார்கள்; அவர்களின் மீள்குடியேற்றத்தைத் தடுக்கின்றார்கள்.

சம்பந்தன் ஐயா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக நியமனம் பெற்றபோது ஒரு சிறுபான்மைச் சமூகப் பிரதிநிதி என்ற வகையில் நான் அவரைப் பாராட்டினேன்; சந்தோஷப்பட்டேன். சம்பந்தன் ஐயா அவர்கள் இன்று எவ்வளவு அனுபவமுள்ள ஓர் அரசியல்வாதி. அவர் இன்று வெளிநாட்டுப் பிரதிநிதிகளோடும் இந்தியப் பிரதிநிதிகளோடும் பேசுகிறார். ஆனால், இந்த ஒரு லட்சம் முஸ்லிம்களை விரட்டிய விடுதலைப் புலிகள் அன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பினுடைய அரசியல் சக்தியாக இருந்தபோதுதான் அவர்கள் இந்த சமூகத்தை விரட்டினார்கள் என்பதை சமபந்தன் ஐயா ஒருபோதும் மறந்துவிட முடியாது.

காத்தான்குடியிலே முஸ்லிம்கள் தொழுது கொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஹஜ் கடமை முடித்துவிட்டு வந்த ஏறாவூர் முஸ்லிம்களைச் சுட்டுக் கொன்று அவர்களை எங்கே புதைத்தார்கள் என்று தெரியாமல் இன்றும் கப்ருகளை நாங்கள் தேடி அலைகின்றோம். 1992 ஆம் ஆண்டு பொலன்னறுவையிலே அழிஞ்சிப் பொத்தானை என்ற பிரதேசத்தில் அப்பாவி முஸ்லிம்கள் 200 பேர் வரையில்-தாய்மார், பச்சிளம் குழந்தைகள் என் வயது வேறுபாடின்றிக் கொல்லப்பட்டார்கள். இரண்டு வயதுக் குழந்தைகளைக் கூட, கத்தியினால் வெட்டிக் கொலை செய்து அதிலே அவர்கள் சந்தோஷத்தைக் கண்டார்கள்.

ஆனால், எந்த ஒரு கூட்டத்திலும் அப்போதிருந்த தலைவர் அஷ்ரப் அவர்களோ அல்லது இன்றிருக்கின்ற முஸ்லிம் அரசியல் தலைவர்களோ யாரும், நாங்கள் தமிழ் மக்களுக்கு ஒரு நிலையான தீர்வு கிடைப்பதை, தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதை, அவர்களுடைய சொந்த இடங்களிலே போய்க் குடியேறுவதை, அவர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுப்பதை ஒருபோதும் தடுக்கவில்லை; தடுக்கவும் மாட்டோம். அவர்களுக்கு உதவி செய்திருக்கிறோம். இன்ஷா அல்லாஹ், எதிர்காலத்திலும் நாங்கள் உதவி செய்வோம்.

ஆனால் , நீங்கள் நாடு கேட்டுப் போராடியவர்கள். இன்று இந்த சர்வதேச பொறிமுறையைப் பற்றிப் பேசுகின்றவர்கள் ஏன் ஒரே மொழியைப் பேசுகின்ற உங்களுடைய மண்ணிலே சகோதரர்களாக வாழ்ந்த, உங்களோடு ஒற்றுமையாக வாழ்ந்த எங்களுடைய வடபுலத்து முஸ்லிம்களுடைய மீள்குடியேற்றத்திற்காக எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை? உதவிதான் நீங்கள் செய்யவில்லை, இந்த ஓர் இலட்சம் முஸ்லிம்களைக் கொண்டு போய் அவர்களுடைய காணியைக் கண்டுபிடித்து, அந்தக் காணியில்லை என்றால் இன்னொரு காணியைக் கொடுத்து அவர்களது காணியிலே வேறு யாராவது குடியிருந்தால் அதைப் பெற்றுக்கொடுத்து அவர்களைக் குடியேற்ற வேண்டிய தார்மிகப் பொறுப்பு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற சம்பந்தன் ஐயாவிற்கும் அவரோடிருக்கின்ற 16 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கின்றது. அதேபோன்றுதான், முதலமைச்சராக இருக்கின்ற விக்கினேஸ்வரனுக்கும் அவரோடிருக்கின்ற மாகாண சபை உறுப்பினர்களுக்கும் இருக்கின்றது.

➡ 14

**எந்த ஒரு கூட்டத்திலும் அப்போதிருந்த தலைவர் அஷ்ரஃப் அவர்களோ அல்லது இன்றிருக்கின்ற முஸ்லிம் அரசியல் தலைவர்களோ யாரும், நாங்கள் தமிழ் மக்களுக்கு ஒரு நிலையான தீர்வு கிடைப்பதை, தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதை, அவர்களுடைய சொந்த இடங்களிலே போய்க் குடியேறுவதை, அவர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுப்பதை ஒருபோதும் தடுக்கவில்லை; தடுக்கவும் மாட்டோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தென்னாபிரிக்காவின் உண்மையைத் தேடும் நல்லிணக்க ஆணைக்குழு

சிங்களத்தில்: சி.கே. அமரதுங்க (ஞாயிறு லங்காதீப)
தமிழில்: எம்.எச்.எம். நியாஸ்

(சென்ற இதழ் தொடர்...)

நிறபேதவாதிகளின் அடக்குமுறைகள் 1980 களில்தான் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. மேற்கத்திய மனித உரிமை அமைப்புகளின் பலமான குரல், அமெரிக்காவையும் பிரித்தானியாவையும் தென்னாபிரிக்காவுடனான உறவை ஏற்படுத்தத் தூண்டியது. தென்னாபிரிக்காவில் அமெரிக்க முதலீடுகள் செயலிழந்து காணப்பட்டன. சோவியத் ரஷ்யாவின் ஆட்சி கவிழ்ந்ததும் இந்நிலை ஏற்படுவதற்கு மற்றுமொரு காரணியாகும். அதன் இறுதி விளைவாக தென்னாபிரிக்காவில் வெள்ளையரின் ஆட்சிக்கு மேற்கின் ஒத்துழைப்பும் இடை நிறுத்தப்பட்டது.

தமக்கு ஏற்பட்ட பரிதாபமான நிலையை உணர்ந்த வெள்ளை ஆட்சியாளர் தென்னாபிரிக்காவில் அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு இணங்கினர். ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா 27 வருட சிறை வாழ்க்கையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். அவருடன் உடன்படிக்கை செய்து கொண்ட வெள்ளை ஆட்சியாளரான எம்.டீ. கிளாக், அரசியல் அதிகாரம் கறுப்பு இனத்தவர்களுக்கும் கிடைக்கும் வண்ணம் ஜனநாயக மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதன்படி, 1990 இல் இருந்த கறுப்பின மக்களுக்கு உரிமைகள் கிடைக்கும் வண்ணம் அரசியலில் பல்வேறு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அதன் விளைவாக 1994 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதுடன் தென்னாபிரிக்காவின் வெள்ளையின ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

நிறபேத ஆட்சி அவ்வாறாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டாலும் அந்த ஆட்சியை நடைமுறைப்படுத்திய காலத்திலும் அதற்கு எதிராக நடத்தப்பட்ட பேராட்டத்திலும் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் அநியாயங்கள் பற்றிய கேள்விகள் எஞ்சியிருந்தன. அவ்வாறான அநியாயங்களுக்குள்ளானோர் அநியாயக்காரர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என குரலெழுப்பினர். அது மட்டுமன்றி, போராட்டத்தின் பின் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்காக போராட்டத்தின்போது நடைபெற்ற அநியாயங்கள், அக்கிரமங்கள் பற்றி விசாரணை செய்ய வேண்டியேற்பட்டது. தென்னாபிரிக்காவின் உண்மையைத் தேடும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் விளைவாகவே உருவாக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விசேட சட்டமொன்றுக்கு அமையவே மேற்படி ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. 1955 இல் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை விருத்தி செய்யும் சட்டம் ஒன்றுக்கு அது அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, அது யுத்தக் குற்றங்களை விசாரணை செய்யும் ஒரு சபையாகவோ, நீதி மன்றமொன்றாகவோ கணிக்கப்பட வேண்டியதானது.

1966 இல் ஆரம்பிக்கப்பட்ட அந்த ஆணைக்குழுவின் ஆயுள் மூன்று வருடங்கள் மட்டுமே என்று தீர்மானிக்கப்பட்டது. அதன் பின் அதன் கால எல்லை 7 வருடங்களாக நீடிக்கப்பட்டது. எதிர்பார்த்ததை விட அதிகமான விடயங்கள் அந்த விசாரணையின் போது ஆராயப்பட வேண்டி ஏற்பட்டதே அதற்கான காரணமாகும்.

உண்மையைத் தேடும் நல்லிணக்க ஆணைக்குழுவில் பதினேழு நீதிபதிகள் உள்ளடங்கினர். அதன் தலைவராக ஆகி பிஷோல் டெஸ்மன் டுடு நியமிக்கப்பட்டார். அதன் உறுப்பினர்களாக பல புத்திஜீவிகள் நியமிக்கப்பட்டனர்.

1960-1974 வரையிலான காலத்தில் நிறபேதவாதிகளின் ஆட்சியின் மூலமாகவும் விடுதலை அமைப்புக்கள் மூலமாகவும் நடத்தப்பட்ட ஆட்கடத்தல், கொலை மற்றும் சித்திரவதை பற்றி விசாரணை செய்வதே இந்த ஆணைக்குழுவின் பொறுப்பாகக் கொடுக்கப்பட்டது. அதாவது, குறித்த கால எல்லைக்குள் அனைத்துத் தரப்பினர்களாலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் பற்றி விசாரணை செய்து அவற்றை பகிரங்கப்படுத்துவதே அதன் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவுக்கு முன்பாக தாம் செய்த தவறுகளை மறைக்காது அவற்றை பகிரங்கப்படுத்துபவர்களுக்கு மன்னிப்பு வழங்கும் உரிமையும் அந்த ஆணைக் குழுவுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக அதிகமான சாட்சிகளை அழைத்துக் கொள்ளக் கூடியதாக இருந்ததுடன் தகவல்களை பகிரங்கப்படுத்துவதும் அவ்வாணைக் குழுவுக்கு இலகுவாகியது.

சுமார் 30 பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. அதிலுள்ளவர்கள் மூன்று குழுக்களாக பிரிந்து பணியாற்றினர். மனித உரிமை மீறல் பற்றிய குழு, மன்னிப்பளிப்பது பற்றிய குழு, நஷ்டஈடு வழங்குதல் மற்றும் புனர்வாழ்வு வழங்குவது பற்றிய குழு ஆகியனவே அவை.

விசாரணைகள் இரகசியமாகவே நடத்தப்படல் வேண்டும் என்று ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டாலும் மனித உரிமைகள் அமைப்புகளின் வேண்டுகோளுக்கு இணங்க அந்த விசாரணைகள் பகிரங்கமாக நடத்தப்பட்டதுடன் அவை தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடாகவும் பகிரங்கப்படுத்தப்பட்டன.

சுமார் 21,000 பேர் ஆணைக்குழு முன்பாக சாட்சியமளித்தனர். அவர்களில் 2000 பேர் திறந்த நீதிமன்றத்தில் சாட்சிய மளித்ததுடன் ஏனையோர் ஆணைக்குழு முன்பாக சாட்சியமளித்தனர்.

தாம் செய்த தவறுகளுக்கு மன்னிப்புக்கோரி 7112 பேர் ஆணைக் குழுவுக்கு விண்ணப்பித்திருந்தனர். அதில் 849 பேருக்கு மட்டுமே மன்னிப்புக் கிடைத்தது. 5392 பேரது மன்னிப்புக் கடிதங்கள் நிராகரிக்கப்பட்டதுடன் ஒரு சிலருக்கு அதிலிருந்தும் விலக்களிக்கப்பட்டது. எனினும், குற்றமிழைத்தமைக்கான தண்டனை ஒரு சிலருக்கு மட்டுமே வழங்கப்பட்டது. சில அசம்பாவிதங்கள் கைவிடப்பட்டதுடன் குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு சிலர் விடுதலை செய்யப்பட, பலருக்கு சிறிய அளவிலான தண்டனைகள் வழங்கப்பட்டன. அதுவும் ஆணைக் குழுவுக்கு முன்பாக தென்னாபிரிக்க நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது.

தென்னாபிரிக்க உண்மைகளைத் தேடும் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் விளங்கிக் கொள்ளக் கூடிய சில சம்பவங்களை இங்கு குறிப்பிட வேண்டும். அதன் விசேட சம்பவமானது நிறபேத அரசின் ஜனாதிபதி எம்.டீ. கிளாக் ஆணைக்குழுவுக்கு முன்பாக வந்து சாட்சியமளித்தார். அவ்வேளையில் அவர் நிறபேத அரசியலில் ஈடுபட்டிருந்தபோது புரிந்த குற்றங்களை பகிரங்கப்படுத்தினார்.

அவரது சாட்சியங்களைக் கேட்டு கறுப்பின மக்கள் கொதித்தெழுந்த போதிலும் ஆணைக்குழு அவருக்கு மன்னிப்பு வழங்கியது. அந்த விடயம் ஒரு சிலரது விமர்சனத்துக்குள்ளாகும் வேளையில், இங்கு உண்மைகளைக் கொண்டு வர ஓர் ஒழுங்கின்படி அவருக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் சார்பாக செயற்பட்ட மனித உரிமைவாதிகள் கூறினர். தண்டனை வழங்குவதனால் மட்டும் அதை நிலைநாட்ட முடியாதென அவர்கள் தர்க்கித்தனர்.

நெல்சன் மண்டேலாவின் மனைவி வினீ மண்டேலா ஆணைக்குழுவின் முக்கிய பதவி ஒன்றை வகித்ததுடன். நெல்சன் மண்டேலாவின் பிரதிநிதியாகவும் அதில் செயற்பட்டார். உலகப் புகழ் பெற்ற பதவி ஒன்றில் அவர் கடமையாற்றினாலும் அவர் புரிந்த குற்றச் செயல்களும் உண்மைகளும் ஆணைக்குழுவின் முன் பகிரங்கப்படுத்தப்பட்டன. தாம் செய்த குற்றங்களில் ஒரு சிலவற்றை அவர் மறைத்தமையால் அவருக்கு முழுமையான மன்னிப்பு வழங்கப்படவில்லை. நீதிமன்றத்தில் அவருக்கு ஆறு மாத சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. அவரது மேன்முறையீடு காரணமாக அது ஒரு தண்டமாகக் கணிக்கப்பட்டு அவர் விடுதலை செய்யப்பட்டார். எவ்வாறாயினும், அவர் தற்போது மீண்டும் தென்னாபிரிக்க அரசியலில் மிக முக்கிய பங்கொன்றை வகிக்கின்றார். ஆள் கடத்தல் மற்றும் பல கொலைகளுக்காக அவர் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டிருந்ததால் அவருக்கு விடுதலை கிடைத்தது.

நிறபேதவாத அரசின் முன்னால் ஜனாதிபதியான பீ.டப். போத்தா ஆணைக்குழு முன்பாக வர மறுத்தார். அவருக்கு தண்டம் அல்லது இடை நிறுத்தப்பட்ட சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்தது. அவரது மேன்முறையீட்டின் மூலம் அவரும் விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வாறு, குற்றவாளிகள் விடுதலை செய்யப்படுவதை அறிந்த ஒரு சில மேற்கத்திய மனித உரிமை அமைப்புக்கள், குறித்த ஆணைக்குழு நீதியை நிலைநாட்டவில்லை என்று கூறியது. குற்றவாளிகளை இவ்வாறு விடுதலை செய்வதன் மூலம் எதிர்காலத்தில் நாட்டில் குற்றங்கள் மலிந்துவிடும் என்று கூறினர்.

உண்மைகளைத் தேடும் இந்த ஆணைக்குழுவை செயற்படுத்திய ஆபிரிக்க தேசிய காங்கிரஸுடைய கருத்து மிக முக்கியமானதாகும். அக்கால எல்லையில் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா ஆட்சியில் உப ஜனாதிபதியாக கடமையாற்றிய ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் தலைவர் தாயோ மபேகி இந்த ஆணைக்குழுவின் அறிக்கை பற்றி கடுமையான வினாக்களை எழுப்பினார்.

தென்னாபிரிக்காவினால் செயற்படுத்தப்பட்ட உண்மைகளைத் தேடும் நல்லிணக்கத்துக்கான ஆணைக் குழுவின் செயற்பாடுகள் அந்த நாட்டிலுள்ள அனைவரையும் திருப்திப்படுத்தும் ஒரு செயற்பாடல்ல. அந்த ஆணைக்குழுவை பலரும் விமர்சித்தனர். அது குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்கு தண்டனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட ஆணைக்குழுவல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தென்னாபிரிக்காவில் வீழ்ச்சி கண்டிருந்த தேசிய நல்லிணக்கத்தை மீளக் கட்டியெழுப்புவது அந்த ஆணைக்குழுவின் நோக்கமாகும். எனவே, அந்த ஆலோசனைக் குழுவின் வெற்றியை அதன் நோக்கத்தைக் கொண்டே கணிக்க வேண்டும்.

ஒரு நாட்டுக்குத் தேவைப்படுவதெல்லாம் மிகப் பெரிய மோதலின் பின்னர் ஏற்பட்ட அழிவினால் உண்டான புண்களை மேலும் பெரிதாக்கி வேதனையை அனுபவிப்பதல்ல. அது புண்ணை குணப்படுத்திக் கொண்டு வேதனையிலிருந்தும் மீள்வதேயாகும். அதனால்தான் தென்னாபிரிக்க முயற்சி வெற்றியீட்டியுள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேசம்

# பலஸ்தீன்
# அகன்ற முழு நிலத்தையும் மீட்பதற்கான போராட்டம்





ஸகி பவ்ஸ் (நளீமி)

புனித மஸ்ஜிதுல் அக்ஸா மீதான இஸ்ரேலிய மதக் கடும்போக்காளர்களின் அத்துமீறல்கள் அதிகரித்துச் செல்கின்றன. குறிப்பாக, மஸ்ஜிதுல் அக்ஸாவை நேர மற்றும் இட அடிப்படையில் யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மத்தியில் பிரிக்க வேண்டும் என்பதே இதற்கான பிரதான காரணமாகும். இதனை தடுத்து நிறுத்தும் நோக்குடனேயே பலஸ்தீன மக்கள் நீண்ட கத்திப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். ஒரு மாத காலமாகத் தொடரும் மக்கள் எழுச்சிப் போராட்டம் இஸ்ரேலிய அரசியலில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன? இம்மக்கள் போராட்டம் வெற்றியளிக்குமா, இடை நடுவில் பலஸ்தீன அரசியல் தலைவர்களால் ஹைஜேக்ட் செய்யப்படுமா அல்லது யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மத்தியில் அல்அக்ஸா பிரிக்கப்படும் சூழமைவுகள் காணப்படுகின்றனவா? என்பன போன்ற அரசியலுடன் தொடர்புபட்ட நடைமுறைக் கேள்விகள் ஒரு புறமிருக்க, மஸ்ஜிதுல் அக்ஸா மீது தொடரும் ஸியோனிஸ அத்துமீறலுடன் தொடர்புபட்ட வேறு சில உள்முகங்களை அரசியல் ஆய்வாளர்கள் அடையாளப்படுத்திக் காட்டுகின்றனர்.

ஸியோனிஸத்திற்கும் யூத மதத்திற்கும் இடையில் அடிப்படையில் எவ்விதத் தொடர்பும் கிடையாது. ஸியோனிஸம் என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட மதச்சார்பற்ற காலனித்துவ செயற்திட்டமாகும். கிட்டத்தட்ட 17 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட சமூக அரசியல் மாற்றங்களின் விளைவாகவே ஸியோனிஸம் உருவாக்கப்பட்டது. மட்டுமன்றி, வளர்ந்து செல்லும் ஐரோப்பாவின் பொருளாதார அரசியல் ஏகாதிபத்திய நலன்களுக்கு துணை செய்யும் ஆழமான நோக்குடனேயே ஸியோனிஸ செயற்திட்டம் வடிவமைக்கப்பட்டது என்றும் கூறலாம். இதனை எந்தளவுக்கு ஐரோப்பா புரிந்து வைத்திருக்கிறதோ, அதனை விட ஸியோனிஸ அரசை உருவாக்குதவற்கு துணை செய்த யூத சிந்தனையாளர்களான தியேட்டர் ஹர்ஸல், டேவிட் பென் கூறியன் போன்றவர்கள் அறிந்து வைத்திருந்தனர்.

ஆனால், ஸியோனிஸம் தனது இலக்கான இஸ்ரேலிய அரசை நிறுவிய நாள் முதல், மதம் என்ற காரணி பலமாக செல்வாக்குச் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதன் உச்சகட்டமே இன்று அல் அக்ஸாவை பங்கு போட வேண்டும் என்ற தீவிர மதவாதிகளின் கோரிக்கையாகும். 1967 முதல் மத ரீதியான நியாயத்தை எல்லா ஸியோனிஸ அரசாங்கங்களும் பயன்படுத்தி வருகின்றன. அதாவது, மஸ்ஜிதுல் அக்ஸா மற்றும் அதனை சுற்றியுள்ள பைதுல் மக்திஸ் பரப்பின் முழு உரிமைகளும் ஸியோனிஸ அரசில் வாழ்கின்ற யூதர்களுக்கே உரியன. அதனை யூதர்கள் முடியுமானவரை அத்துமீறி கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்ற விடயத்தை இஸ்ரேலிய அரசாங்கங்கள் தொடர்ச்சியாக பேசி வருகின்றன.

உண்மையில், மதப் பற்றின் காரணமாகவோ அல்லது யூத மக்களினுடைய மத உரிமையை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவோ இத்தகைய பிரசாரங்கள் முடுக்கி விடப்படவில்லை. மாறாக, மூன்று மிக ஆழமான சமூக உளவியல் மற்றும் வரலாற்றுக் காரணிகளை மையப்படுத்தியே இந்த மதக் காரணியை இஸ்ரேலிய அரசு பயன்படுத்துகின்றது. முதலாவது, இன்றும் சர்வதேச ரீதியில் பல நாடுகளில் சிதறி வாழும் யூதர்களை முழுமையாக இஸ்ரேல் உள்ளீர்க்கவில்லை. அவ்வாறு உள்ளீர்ப்பதில் ஏற்படும் குறைவான வேகம் ஸியோனிஸ செயற்திட்டத்திற்கு பிரதான சவாலாகும். ஏனெனில், தொடர்ச்சியான மக்கள் அதிகரிப்பு என்பது இஸ்ரேலிய ஸியோனிஸ தேசத்தினுடைய இருப்புடன் தொடர்புபட்ட விவகாரமாகும். கடந்த காலங்களில் ஏற்பட்ட உலக மயமாக்கல் மற்றும் ஜனநாயக மயமாக்கல் போன்ற நியாயங்களின் அடிப்படையில், இஸ்ரேலுக்கு வெளியே இருப்பதை யூதர்கள் அதிகம் விரும்பும் நிலை காணப்படுகின்றது. அதனை விட, யூத இளைஞர்களுக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள மதச்சார்பற்ற மனோநிலையும் ஸியோனிஸ தேசத்திற்கான வருகையை பாதித்துள்ளது. இந்தப் பின்புலத்தில், யூதர்களுக்கு மத்தியில் ஆன்மிக எழுச்சி தேவை என்ற தொனிப்பொருளில் ஸியோனிஸ ஆதரவாளர்கள் பிரசாரம் செய்து வருகின்றனர். இதற்கூடாக, யூதர்களுக்கு மத்தியில் இஸ்ரேலிய தேசத்திற்கு வருவதன் ஆன்மிகப் பெறுமானங்கள் பற்றி விழிப்புணர்வூட்டப்படுகின்றன. மஸ்ஜிதுல் அக்ஸா மீதான அத்துமீறல்கள், அதில் யூத வணக்க வழிபாடுகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வேண்டி மேற்கொள்ளப்படும் அரசியல் பிரயத்தனங்கள் என்பவற்றின் பின்புலத்தில் ஸியோனிஸத்தின் இப்பரந்த இலக்கை பிரித்து நோக்க முடியாது.

அடுத்து, இஸ்ரேல்-பலஸ்தீன் பிரச்சினையின் மூலம் முழுமையான ஸியோனிஸ ஆக்கிரமிப்பு (Total occupation) என்ற தோற்றப்பாட்டிலிருந்து விடுவித்து, இரு சமூகங்களுக்கிடையிலான கிளை விவகாரங்கள் (Compartmentalizing the problem) மட்டுமே பிரச்சினையை தோற்றுவித்துள்ளன என்ற கருத்தை உருவாக்குவதற்கும் ஸியோனிஸ அரசு மதத்தை கருவியாகப் பயன்படுத்துகின்றது. குறிப்பாக, வடக்கு இஸ்ரேலிய நகரான ஹைபா முதல் தெற்கு இஸ்ரேலிய நகரான அஸ்கலான் வரையான 50 வருட ஸியோனிஸ ஆக்கிரமிப்பு பலஸ்தீனப் பிரச்சினையின் அடிப்படையல்ல. மாறாக, ஜெரூஸலத்தில் அமைந்துள்ள சில வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் உரிமை யாருக்குரியது என்ற பிரச்சினையே இரு சமூகங்களுக்கிடையிலான முறுகல் நிலைக்கான காரணமாகும் என்ற மக்களின் பொது அபிப்பிராயத்தை கட்டியெழுப்புவது ஸியோனிஸத்தின் அக்ஸா மீதான அத்துமீறல்களுக்கான மற்றொரு காரணமாகும். இதற்கூடாக "we are same as other nations" என்ற கருத்தை ஆழமாக பதியவைக்க முயற்சி செய்தல். அதாவது, எல்லா நாட்டிலும் வரலாற்று மரபுரிமைகளுடன் தொடர்புட்ட இனங்களுக்கிடையிலான மோதல்கள் காணப்படுகின்றன. அது போன்றே இஸ்ரேலிய-பலஸ்தீன விவகாரமும் கருதப்பட வேண்டும் என்பதினூடாக சர்வதேசத்தை திருப்திப்படுத்த ஸியோனிஸம் அதீத முயற்சி செய்கிறது.

கடந்த சில தாசாப்தங்களாக பலஸ்தீனர்களின் அதிகார பரப்பெல்லையை கட்டுப்படுத்துவதினூடாக அவர்களை சிறுமைப்படுத்தலாம் என ஸியோனிஸம் சிந்தித்து வந்திருக்கிறது. இதற்காகவே மேற்குக் கரை, காஸா மீதான தாக்குதல்கள் மற்றும் பலஸ்தீன அதிகார சபையை குட்டிச் சுவராக்குதல் போன்ற செயற்பாடுகளை இஸ்ரேலிய அரசு மேற்கொண்டது. என்றாலும், இறுதி வரை அவர்களால் பலஸ்தீன சிவில் சமூகத்தை அடக்க முடியவில்லை. விளைவாக ஸியோனிஸ சிந்தனையாளர்கள் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்துள்ளனர். அதுவே, பலஸ்தீன மக்களின் அதிகாரம், இனப் பரம்பல் மற்றும் பண உட்பாய்ச்சல் போன்ற கட்டுப்பாட்டுக் கருவிகளைப் பயன்படுத்தி அவற்றால் மாத்திரம் ஸியோனிஸத்தை நிலைநாட்ட முடியாது. மாறாக, பலஸ்தீனர்களினுடைய அடையாளத்தின் மீதே கை வைக்க வேண்டும். அதுவரை ஸியோனிஸத்திற்கு பலஸ்தீன நிலத்தில் பாதுகாப்பில்லை என்பதாகும்.

**அக்ஸாவை விடுதலை செய்வதற்கான போராட்டம் என்ற குறுகிய வட்டத்தில் பலஸ்தீன் விவகாரத்தை நோக்குவதை முஸ்லிம் உம்மா தவிர்ந்து கொள்ள வேண்டும். மாறாக, அகன்ற பலஸ்தீன் முழு நிலத்தையும் மீட்பதற்கான போராட்டம் என்ற சிந்தனையை வலிமைப்படுத்துவது அத்தியாவசியமாகும்.**

அதாவது, அல்அக்ஸாவும் அகன்ற பைதுல் மக்திஸ் பரப்பும் பலஸ்தீன முஸ்லிம்களின் மத ரீதியான மையம் என்பதை விட, பலஸ்தீன தேசியத்திற்கான அடையாளமாகவும் (National identity) நோக்கப்படுகின்றன என்பது ஸியோனிஸத்தின் புரிதலாகும். எனவே, இதற்கான வாய்ப்பை நீண்ட நாட்களாக ஸியோனிஸ செயற்திட்ட கொள்கை வகுப்பாளர்கள் இலக்கு வைத்திருந்தனர்; பல முறை முயற்சி செய்துள்ளனர். ஆனால், இன்று முழு மத்திய கிழக்கிலும் காணப்படும் போர்ச் சூழல் மற்றும் அங்கு உள்நாட்டு யுத்தங்களும் நிலவுவதால், குறித்த பலஸ்தீனர்களது அடையாளத்தைத் தாக்கும் முயற்சியில் இவர்கள் இறங்கியுள்ளனர். இதனையே பலஸ்தீன ஜிஹாத் அமைப்பின் தலைவர் ராஇத் ஸலாஹ் எமது கட்டடங்களைத் தாக்கி சலித்துப் போன ஸியோனிஸம் எமது தனித்துவத்தின் மீது போரை ஆரம்பித்திருக்கிறது எனக் குறிப்பிடுகிறார். இத்தகைய மூன்று முக்கியமான சமூக, அரசியல் மற்றும் உளவியல் காரணிகள் அக்ஸா மீதான மதச்சார்பற்ற ஸியோனிஸத்தின் அத்துமீறல்களின் பின்னால் தொழிற்படுகின்றன.

→ 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்

மூலம்: கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

(தொடர் 74)



கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய “அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா” (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழிபெயர்ப்புத் தொடர்.

### நுபுவ்வத்தின் வழியிலமைந்த கிலாபத் மீள உருப்பெறல்

இந்த சுப செய்தியை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக ஹுதைபா பின் யமான் பின்வருமாறு அறிவிக்கின்றார்: ''அல்லாஹ் நாடிய கால அளவு உங்களுக்கு மத்தியில் நுபுவ்வத் இருக்கும். பின்னர், அல்லாஹ் அதனை நீக்குவதற்கு நாடினால் நீக்கிவிடுவான். பின்னர், நுபுவ்வத்தின் வழியிலமைந்த கிலாபத் உங்கள் மத்தியில் ஏற்படும். அல்லாஹ் நாடிய கால அளவு அது நீடிக்கும். பின்னர், அல்லஹ் அதனை நீக்க விரும்பினால் நீக்கிவிடுவான். பின்னர், உங்கள் மத்தியில் அநீதமான ஆட்சி நிகழும். அல்லாஹ் நாடிய கால அளவு அது தொடரும். பின்னர், அல்லாஹ் அதனை அகற்ற விரும்பினால் அகற்றி விடுவான். பின்னர், உங்கள் மத்தியில் கொடுங்கோல் ஆட்சி தோன்றும். அல்லாஹ் நாடிய கால அளவு அது நீளும். பின்னர், அல்லாஹ் அதனை நீக்க நாடினால் நீக்கிவிடுவான். பின்னர் நபி வழியிலமைந்த கிலாபத் தோற்றம் பெறும். பின்னர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மௌனமானார்கள்.'' (முஸ்னத் அஹ்மத்)

அடக்குமுறை, அநீதம், அத்துமீறல் ஆகியன மலிந்த காலம் மறைந்து நபி வழியில் அமைந்த கிலாபத் தோற்றம் பெறும் என இந்த ஹதீஸ் நற்செய்தி சொல்கின்றது. அங்கு நீதி மற்றும் கலந்தாலோசனையின் அடிப்படையில் அமைந்த ஆட்சி நிலை பெறும். இன்னும், அல்லாஹ் விதித்த வரையறைகளும் மனிதர்களது உரிமைகளும் பேணப்படும்.

### யூதர்களுக்கு எதிரான வெற்றி

முஸ்லிம்கள் யூதர்களை வெற்றி கொள்வார்கள் என்பது பிரிதொரு நற்செய்தியாகும். அல்லாஹ்வின் தூதர் கூறியதாக இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) பின்வருமாறு அறிவிக்கின்றார்:

''யூதர்கள் உங்களுடன் போரிடுவார்கள். நீங்கள் அவர்களை வெற்றி கொள்வீர்கள். பின்னர், கற்கள் உங்களைப் பார்த்து, முஸ்லிமே! எனக்குப் பின்னால் ஒரு யூதன் மறைந்திருக்கிறான். அவனைக் கொன்று விடு என்று கூறும்.''

(முத்தபகுன் அலைஹி)

மேற்குறிப்பிட்டவாறு அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கும் பிரிதொரு ஹதீஸ் வந்துள்ளது. முஸ்லிம்கள் யூதர்களுடன் போரிடாதவரை இறுதி நாள் ஏற்பட மாட்டாது. முஸ்லிம்கள் யூதர்களைக் கொலை செய்வர். யூதர்கள் கற்களின் பின்னாலும் மரங்களின் பின்னாலும் ஓடி ஒளிந்து கொள்வர். அப்பொழுது கற்களும் மரங்களும், ஓ முஸ்லிமே! அல்லாஹ்வின் அடியானே! இதோ எனக்குப் பின்னால் ஒரு யூதன் இருக்கின்றான். நீ இங்கு வந்து அவனைக் கொலைச் செய் என்று கூறும்.''

(ஸஹீஹ் முஸ்லிம்)

கற்களும் மரங்களும் வார்த்தைகளால் பேசுமா? (அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் ஒன்றாக இருக்கும் எந்த ஒரு செயலும் அவனுக்கு கடினமானதல்ல.) அல்லது சைக்கினையால் பேசுமா? (அனைத்தும் யூதர்களைக் காட்டிக் கொடுக்கும்; அவர்களது மறைவிடங்களை வெளிப்படுத்தும்.) என இரு வேறுபட்ட கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

அதன் கருத்து எவ்வாறு இருப்பினும், உலகிலுள்ள அனைத்தும் முஸ்லிம்களுக்கு சார்பாகவும் முஸ்லிம்களது பகைவர்களான யூதர்களுக்கு எதிராகவும் செயற்படும் என்பதே அதன் பொருளாகும். முஸ்லிம்களுக்கு வெற்றி கிட்டும் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகம் இல்லை. முஸ்லிம்கள் எப்பொழுதும் எவராலும் அடக்க முடியாத சக்தியாக திகழ்வார்கள். யூதர்கள் அல்லாஹ்வினால் அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இழிநிலையை அடைவார்கள் என்பதையும் இந்த ஹதீஸ் உணர்த்தி நிற்கின்றது.

''அவர்கள் எங்கு காணப்பட்ட போதிலும் அவர்கள் மீது இழிவு விதிக்கப்பட்டு விட்டது. அவர்கள் பூமியில் புரிந்து வரும் அட்டூழியங்கள், குழப்பங்கள் காரணமாகவே அவர்கள் இழிநிலையை அடைந்துள்ளனர். இவ்வேதமாகிய அல்லாஹ்வின் உடன் படிக்கையைக் கொண்டும் விசுவாசம்கொண்ட மனிதர்கள் அளிக்கும் அபயமெனும் உடன்படிக்கையைக் கொண்டுமேயன்றி அவர்கள் அதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.'' (ஆலு இம்ரான்: 112)

விதிவிலக்காக இழிநிலையிலிருந்து அவர்கள் தற்காலிகமாக தப்பியிருந்த போதிலும் அவர்களது அடிப்படைப் பண்பான இழிநிலையை அவர்கள் திண்ணமாக அடைவார்கள்.

### அல்லாஹ்வின் உதவி பெற்ற குழு ஒன்று பூமியில் தொடர்ந்திருக்கும்

இந்த சுப செய்தியை நபித்தோழர்கள் பலர் அறிவிப்புச் செய்துள்ளனர். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக முஆவியா (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கின்றார். ''எனது உம்மத்தினருள் அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றும் குழு ஒன்று தொடர்ந்து இருந்து வரும். யார் அவர்களுக்கு உதவி செய்யாது கைவிட்டாலும் அவர்களுடன் முரண்பட்டாலும் அது அவர்களுக்கு தீங்காக அமையாது. அல்லாஹ்வின் கட்டளை வரும் வரை இந்நிலை தொடரும். எப்பொழுதும் அவர்கள் மக்களை மிகைத்தவர்களாகவே விளங்குவர்.''

(முத்தபகுன் அலைஹி)

இந்த ஹதீஸை உமர், முகீரா, ஸவ்பான், அபூ ஹுரைரா, குர்ராபின் இயாஸ், ஜாபிர், இம்ரான் பின் ஹுஸைன், உக்பா பின் ஆமிர், ஜாபிர் பின் சமுரா (ரழியல்லாஹு அன்ஹு) ஆகியோர் அறிவிப்புச் செய்துள்ளனர். அபூ உமாமா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களது அறிவிப்பு இவ்வாறு அமைகின்றது:

''எனது உம்மத்தினரில் மார்க்கத்தைப் பின்பற்றும் ஒரு குழுவினர் வெற்றி பெற்றவர்களாகவே விளங்குவர். எதிரிகளை அவர்கள் கட்டுப்படுத்துவர். யார் முரண்பட்டாலும் அது அவர்களுக்கு தீங்காக அமையாது. அவர்கள் வாழ்வில் ஏற்படும் நோய், நொய்மையே அவர்களைப் பாதிக்கும். அல்லாஹ்வின் கட்டளை வரும் வரை இந்நிலை தொடரும். அல்லாஹ்வின் தூதரே அவர்கள் எங்குள்ளனர் என நபித்தோழர்கள் கேட்ட போது பைத்துல் மக்திஸிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் என நபிகளார் பதிலளித்தார்கள்.''

(முஸ்னத் அஹ்மத்)

## சம்பந்தன் ஐயா அவர்களே...

(11 ஆம் பக்கத் தொடர்)

பெரிய தலைவர்களெல்லாம் நேர்மையாகப் பேசுகின்றபோது அங்கிருக்கின்ற சிறிய மாகாண சபை உறுப்பினர்கள், இனவாதம் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கு முஸ்லிம்கள் காட்டைப் பிடிக்கின்றார்கள், காட்டை அழிக்கின்றார்கள், வில்பத்தைப் பிடிக்கின்றார்கள், முல்லைத்தீவு முறிப்பைப் பிடிக்கின்றார்கள் என்றெல்லாம் அப்பட்டமான பொய்களை ஊடக வளங்கள் மற்றும் வெளிநாட்டுப் பலங்களைப் பயன்படுத்தி இந்த சமுதாயத்தை ஒரு பிழையான சமூகமாக சித்தரிக்கிறார்கள். காடு பிடித்து வடபுலத்தை ஆக்கிரமிக்க வந்த சமூகம் போல தமிழ்த் தேசிய கூட்டமைப்பினுடைய மாகாண சபை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுகிறார்கள்.

முல்லைத்தீவு முறிப்பு அந்த முஸ்லிம் மக்கள் வாழ்ந்த பூமி. புலிகள்தான் அவர்களைத் துரத்தினார்கள். அவர்கள் விரும்பி வரவில்லை. அந்த மண்ணை விட்டு வெளியேறுகின்ற போது அழுது புலம்பிக் கொண்டு வந்தார்கள். அவர்களுடைய சொத்துக்களைக் கொண்டு வர புலிகள் விடவில்லை.

இப்படித் துரத்தப்பட்ட 2700 முஸ்லிம்கள் யுத்த நிறுத்தத்துக்குப் பின்னர் முல்லைத்தீவிற்கு மீள்குடியேற்றத்திற்குப் போனார்கள். இன்று இவர்களில் 700 முஸ்லிம் குடும்பங்கள் மட்டுமே வாழ்கின்றன.

2000 முஸ்லிம் குடும்பங்கள் திரும்பி வந்துவிட்டன. ஏன்? இருக்க இடமில்லை. 10 கிராம சேவகர் பிரிவுகளிலே வாழ்ந்தவர்கள்! அன்று யுத்த காலத்திலே அங்கு வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் புலிகளால் குடியேற்றப்பட்டார்கள். இன்று சொந்த மக்களுக்கு இருப்பதற்கு இடமில்லாமல் அவர்கள் துடிக்கின்றார்கள். கடந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் 900 ஏக்கர் காணியை பிரதான வீதியை அண்டிய பகுதிகளில் ஒதுக்கிக் கொடுத்து அவர்களைக் குடியேற்ற நடவடிக்கை எடுத்தபோது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசியல்வாதிகளுடைய அடிவருடிகள் அங்கு வந்து காணிகளைத் துப்புரவு செய்வதற்காக எடுத்துச் சென்ற இயந்திரங்களுக்கு முன்னாள் படுத்துக் கொண்டு, புத்தளத்து முஸ்லிம்கள் இங்கு வந்து குடியேறுகிறார்கள் என்ற அப்பட்டமான பொய்யை உலகமெல்லாம் வதந்தியாகப் பரப்பினார்கள். வாய் பேச முடியாத சமூகம் போன்று, யாரும் கேட்பதற்கோ, பார்ப்பதற்கோ வக்கற்ற சமூகம் போன்றுதான் அவர்களுடைய நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

இன்று அந்த 2000 குடும்பங்களும் ஆலம்குடா மற்றும் இதர முகாம்களிலே துன்பத்தோடு, பசியோடு, பட்டினியோடு, கஷ்டத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றன. கடந்த பாராளுமன்றத் தேர்தலின்போது முல்லைத்தீவு முஸ்லிம்களுடைய வாக்குப் பதிவை நாங்கள் பார்த்தோம். அங்கு 1000 வாக்குகள் கூட இருக்கவில்லை. அவர்களுடைய பெயர்கள் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டிருந்தன. அவர்களுடைய வாக்காளர் பதிவுகள் புத்தளத்திலும் இல்லை; முல்லைத்தீவிலும் இல்லை; எங்குமே இல்லை. அப்படிப்பட்ட ஒரு சமூகமாக அவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற சம்பந்தன் ஐயா அவர்களைப் பார்த்து நான் ஒன்று கேட்கின்றேன்; உங்களுக்கு 16 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். நீங்கள் இந்த நாட்டிலே எதிர்பார்க்கின்ற ஒரு தீர்வை, பொறிமுறையை இந்தப் பாராளுமன்றம் அங்கீகரிக்குமென்றோ அல்லது நீங்கள் விரும்புவதை இந்த அரசு தருமென்றோ நினைப்பீர்களாக இருந்தால், பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்துக்கும் உதவுவது உங்களது கடமையென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

## பலஸ்தீன்: அகன்ற முழு...

(13 ஆம் பக்கத் தொடர்)

பலஸ்தீனத்தை மையப்படுத்திய சர்வதேச முஸ்லிம் உம்மாவின் போராட்டம் ஸியோனிஸத்தின் இவ்விலக்குகளை மிகச் சரியாக புரிந்த நிலையில் அமைய வேண்டும். இந்த வகையில், அக்ஸாவை விடுதலை செய்வதற்கான போராட்டம் என குறுகிய வட்டத்தில் பலஸ்தீன விவகாரத்தை நோக்குவதை முஸ்லிம் உம்மா தவிர்ந்து கொள்ள வேண்டும். மாறாக, அகன்ற பலஸ்தீன் முழு நிலத்தையும் மீட்பதற்கான போராட்டம் என்ற சிந்தனையை வலிமைப்படுத்துவது அத்தியாவசியமாகும். இன்னும், அக்ஸாவை வெறும் மத அடையாளம் என்ற பார்வைக்கும் அப்பால் நின்று, அதனை பலஸ்தீனர்களின் தேசிய அடையாளமாக வெளிச்சமிட்டுக் காட்டுவது இன்றியமையாததாகும். மதச்சார்பற்ற, இஸ்லாமிய, லிபரலிஸ மற்றும் கம்யூனிஸ சிந்தனை முகாம்களைச் சேர்ந்த பலஸ்தீனர்கள் அனைவரினதும் தேசிய அடையாளமாக பைதுல் மக்திஸை அறிமுகப்படுத்தல் வேண்டும். அதேபோல், சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்படும் நவீன காலனித்துவமாக இஸ்ரேலை நோக்கி யூதர்கள் அழைத்து வரப்படுவதற்கான ஸியோனிஸத்தின் ஆன்மிக மதப் பிரசாரங்களை விளம்பரப்படுத்தல் அவசியமாகும். மதப் பிரசாரம் ஸியோனிஸத்தின் காலனியக் கருவி என்ற விடயம் அழுத்தமாக முன்வைக்கப்பட வேண்டும். மேற்கூறப்பட்ட கூறுகளை மையப்படுத்திய கருத்தியல் போராட்டத்தை சர்வதேச மயப்படுத்துவது, பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் அடுத்த கட்ட நகர்வுக்கு பெரிதும் துணை செய்யலாம்.

## நல்லாட்சி எண்ணக்கரு...

(07 ஆம் பக்கத் தொடர்)

அப்படியிருக்க, கொழுப்புக் கும்பல் என்று ரணில் விக்கிரமசிங்கவினால் வர்ணிக்கப்படும் விமல் வீரவன்ச, வாசுதேவ, தினேஷ் குணவர்தன போன்றோர் வீம்பாக இந்த நல்ல வாய்ப்பை எதிர்ப்பதாகவே மஹிந்த அரசின் அமைச்சர்கள் பலரும் கூறியுள்ளனர்.

இப்படிச் சொல்வதனால் புதிய அரசாங்கம் அனைத்து விடயங்களிலும் நேர்மையாக நடக்கிறது என்று அர்த்தமல்ல. குடும்ப ஆட்சி பற்றி விமர்சித்த அர்ஜுன ரணதுங்க தனது உடன் பிறந்த தம்பிக்கு துறைமுக அதிகார சபையின் தலைமைத்துவத்தை வழங்கியுள்ளார். இதையொத்த நிகழ்வுகள் பல நடந்துள்ளன; மேலும் நடக்கலாம். நல்லாட்சி என்ற எண்ணக்கரு இன்று ஒரு கற்பனையாகவே பேசப்படுகிறது. அதற்கான முக்கிய காரணம் மக்கள் இலங்கையின் நிலைமையை அறியாது அதிக எதிர்பார்ப்புக்களை வளர்த்துக் கொண்டதாகும். சில தரப்பினர் விரக்தியடைந்திருப்பதும் உண்மைதான். ஆனால், நம்பிக்கை இழந்துவிடும் அளவுக்கோ, முன்னைய அரசுடன் ஒப்பிடும் அளவுக்கோ நிலைமை இன்னும் மோசமாகவில்லை.

அமைச்சர்களை அளவுக்கதிகமாக புகழ்ந்து, அவர்களிடம் அளவுக்கதிகமாக எதிர்பார்த்து, போலியான கௌரவத்தை வழங்கி, சுயநல நோக்கங்களை அடைந்து கொள்ளும் வர்த்தக நிறுவனங்கள், தனி மனிதர்கள்தான் அரசின் பிழையான போக்குக்கு வகை சொல்ல வேண்டும். அரிதாகவே கிடைக்கும் இதுபோன்ற சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தி இனங்களுக்கிடையில், மதங்களுக்கிடையில் புரிந்துணர்வை, நல்லிணக்கத்தை, சகவாழ்வை ஏற்படுத்துவதை விட்டு விட்டு மீண்டும் ஒரு ராஜபக்ஷவை உருவாக்காதிருக்க ஜனநாயக விழுமியங்களில் நம்பிக்கை கொண்டோர் அணி திரள வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஞ்சள் கனவுகள்

இங்கிலாந்திலிருந்து
சமீலா யூசுப் அலி

இங்கிலாந்தின் காலநிலைக்கும் காதலுக்கும் வித்தியாசமில்லை என்று கூறுவார்கள். இரண்டும் எப்போது நன்றாக இருக்கும். எப்போது வானம் கறுத்து மழை பொழியும் என்று எதிர்வுகூற முடியாது.

அடிக்கடி மழை அடர்த்தியாக இல்லாவிட்டாலும், ஒரு மயிலிறகு கன்னம் வருடுவது போன்று சில்லென்று தூறிக் கொண்டேயிருக்கும். எந்தப் பருவ காலமாய் இருந்தாலும் மழை பொழிவு இல்லாமல் இங்கிலாந்து இல்லை.

சில நாட்களில் ஒரே அந்திக்குள் கூவி வரும் குளிர்காற்று, கத கதப்பான சூரிய வெப்பம், செல்லமான மழைத் தூறல் மூன்றையும் அனுபவிக்க முடியும்.

தட்ப வெட்பநிலை மாற்றங்களுக்கேற்ப உடைகளையும் மனோநிலையையும் சற்று சரி செய்து கொண்டால் இந்தக் குளிர்த்தேசக் காலநிலையை சந்தோஷமாகக் கடந்து சென்று விடலாம்.

நான் இங்கு வந்திறங்கியபோது டிசம்பர் 26 முன்னிரவு, கிறிஸ்துமஸுக்கு அடுத்த நாள்; விமானம் தாழப் பறந்தபோது ஐக்கிய இராச்சியமே ஒளி இராச்சியமாய் மின்னிக் கொண்டிருந்தது.

ஹீத்ரு விமான நிலையத்திலிருந்து வெளியே வந்ததும் வெட வெடக்கும் குளிர் உடை தாண்டி எலும்பு தொட்டது. அது வரை கதைகளிலும் கனவுகளிலும் மாத்திரமே உணர்ந்திருந்த பனிக்காலம் அகல விரிந்திருந்தது. கண்களை அகல விரித்து அள்ளிக் கொண்டேன்.

டிசம்பர், ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்கள் இங்கிலாந்தின் Winter எனப்படும் குளிர் மாதங்கள். இந்தக் காலத்தில் சாதாரணமாக வெப்பநிலை 2 இலிருந்து 7 பாகை செல்ஸியஸுக்குள் இருக்கும். சில சமயங்களில் வெப்பம் ஸீரோ டிகிரிக்கு குறைந்து விடுவதுமுண்டு. இலங்கை போன்ற வெப்ப மண்டல நாடுகளிலிருந்து வருபவர்களுக்கு சவாலான காலம் இதுதான்.

முழுதும் போர்த்திய உடைக்கு மேலால் இன்னும் அங்கிகளும் கழுத்தைச் சுற்ற மப்ளர்களும் மட்டுமல்லாது குளிர் கால சப்பாத்துக்களும் அணிந்தாக வேண்டும். வீடுகளில் ஒவ்வோர் அறையிலும் ஒரு கணப்பு அல்லது ஹீட்டர் இருக்கும். குழாய்களில் ஆண்டு முழுதும் வெந்நீர் ஓடிக் கொண்டிருக்கும். கோப்பி அருந்தும் வழக்கத்திற்கும் குளிருக்கும் அதிகம் சம்பந்தம் இருக்க வேண்டும். இங்கிருப்பவர்கள் வித விதமான பெயர்களில் அதிகம் கோப்பி அருந்துகிறார்கள்.

குளிர் காலங்களில் நாம் அன்றாடம் சந்திக்கும் மனிதர்களில் கூட ஓர் இறுக்கம் வந்து விடுகிறது. பொதுவாக, இந்தக் காலத்தில் அணியும் ஆடைகள் மண் நிறம் சார்ந்த இருண்ட வர்ணங்களினாலானவை.

சில சமயங்களில் 8 மணிக்கு உதயமாகி 4 மணிக்குள்ளே சூரியன் தன் அலுவல்களை முடித்துக் கொண்ட சோம்பலுடன் கிளம்பி விடுகின்றது. வெண்பனி பெய்யும் போது மழை விழுவதைக் காட்டிலும் கொஞ்சம் வித்தியாசமாக டக டக என்ற அதிர்வு கேட்கும்.சில வெள்ளித் துகள்களாக கையில் கரையும் பனி சில சமயங்களில் வீட்டுக் கூரைகளிலும் பாதைகளிலும் வாகனங்களின் முதுகுகளிலும் கனவுகளாக உறைந்திருக்கும்.

குளிர் காலத்தைத் தொடர்ந்து மார்ச், ஏப்ரல்,மே மலர்கள் மயக்கும் Spring எனப்படும் இளவேனில் காலம் ஆரம்பமாகி விடுகிறது. மார்ச் இறுதியாகும்போது குளிர் காற்றும் ஏப்ரலில் தூறல் மழையும் இள வெயிலும் அடுத்தடுத்து வரும் ஒரு வித்தியாசமான பருவமிது.

இந்த மண்ணில் எதை வீசினாலும் முளைக்கும் என்று சொல்வார்கள். இலங்கையில் போகன் விலா மலர்களை ஒத்து இங்கு வித விதமான நிறங்களில் கிளை கொள்ளாமல் ரோஜாக்கள். எங்கு பார்த்தாலும் மலர்களின் அணி வகுப்பு. இளவேனில் கோடை காலங்களில்தான் மக்களை திரள் திரளாகப் பாதைகளில் காண முடிகிறது.

ஜூன், ஜுலை, ஆகஸ்ட் மாதங்கள் ஆங்கிலக் கோடை காலம். சாதாரணமாக கோடையில் 9°C இலிருது 18°C ஆக வரையிலான வெப்பநிலை இருக்கும். மிக அரிதாக 30°C க்கு வெப்பம் எகிறிக் குதிப்பதுமுண்டு. அப்போது Heat Wave எனும் வெப்ப அலைகளின் தாக்குதல் பற்றி அரசு முன்னெச்சரிக்கை விடுத்துவிடும். ஆளுக்கொரு தண்ணீர்ப் போத்தலும் நிறைய பழப் பானங்களுமாய் உடம்பில் நீரைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

கோடை காலம் இங்குள்ள மக்களுக்கு மிகப் பிடித்தமான காலம். பிரகாசமான வர்ணங்களில் உடைகளும் குதூகலமான மனோநிலையும் உற்சாகமும் பீறிட்டதாக சூழல் அப்படியே நிறம் மாறிவிடும். ஸ்ரோபரி, செர்ரி, ப்ளூ பெர்ரி என பல்வேறு வகையான கனி வர்க்கங்கள் சந்தைகளில் மலிந்திருக்கும். மேலதிகமாக 'Pick Your Own Fruits' பண்ணைகளுக்கு நேரடியாகச் சென்று அங்கு நாங்களே பழங்களைப் பறித்து விலை கொடுத்து வாங்கி வரவும் முடியும். அது ஓர் உணர்வுபூர்வமான அனுபவம்தான்.

மிக நீண்ட பகற் பொழுதுகள் கோடை காலத்தில் நெடித்துச் செல்லும். சில சமயங்களில் காலை 4 மணியளவில் உதிக்கும் சூரியனைக் கெஞ்சி அனுப்பி வைப்பதற்குள் இரவு 10 மணி ஆகிவிடும் நாட்களும் உண்டு. அநேகமாக இந்தக் காலங்களில்தான் சோதனையாக ரமழானும் ஆரம்பிக்கின்றது. கிட்டத்தட்ட 18, 19 மணி நேரம் நோன்பு வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்துவிடுகிறது. இங்கு தொடர்ந்து வாழ்பவர்கள் மிக இலகுவாக இதை க்கடந்து சென்று விடுகிறார்கள், அல்ஹம்துலில்லாஹ்.

செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்கள் Autumn எனப்படும் இலையுதிர் காலத்துக்குரியன. வெப்பநிலை மிக மோசமாகக் கீழிறங்கும் பருவமிது. இலைகள் மஞ்சளித்து சிவப்பும் மஞ்சளுமாய் சுற்றுச் சூழல் ஒரு கனவுலகத்தின் பிரதி மாதிரி ஆகிவிடும். இலையுதிர் காலத்தில் குளிருக்கு மெல்லியதாய் மேலங்கிகள் அணிந்தாக வேண்டும். விட்டு விட்டு மழைத் தூறலும் விடாத குளிர் காற்றும் மீண்டுமொரு கடுங்குளிர் காலத்தின் வரவைக் கட்டியம் கூறும். இலையுதிர்ந்த வீதிகளில் நடந்து செல்வது எனக்கு நிரம்பவுமே பிடிக்குமொரு சமாச்சாரம். ஓர் எல்லையற்ற பெருவெளியில் நீந்திச் செல்லும் உணர்வினைத் தரும் அபூர்வக் கணங்கள் அவை. என்றாலும் இலையுதிர் காலத்தின் அமைதியில் ஒரு விதமான மெலன்கொலி (Melancholy) சொல்லொணாத் துக்கம் நிரம்பி இருப்பதாக உணர்கிறேன்.

மக்களின் பேசுபொருளில் மிக முக்கியமான அங்கம் இந்தக் காலநிலைக்கு உண்டு. ஒருவருக்கொருவர் அறிமுகம் ஆகும்போதும் அன்றாடம் பணிபுரியும் சகபாடிகளைச் சந்திக்கும்போதும் காலநிலை பற்றிப் பேசும் வழக்கம் பிரித்தானியக் கலாசாரத்தின் பிரிக்க முடியாத ஒரு கூறு.

இதை நான் எழுதிச் செல்லும்போது இங்கு மஞ்சள் கனவுகள் ஆரம்பமாயிற்று. ஆமாம், மிகச் சரியே இது இலையுதிர் காலம்.!



தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

# பெற்றோர், ஆசிரியர் பங்களிப்பு

றுவைதா மதீன்
ஆசிரியை

குடும்பத்தில் பிறக்கும் ஒவ்வொரு பிள்ளையும் பல்வேறு திறமைகளையும் ஆற்றல்களையும் கொண்டவர்களாகத் திகழ்கின்றனர்.

களிமண் உருண்டை குயவனின் கைப்பதத்தில் பல வகை வினைப் பொருட்களாகப் பரிணமிக்கும்போது அவனுடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவ்வாறே கல்விகற்கும் ஒவ்வொரு பிள்ளையும் எதுவுமே தெரியாதவர்களாக அறியாதவர்களாக இருப்பர். அவர்களது அறிவையும் ஆற்றலையும் வளர்க்கும் விதத்தில் வழிநடத்தும் போது அவர்களது உள்ளார்ந்த திறமைகள் வெளிவருகின்றன.

பிள்ளைகளின் திறமைகள் வளர வேண்டுமானால் சமூகச் சூழல், குடும்பச் சூழல் சிறப்பாக அமைய வேண்டும். ஒரு குடும்பத்தில் தந்தை நல்ல வாசிப்புப் பழக்கமுடையவராக இருந்தால் பிள்ளையும் வாசிக்கும். வீட்டிலுள்ளோர் சித்திரம் வரைபவர்களானால் பிள்ளையும் வரைதலில் ஆர்வம் காட்டும். இவ்வாறு நல்ல பழக்கவழக்க நாகரிகப் பண்புகள் யார் யாரிடமெல்லாம் இருக்கிறதோ அப்பண்புகளைப் பிள்ளைகளும்



பிடித்துக் கொள்கிறார்கள்.

மாறாக, வாசிப்புப் பழக்கமே இல்லாத ஒரு குடும்பச் சூழலில் வளரும் குழந்தை கற்றலிலும் ஆற்றல் வளர்ச்சியிலும் திறமை காட்டத் தயக்கம் காட்டுவர். அது மட்டுமல்லாது, சோம்பல் பின்னடைவுகளையும் வெளிக்காட்டுவர்.

கல்வி கற்கும் மாணவர்களாக உங்கள் பிள்ளைகள் இருக்கலாம். அவர்களை கற்றலில் மட்டும் ஈடுபடுத்தினால் மட்டும் போதாது. பாடசாலையில் பல்வேறு வகையான போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. விளையாட்டுப் போட்டிகள், தமிழ் மொழித்தின போட்டிகள், ஆங்கில, சுற்றாடல், சித்திரம் போன்றவற்றோடு சமய நிகழ்ச்சிகளும் நிறைய உள்ளன. இவற்றில் பொருத்தமானதைத் தெரிவு செய்து பிள்ளையின் திறமையை பூரணமாக வெளிக் கொண்டு வருவதன் மூலம் பிள்ளை சிறந்த ஆற்றலும் அறிவும் சமூகப் பண்பாடுள்ளதாகவும் வளர வாய்ப்பேற்படும்.

'தட்டுங்கள் திறக்கப்படும்' என்பதை, கதவைத் தட்டுங்கள் கதவு திறக்கும் என்று விளங்கிக் கொண்டோம். ஆனால், இன்று இன்ரநெற்றைத் தட்டினால் வேண்டிய வழி பிறக்கும். அதிலும், நல்ல பக்கத்தை மட்டும் தட்டிப் பாருங்கள், அறிவு, ஆற்றல் என்று பரந்து விரிந்த பரப்பை அறியலாம்.

சிறு பிள்ளைகளைத் தாலாட்டி வளர்த்த நாம் ஏன் தட்டிக் கொடுத்து அவன் கெட்டித்தனத்தை வளர்க்கப் பாடுபட முடியாது?

சில வேளைகளில், போட்டி நிகழ்ச்சிகளுக்கு மாணவர்கள் எழுதிய கவிதை, சிறுகதைகளை வாசிக்கும்போது அதில் அவர்களின் ஆற்றலும் அறிவும் வியக்கக் கூடிய வகையில் இருக்கும். எந்தவித தட்டிக் கொடுப்பும் இல்லாத பிள்ளைகள் சேற்றில் மலர்ந்த செந்தாமரைகளாகத் திகழ்வர்.

மேலும், பெற்றோரும் ஆசிரியர்களும் மாணவர்களது முன்னேற்றத்தில் பங்கெடுப்போமாக இருந்தால் அவர்கள் பாடக் கலைத் திட்டத்தில் சிறப்படைய வாய்ப்பேற்படும்.

பெற்றோர், ஆசிரியர்களின் பங்களிப்பு பிள்ளைகளுக்கு சரியாகப் போய்ச் சேருமேயானால் படைப்பாற்றலுள்ள ஒரு நல்ல சமூகத்தை உருவாக்கலாம் என்பது வெள்ளிடைமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிருவாக பயங்கரவாதத்தின்...

(05 ஆம் பக்கத் தொடர்)

ஆனால், அவற்றிற்கான உறுதிகளை இது கால வரை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள இடையூறுகள்.

இப்பிரதேச முஸ்லிங்களின் காணிகளுக்கு ஆவண ரீதியான ஆதாரங்கள் இருந்தும் அக் காணிகளை சுத்தம் செய்து நிருவகிப்பதில் உரிய அதிகாரிகளினால் ஏற்படுத்தப்பட்டு வரும் அளவு கடந்த தடைகள்.

சுமார் 40 அல்லது 50 ஆண்டுக்கு முன்பு பல ஏக்கர் பரப்பளவில் காடுவெட்டி துப்புரவு செய்து தொடர்ந்தும் விவசாயம் செய்து வந்த ஏழை விவசாயிகள் 1990 ஆம் ஆண்டு வன்செயல் காரணமாக அவ்விடங்களில் இருந்தும் வெளியேறினர். 2009 இல் யுத்த முடிவின் பின்னர் தொடர்ந்தும் அங்கு சென்று விவசாயம் செய்ய முடியவில்லை. அக்காணிகள் அவர்களாலேயே பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு காணிப் பதிவேட்டிலும் பதிவிருக்கின்ற போதிலும், 2008 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தின்படி தனிநபர் காணி உச்சவரம்புச் சட்டதின் கீழ் ஒருவருக்கு வயற்காணி ஓர் ஏக்கர்தான் வழங்க முடியும் என உரிய அதிகாரிகள் மறுத்து வருகின்றனர். ஆனால், வன்செயல் காலத்தைப் பயன்படுத்தி தொடர்ந்தும் தமிழ்ச் சகோதரர்களுக்கு தங்குதடையின்றி மூன்று ஏக்கர் வீதம் விவசாயக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

211B புனானை கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் புதிய பெயரில் சில கிராமங்களை உருவாக்கி தமிழ்ச் சகோதரர்களை அவற்றில் குடியேற்றி, அரச அதிகாரத்தை அடுத்த சமூகத்திற்கெதிராக பயன்படுத்தப்படுகிறது. அத்துடன், பல ஏக்கர் காணிகள் நீண்ட காலக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இச்செயலானது இப்பிதேச முஸ்லிம்களின் உரிமைகளைப் பகிரங்கமாக பறித்தெடுக்கும் மிக மோசமான செயலாகும்.

இதை விடவும், கோறளைப்பற்று மத்தி செயலகத்தின் வடக்கு எல்லையான கிரிமிச்சை மதுரங்கேணிக் குளக் கிராம பிரதேசம் முஸ்லிம்களின் தொன்மைக் குடியிருப்புப் பிரதேசமாகும். இங்கு 167 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்துள்ளன. இங்கு, அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை, பதிவு செய்யப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கம், பதிவு செய்யப்பட்ட ஜும்ஆ பள்ளிவாசல், குர்ஆன் பாடசாலை... என அரச அங்கீகாரத்துடன் வாழ்ந்த நிலையில்தான் இம்மக்கள் வெளியேற்றப்பட்டனர். யுத்த நிறுத்தத்தின் பின்னர் அப்பிரதேசங்கள் முற்றாக அபகரிக்கப்பட்டு வேறு சமூகத்தவருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் கோறளைப்பற்று மத்தி செயலகம் அமைந்திருக்க காரமுனை, ஆனைசுட்டகட்டு, கல்லடிச்சேனை, வெள்ளாமைச்சேனை கேணி நகர் கிராம மக்கள் இப்போதும் சுமார் 35 கிலோ மீற்றர் சிரம பிரயாணம் செய்தே தத்தமது நிருவாகத் தேவைகளுக்காக வாகரைக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருந்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மீன்பிடிக் கிராமங்களில் பிரதான இடத்தை வகிப்பது இச்செயலகப் பிரிவிலுள்ள வாழைச்சேனைக் கிராமமாகும். இங்கு சுமார் 4000 மீன்பிடித் தொழிலாளர்கள் 400 மீன்பிடி வள்ளங்களைப் பயன்படுத்தியே இத்தொழிலைச் செய்கின்றனர். இந் நிலையில் இப்படகுகளை துறையிடுவதற்கும் பாதுகாப்பதற்கும் வாழைச்சேனை மீன்பிடி துறைமுக இறங்குதுறையைத் தவிர மாற்று இடமின்மையால் தமது குடியிருப்புப் பகுதிகளைத்தான் இவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இத்தீர்வு தற்காலிக ஏற்பாடாகும். பெருகி வரும் மக்கட் தொகைக்கும் வளர்ந்து வரும் மீன்பிடித் துறைக்கும் இதற்கான இடப் பற்றாக்குறை பெரும் சவாலாக அமைவதால் இவர்களுக்கான விரிந்த கடற்கரை சார்ந்த பிரதேசம் இம்மக்களின் வாழ்வாதாரத்திற்கு அத்தியாவசியத் தேவையுள்ளதாக உள்ளது.

இப்படி, பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், நிருவாகம் சார்ந்த அதிகாரத்தை இரு சமூகங்கள் சார்ந்த பிரச்சினைகளாக மாற்றி, மீண்டுமொரு இடைவெளியை முஸ்லிம்-தமிழ் சமூகங்களிடையே உருவாக்காமல் பாதுகாப்பது எல்லோருக்குமான தார்மீகப் பொறுப்பாகும். இச்செயலக எல்லைப் பிரச்சினையுடன் நிலப் பிரச்சினையும் இணைந்திருப்பதால் தற்காலிகத் தீர்வாக ரிதிதென்ன ஜெயந்தியாய கிராமங்களை சுமார் 7 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கோறளைப்பற்று மத்தி செயலகத்துடன் இணைத்திருப்பதைப் போன்று சுமார் 3, 1 கிலோ மீற்றருக்கு அண்மையிலுள்ள ஆனைசுட்டகட்டு, காரமுனை, கல்லடிச்சேனை, வாகையடித்துறை, வெள்ளாமைச்சேனை, கேணிமடு போன்ற மீள்குடியேற்றப்பட வேண்டிய கிராமங்களை கோறளைப்பற்று மத்தி செயலகத்துடன் இணைக்க முடியும்.

அவ்வாறே, கோறளைப்பற்று மத்தி செயலக வர்த்தமானி அறிவித்தல் விடுத்தலையும், காத்தான்குடி, ஏறாவூர் பட்டினம் செயலகப் பிரிவுகளுக்கு உள்ளீர்க்கப்படாத அருகாமையிலுள்ள முஸ்லிம் கிராமங்களை குறிப்பிட்ட செயலகங்களுடன் இணைப்பது அல்லது தனியான உப செயலகங்களை உருவாக்குவது, கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட 5 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் முஸ்லிம்களுக்குரித்தான நிலப் பரப்பை மீண்டும் இணைப்பது போன்ற முக்கிய நிலம் சார்ந்த பிரச்சினைகளை தீர்த்து வைக்க முஸ்லிம்- தமிழ் அரசியல் தலைமைகள் இணைந்து செயற்படுவதற்கு முன் வர வேண்டும்.

## கூட்டு உடன்படிக்கையில்...

(09 ஆம் பக்கத் தொடர்)

தேயிலையைக் கொள்வனவு செய்யும் முகவர்கள் பணத்தை முழுமையாகத் தருவதில்லை எனவும் ஆறு மாதம் வரை இழுத்தடித்தே பணத்தை வழங்குவதாகவும் முதலாளிமார் சம்மேளனம் சொல்கிறது. முகவர்கள் எந்தெந்த நாடுகளுக்கு தேயிலையை விற்கிறார்களோ அந்நாடுகள் பொருளாதார கஷ்டம் காரணமாக பணத்தை முழுமையாக செலுத்தாததே இதற்கு காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், ஏல விற்பனையில் தேங்கிவிடும் தேயிலையைக் கொள்வனவு செய்யும்படி அரசுக்கு விடுக்கப்பட்ட ஆலோசனையை அரசாங்கம் ஏற்றிருக்கிறது. இலங்கை தேயிலை உற்பத்திக் கம்பனிகளுக்கு ஏற்பட்டு வரும் பாரிய நஷ்டத்தைக் குறைத்து தொடர்ந்தும் பெருந்தோட்ட தேயிலை உற்பத்தித் துறையை வாழவைக்கும் ஒரு முயற்சியாக தமக்கு ஒரு மாத கால முதலீட்டைத் தந்து உதவ வேண்டும் எனவும் பெருந்தோட்டத் துரைமார் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்திருக்கிறது. சிறு தோட்ட உற்பத்தியாளர்களுக்கு மானியம் தருவதற்கு முன்வந்திருப்பதைப் போல, ஒன்றரை இலட்சம் தொழிலாளர்களைக் கொண்ட பெருந்தோட்டக் கைத்தொழிலுக்கும் அரசு உதவ வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

தொழிலாளர் காங்கிரஸ் கோரிக்கை விடுப்பதுபோல, நாள் அடிப்படையில் சம்பளம் வழங்கும் தற்போதைய வேதனத் திட்டத்தை நாம் ஏற்கப்போவதில்லை என்பதில் உறுதியாக இருக்கும் பெருந்தோட்ட துரைமார் சங்கம், ஏன் இதற்கு உடன்பட முடியாதிருக்கிறது என்பதற்கு மேற்சொன்ன காரணங்களை முன்நிறுத்துகிறது. தேயிலை, இறப்பர் உற்பத்தித் துறையில் பாரிய நெருக்கடி நிலை நிலவுவதாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருப்பதும், மாற்று ஏற்பாடுகளை செய்யவிருப்பதாக கூறியிருப்பதும் துரைமார் சங்கத்தின் நிலைப்பாட்டுக்கு சாதகமாக அமைந்திருக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும்.

துரைமார் சங்கம் வகுத்திருக்கும் சம்பளத் திட்டம் உற்பத்தித் திறனை அடிப்படையாகக் கொண்டது. ஒரு தொழிலாளி எத்தனை கிலோ தேயிலையை தினமொன்றுக்கு கொய்கிறாரோ அந்த அளவைப் பொறுத்ததாக சம்பளம் தீர்மானிக்கப்படும் என்பதை இது அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஒரு வேலை நாளில் ஒரு தொழிலாளி 18 கிலோ எடுத்தால் அவரது அன்றைய வேதனம் குறைவாகவும் 50 கிலோ கொய்திருந்தால் அன்றைய தின வருமானம் அதிகமாக இருக்கும் என்பதே இத்திட்டத்தின் அடிப்படை. உற்சாகமாகவும் முனைப்புடனும் வேலை செய்தால் தினமொன்றுக்கு ஆயிரம் ரூபாவை வேதனமாகப் பெறலாம் என்கிறது துரைமார் சங்கம்.

இதிலும் ஒரு நியாயம் இருக்கவே செய்கிறது.

ஒருபக்கம் தற்போது தொழிலாளர்கள் பெற்று வரும் குறைவான வருமானம். இரண்டாவதாக, தேயிலை சந்தையில் காணப்படும் விலை வீழ்ச்சி மற்றும் ஏனைய நெருக்கடிகள்.

இருபக்கத்தாரும் இருபக்க நெருக்கடிகளையும் புரிந்து கொண்டு பொதுவான ஓர் உடன்பாட்டுக்கு வர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

## தேசிய பங்களிப்பினூடாக...

(04 ஆம் பக்கத் தொடர்)

ஆனால் சொல்வதுபோல் இது அத்தனையும் இலகுவானதல்ல. இதன் உயர் பெறுமானத்தையும் இது சாத்தியப்படாவிட்டால் ஏற்படக் கூடிய பேரழிவுகளையும் முன்கூட்டியே உணர முடியாத சிவில் சமூகம் இனவாதத்தின் மூலம் பிழைப்பு நடத்தும் தகுதியற்ற அரசியல்வாதிகள், உலக வல்லரசுகளின் அந்தரங்க சூழ்ச்சிகள், கடந்த காலத்தின் மிகக் கசப்பான அனுபவங்கள், வைராக்கியங்கள் போன்ற சிக்கலான தடைகளைத் தாண்டியே இப்பாதையில் பயணிக்க வேண்டியிருக்கின்றது. எனவே, முதலில் தடைகளைத் தாண்டுவதற்கான உள ரீதியான, சமூக ரீதியான பயிற்சி மிக மிக அவசியம். இதில் ஊடகங்களினதும் அரசியல் கட்சிகளினதும் சிவில் சமூகத்தின் புத்திஜீவிகளினதும் பங்களிப்பு காத்திரமானது. இத்தனையும் சரியாக நடந்தால் நாளை நலமாகும்.

## முசலி மக்களின்...

(முன் பக்கத் தொடர்)

இது ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு தீர்மானமும்தான். மக்கள் எதை இழந்தார்களோ அதனை மீண்டும் அவர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும். இந்தப் பணி நடைபெறவில்லை. இது அரசாங்கத்தின் ஒரு பணியாகும்.

இந்த நாட்டிலே தேசிய காணிப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றின் தேவை இருக்கிறது. இந்த யுத்தத்தின் பின்பு சொந்த மண்ணில் வாழ்ந்தவர்களின் நிலங்கள் அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இது மட்டுமல்ல, அவர்களது அன்றாட வாழ்வுக்குத் தேவையான அனைத்துத் தேவைகளையும் செய்து கொடுக்க வேண்டும்.

இந்த நிலப்பகிர்வின்போது அந்தந்த பிரதேச அமைச்சர்கள் தனக்கு சாதகமானவர்களுக்கு நிலங்களை பெற்றுக் கொடுத்தார்கள். இந்த விடயத்தில் இருந்து மக்களையும் மக்களின் சொந்தக் காணிகளையும் பாதுகாக்க வேண்டியது இந்த அரசாங்கத்தின் கடமையாக உள்ளது. ஆகவே மக்கள் விடுதலை முன்னணி பாதிக்கப்பட்ட மக்களின் காணிகளைப் பெற்றுக் கொடுக்க குரல் கொடுக்கும்.

## முஸ்லிம்கள்...

(முன் பக்கத் தொடர்)



தமிழீழ விடுதலைப் புலிகளால் வடக்கிலிருந்த முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி அரசாங்கத்தினதும் சர்வதேசத்தினதும் கவனத்தை ஈர்ப்பதையும் அதனூடாக முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு உரிய தீர்வு காண்பதையும் நோக்கமாகக் கொண்டு இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர, மீள்குடியேற்ற அமைச்சர் டீ.எம். சுவாமிநாதன், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட விரிவுரையாளர் செல்வகுமாரன் ஆகியோரும் பங்குபற்றி உரையாற்றினர்.

இந்நிகழ்வில் அரசியல் முக்கியஸ்தர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் வடபுலத்திலிருந்து இடம்பெயர்ந்து வாழும் முஸ்லிம்கள் உட்பட ஏராளமானோர் பங்குபற்றினர்.

## மூன்றாவது இன்திபாழா ...

(முன் பக்கத் தொடர்)



இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களின் தாக்குதலுக்கு இலக்காகி 63 க்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மறுபுறம், பலஸ்தீனர்களின் தாக்குதலுக்கு இலக்காகி 11 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்திற்கு இடையில் தொடரும் இந்த வன்முறை, ஒரு பேரவலத்திற்கு இட்டுச் செல்வதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இனவாதத்தைத்...

(முன் பக்கத் தொடர்)

தண்டனைக் கோவைச் சட்டத்தைத் திருத்துவது தொடர்பில் அண்மையில் நீதியமைச்சரினால் அமைச்சரவைப் பத்திரமொன்று தாக்கல் செய்யப்பட்டது. அந்த அமைச்சரவைப் பத்திரத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான ஆத்திரமூட்டும் செயற்பாடுகள் மற்றும் தீங்கிழைக்கும் வார்த்தைப் பிரயோகங்களினால் கடந்த காலங்களில் இனங்களுக்கிடையில் முரண்பாடான நிலைமையொன்று ஏற்பட்டது என்றும் அந்த அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான நடத்தையைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, கடும் சட்ட திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என்று கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு பரிந்துரை செய்திருந்தது.

அதனடிப்படையில், தண்டனைக் கோவைச் சட்டத்தில் உசிதமான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நீதியமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக அறிய முடிகின்றது.

இதேவேளை, நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ அவர்களினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள குரோத உணர்வைத் தூண்டும் பேச்சுக்களை மட்டுப்படுத்தும் பிரேரணை மக்களின் கருத்துச் சுதந்திரத்திற்கு பங்கம் விளைவிக்கும் என ஜனநாயகத்திற்கான வழக்கறிஞர் குழு தெரிவித்துள்ளதுடன் மக்களின் ஆய்வுக்கும் இணக்கத்திற்கும் பின்னரே இப்பிரேரணை சட்டமாக இயற்றப்பட வேண்டும் எனவும் அக்குழு கோரியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மூலம்– அத்தய் சத்தய் (உண்மையிலும் உண்மை)
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகச் சாதாரண வாழ்க்கை நடத்தும் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். அவரின் வாழ்க்கைச் சரிதத்திலிருந்து சில சுவையான அனுபவங்களை எங்கள் தேசம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதே இத்தொடரின் நோக்கமாகும்.

# மைத்திரியின் வாழ்க்கையில் இப்படியும் ஒரு நாள்!

இலங்கை வரலாற்றில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல்தான் 1988 இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலாகும். இத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொது அபேட்சகராக ரணசிங்க பிரேமதாச போட்டியிட்டார். சிறிமாவோ பண்டாரநாயக்க சுதந்திரக் கட்சியின் பொது அபேட்சகராக களமிறங்கினார்.

தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடிக்க ஆரம்பித்தன.

பொலன்னறுவை மாவட்டத்தில் சுதந்திரக் கட்சியின் சார்பாக செயற்பட்டார் மைத்திரிபால சிறிசேன அவர்கள். இக்காலகட்டத்தில் மைத்திரிபால இரவு பகலாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

ஒரு சந்தர்ப்பத்தில், தனது தந்தையின் மரணச் செய்தி மைத்திரியை ஆட்கொள்ளச் செய்தது. மைத்திரி தனது அனைத்துப் பணிகளையும் உடனே நிறுத்திவிட்டு வீடு நோக்கிப் புறப்பட்டார்.

மரணச் செய்தி கேள்வியுற்ற பொலன்னறுவையைச் சேர்ந்த பொலிஸ் உயர் அதிகாரிகளும் இராணுவ அதிகாரிகளும் மைத்திரிக்கு ஆறுதல் கூறினர். தந்தையின் இறுதிச் சடங்குகளை மிக உயர்வாக நிகழ்த்த வேண்டும் என்றும் அவர்கள் பேசிக் கொண்டனர்.

விடிந்தால் தேர்தல் வாக்களிப்பு தினம். அத்தினத்தில் மைத்திரிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒருபுறம், தந்தையின் இறந்த சடலம். மறுபுறம், தேர்தல் வாக்களிப்பு.

அக்கட்டத்தில் மைத்திரி ஒரு முடிவுக்கு வந்தார். தந்தையின் சடலத்தை வீட்டில் வைத்துவிட்டு தனது காரில் துக்கத்தை வெளிக்காட்டும் வகையில் ஒரு வெள்ளைக் கொடியைக் கட்டி கொண்டு பொலன்னறுவைப் பிரதேசத்தில் உள்ள வாக்கெடுப்பு நிலையங்களுக்கு விஜயங்களை மேற்கொண்டார்.

அந்த விஜயத்தின் போதும் மைத்திரி பல சோகங்களுக்கு முகம் கொடுத்தார். அந்த நாள் மைத்திரிக்கு சோதனைக்கு மேல் சோதனையாகவே காணப்பட்டது. தனது காரில் கட்டியிருந்த வெள்ளைக் கொடியைப் பார்த்து சிலர், இவர் ஜே.வி.பி.யின் அச்சுறுத்தலுக்குப் பயந்து சமாதானக் கொடியைக் காட்டுகிறார் எனப் பேசிக் கொண்டார்கள்.

மைத்திரி இது எதனையும் பொருட்படுத்தாமல் தேர்தல் நடவடிக்கையில் கவனத்தைச் செலுத்தினார். தேர்தல் வாக்கெடுப்பு நாளும் முடிவடைந்து, மறுநாள் காலையில் தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்பட்டு விட்டன. தேர்தலில் போட்டியிட்ட சிறிமாவோ பண்டாரநாயக்க தோல்வியுற்று, ஆர். பிரேமதாச ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

மைத்திரியின் எதிர்பார்ப்பு வெற்றி அளிக்கவில்லை. அனைத்தையும் ஒரு சவாலாகக் கொண்டு தனது தந்தையின் இறுதிக் கிரியைக்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். தேர்தலுக்கு முன்னர் இறுதிக் கிரியையை பெரிதாகச் செய்ய வேண்டும் எனப் பேசிக் கொண்ட பொலிஸ் உயர் அதிகாரிகளும் அன்றைய தினம் இறுதிக் கிரியைக்கு முகத்தைக் கூட காட்டவில்லை.

அன்று ஜே.வி.பி.யின் கலவரங்களும் மேலோங்கி இருந்தன. ஜே.வி.பி. யின் ஆதரவாளர்கள் பாதையில் மரங்களைப் போட்டு போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தி இருந்தனர். இதனால், பொலன்னறுவை மக்களுக்கு கூட அந்த இறுதிக் கிரியைக்கு வர முடியாத இக்கட்டான சூழல்தான் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் மைத்திரி தன்னை மாத்திரமே நம்பியிருந்தார். குடும்பத்தவரின் ஒத்துழைப்புடன் தந்தையின் இறுதிக் கிரியைகளை நல்லமுறையில் செய்து முடித்தார்.

இவ்வனைத்து சோதனைகளும் ஒரே தடவையில் வந்தமையால் மைத்திரியின் அரசியல் வரலாற்றில் இதை மிகவும் கவலைக்குரியதும் மறக்க முடியாததுமான நாளாக அவர் கருதுகினார்.




சிறைச்சாலைக்கு வெளியே போகம்பற மைதானம் இருக்கும் பக்கமாக புதர்கள் மண்டியிருந்த இடமொன்றிலே சுமதிபால இறங்கியிருந்தான். (இப்போது அந்த இடத்திலிருந்து புதர்கள் நீக்கப்பட்டு பாதை அமைக்கப்பட்டுள்ளது). அவ்விடத்திலிருந்து சிறிது தூரம் நடந்து செல்ல வாகனங்கள் பழுது பார்க்குமிடம் ஒன்று தென்பட்டது. அந்த இடத்தில் உலரவிடப்பட்டிருந்த உடைகளை சிலதை எடுத்து உடுத்திக் கொண்டு காட்டு வழியாக கன்னொறுவ புகையிரத நிலையத்துக்கு வந்து சேர்ந்தான். அங்கு சிறிது நேரம் காத்திருக்க, கண்டியிலிருந்து வந்த சரக்குப் புகையிரதம் ஒன்று அங்கு நிறுத்தப்பட்டது. புகையிரதத்தின் கடைசியில் இணைக்கப்பட்டிருந்த பயணிகள் பெட்டியில் ஏறி வனவாசல எனுமிடத்தில் இறங்கிக் கொண்டான். சிறையில் தனக்கு அறிமுகமான நண்பன் ஒருவரின் வீடு அங்கிருந்தது. அவனது வீட்டைத் தேடிச் சென்று அவனுடன் இரண்டு நாட்கள் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டான். இரண்டு நாட்கள் முடிவில் நண்பரிடம் ஒரு தொகைப் பணத்தை கடனாக வாங்கிக் கொண்டு வாத்துவ எனுமிடத்திலிருக்கும் இன்னொரு நண்பனின் வீட்டுக்குப் பயணமானான்.

இனி சுமதிபாலவின் பழி தீர்க்கும் வேட்டை ஆரம்பமாகின்றது. அவனது முதல் இலக்கு களுத்துறை பாடசாலை அதிபரைப் பழி தீர்ப்பதாக இருந்தது. களுத்துறையிலுள்ள கனிஷ்ட வித்தியாலயம் ஒன்றின் அதிபரான அவர் சுமதிபாலவின் தங்கை குறித்த தகவல்களை அந்த பொலிஸ் அதிகாரிக்கு வழங்கியது மட்டுமன்றி, வன்புணர்வுச் சம்பவத்திலும் பங்கு கொண்டவர். எனவே, அந்த அதிபரும் கொலை செய்யப்பட வேண்டும் என்று தீர்மானித்திருந்தான்.

நண்பரிடம் சைக்கிளொன்றைப் பெற்றுக் கொண்ட சுமதிபால களுத்துறை நகரமெங்கும் அதிபரைத் தேடியலைந்தான். இரண்டு நாட்களாகியும் அவனால் அதிபரைக் கண்டு கொள்ள முடியவில்லை. அதிபரின் வீடு இருக்குமிடத்தை விசாரித்து பறகஸ்கொட்டுவ எனும் பகுதியிலிருந்து அதிபரின் வீட்டைக் கண்டுபிடித்தான். அந்த வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டினான். ஒரு பெண் வெளியில் வரவே ஒரு குவளைத் தண்ணீர் கேட்டு அருந்திவிட்டு தனது நண்பர் வீடுக்கு திரும்பிச் சென்று விட்டான்.

நண்பரின் வீட்டில் ஒரு வாரம் வரை தங்கியிருந்த சுமதிபால, அதிபரைப் பழி தீர்ப்பதை அவசரப்படுத்திக் கொள்ளாமல் நண்பர் தனது தோட்டத்தில் வெட்டிக் கொண்டிருந்த கிணற்று வேலைக்கு ஒத்தாசையாக இருந்தான். அதனுடன் இணைத்து தனது வேட்டையின் அடுத்த கட்டம் குறித்து மனதுக்குள் திட்டமொன்றும் வகுத்துக் கொண்டான்.

ஒரு வாரம் கழிந்ததும் நண்பரிடம் வழிச் செலவுக்கு ஒரு தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்டு வனவாசல புகையிரத நிலையத்திலிருந்து நீர்கொழும்பு நோக்கிப் பயணமானான். அங்கிருந்து யாரும் அறிந்து கொள்ளாத வண்ணம் கொச்சிக்கடை பகுதிக்குச் சென்று தனது தங்கை கொடுமையாக்கப்பட்ட இடமான வாடி வீட்டைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டான். முழு நாள் தேடுதலின் முடிவில் அந்தப் பகுதியிலிருந்த பெட்டிக் கடை முதலாளி ஒருவரின் ஊடாக அந்த வாடி வீடு தொடர்பான விபரங்கள் கிடைக்கப் பெற்றன. வாடி வீட்டின் பெயர் நயாகரா. வாடி வீட்டின் அருகில் சென்ற சுமதிபால தான் கொலை செய்த ஐ.பி. அதிகாரியின் மைத்துனர் மற்றும் அவரது வாகனம் போன்றவற்றை அவதானித்து அடையாளங்களையும் மனதில் பதித்துக் கொண்டு வனவாசலவிற்கு திரும்பிச் சென்று விட்டான்.

இப்போது இரண்டு நபர்கள் இருக்கும் இடம் தெரிந்துவிட்டது. இனி அவர்கள் இருவரையும் கொலை செய்வதும் இலகுவாகி விட்டது. வனவாசல நண்பரின் வீட்டில் இரண்டு நாட்கள் ஓய்வெடுத்து உடம்பைத் தேற்றிக் கொண்டான். மூன்றாவது நாள் காலை நண்பரிடம் காற்சட்டை ஒன்றையும் மேற்சட்டை ஒன்றையும் பெற்றுக் கொண்டான். அத்துடன் அவனது நண்பன் தனது பழைய பயணப்பை ஒன்றையும் 600 ரூபா பணத்தையும் சுமதிபாலவுக்கு அன்பளிப்பாக வழங்கினான். அவற்றை நன்றியுடன் பெற்றுக் கொண்ட சுமதிபால ஓர் உத்தியோகத்தர் போன்று வேடம் தரித்து கொச்சிக்கடை சந்தியின் ஊடாக நயாகரா வாடி வீட்டுக்குச் சென்று அன்றைய இரவைக் கழிப்பதற்காக அறை ஒன்றை வாடகைக்கு பெற்றுக் கொண்டான். அறை வாடகை 100 ரூபா ஆகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவறுக்கு வருந்துகிறோம்

கிண்ணியா அமீர் அலி

"முஸ்தபா முதலாளி நல்ல மனுஷன். அவர்ட நல்ல மனசுக்கு எல்லாம் நல்லதாகவே அமையும். வாரி வழங்கும் வள்ளல் அவர். அன்பான மனைவி, மக்கள், பேரக் குழந்தைகளுடன் அவர் நோய் நொடி இல்லாமல் நீண்ட காலம் வாழ அருள்புரியா! அல்லாஹ்!"

கல்பு கனிந்துருகி முஸ்தபா முதலாளிக்காக அல்லாஹ்விடம் துஆக் கேட்டழுதான், அப்துல் அஸீஸ்.

'பிந்தான் நோனா பானுவின் டெடியும் சாச்சியும்' சிறுகதைத் தொகுதியை 'புரூப்' பார்த்துக் கொண்டிருந்தேன். பஸ், கலேவெலயைத் தாண்டி ஓடிக் கொண்டிருந்தது.

அடுத்த பக்கத்தைப் புரட்டினேன்.

'சாச்சியோ டாடி... என்னைச் சீரழிச்ச டாடி' எனத் தொடங்கும் வரியைத் திருத்தத் தொடங்கினேன். 'இச்'சையும் 'சா'வையும் நீக்கி 'இத்'தையும் 'தா'வையும் போட்டேன். சீரழிச்ச மாறிற்று. சீரழித்த வாயிற்று.

தலையெழுத்துப் பிழையில்லை. 'எழுத்துப் பிழை' பார்த்துப் பார்த்தே காலம் ஓடுது. இப்போது பஸ்.. 'ஹபறணை' நோக்கி ஓடுது.

அடுத்த கதையைப் பார்த்தேன்.

சலீம் ஒரு வானொலிக் கலைஞன். இடைக்கால ஏழை. வறுமை ஒரு 'கமா'வே தவிர, முற்றுப்புள்ளி அல்லவே...! அவனையும் ஆளாக்கு அல்லாஹ்வே! அவனது 'பள்ளத்துக் காணி' வெள்ளத்தில் மூழ்கிக் குளித்துக் கொண்டிருந்தது. குடிசை!

கலையுலக நண்பர்களிடம் தனது 'கையறு' நிலை கூறிக் கலங்கினான். அவ்வப்போதைய அவசர நிலைமைகளுக்கு அடிக்கடி அவனுக்கு உதவுகிற அன்பர்களின் அனுசரணையில்... ஏதோ... அல்ஹம்துலில்லாஹ்! அவனே போதுமானவன்!

ஆனால், இந்த வெள்ளத்தில் அவன் மூழ்கித் தவித்தபோது... அவனுக்குக் கிடைத்த அனுபவங்களில் 'அவமானம்' அதிகம். ஒருவர் அவனை மிகவும் இழிவுபடுத்தி விட்டதாக வந்த தகவல் அவனைப் பாதித்தது. அவனது கல்பு அழுதது... அவரது தவறுக்கு வருந்தினான்.

இப்படித் தொடர்ந்து போன அந்த 'ஹிக்மத்' என்ற சிறுகதையில் அவ்வளவு எழுத்துப் பிழைகள் இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தாலும்... அகந்தை, அகங்காரம், அகம்பாவம், ஆணவம், செருக்கு, மமதை, திமிர்... நான் என்ற பெருமைதான் அழிவுக்கு அத்திவாரமாக அமைகிறது.

புதிய 'தும்புத் தடிகள்' நன்றாகக் கூட்டுகின்றன... அல்லது பெருக்குகின்றன...

கடைசியில் எல்லாமே கழிவுகள்தான்...!

மதிய போசனத்திற்காக 'ஹபரணை'யில் நிறுத்தப்பட்ட பஸ் மீண்டும் திருகோணமலை நோக்கி... ஓடத் தொடங்கியது.

இறுதிக் கட்டச்

சீரழிவுக்கெல்லாம்

காரணம்

ஆரம்ப கட்டத் தவறுகள்தானோ?

அது சரி.

அது சரி. இங்கு எது சரி?

சரியோ, பிழையோ சரியாகத் தெரியவில்லை.

பிழைகள் சரியாகவும் சரிகள் பிழையாகவும்...

ஆகவும்... பிழைகள் கூடிப்போன ஒரு சமுதாயமாகவே...

அதிகபட்ச அநியாயங்கள்... அரங்கேறுகின்றன...

ஜாஹிலிய்யாக் காலமாச்சு யாரஸூலல்லாஹ்... என்று பாடத் தோன்றுகிறது...

வர வர மாமியார் கழுதை போலானார்...

அப்படியென்றால்...

வர வர மாமனார்...?

இப்படி ஒரு மாமனார் ஏமாற்றிச் செய்து வைத்த கலியாணக் கலாட்டாவை சுமுகமாகத் தீர்த்து வைக்கத்தான் இப்போது திருகோணமலைக்குப் போய்க் கொண்டிருக்கின்றேன். குருடனுக்குக் குருடன் வழிகாட்டியது போல!

பிழையானவர்களுக்குச் சரியானவர்கள் பிழையாகத் தெரிகிறார்கள்!

சரியானவர்களுக்குப் பிழையானவர்கள் சரியாகத் தெரிகிறார்கள்!

என்னைப் பிழையாக விளங்கிக் கொள்ள வேண்டாம்.

முதற்கண் தவறுக்கு வருந்துகிறேன்.

மன்னிக்கணும்:

மன்னிக்கவே முடியாத மகா தவறு எது தெரியுமா?

மன்னிக்காததுதான்!

தயவு செய்து மன்னிக்கவும்.

மன்னிக்கணும்!

தவறைச் செய்துவிட்டு மன்னிப்புக் கேட்டு வந்தவரை மன்னிக்காதவரை அல்லாஹ்வே மன்னிக்க மாட்டான்.

மன்னிக்காத வரை!

அடிக்கடி மன்னிப்புக் கேட்பவர்கள்... ஆபத்தானவர்கள்.

என்பதையும் மனதில் வைக்க மறந்து விடாதீர்கள்.

சின்னச் சின்னத்

தவறுகள்தான்...

பெரிய பெரிய...

குற்றத்தின் தாய்!

இதனால், சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்,

"நீ உன்னை வென்றால்... வெல்வாய்!"

வாய் பேணுவாய். வாழுவாய்.

ஆங்கிலத்தில் வாய்க்குப் பேர் mouthதாம்!

அதனால்தான் இன்று பல பேர் மௌத்தாம்!

நாம்... கல்புகளை மௌத்தாக்கி ஹயாத்தோடு வாழுகின்றோம்!

அட... நம்ம கவிஞர்!

நிமிர்ந்தேன்.

"சேர் நீங்களா...?" "இருங்க சேர்..." எழுந்தேன்.

அதிக நேர வற்புறுத்தலுக்குப் பின் அமர்ந்தார்.

"கணேவல்பொல போய் வாறன்... ஹபரணையில் ஏறினேன்..." என்றார்.

"என்ட கத ஒங்கட பேர்ல வந்திருக்கு" என்றார்.

எங்களூர் எழுத்தாளர் அலி அக்பர் சேர் கேட்டதும்தான்... என் பேரில் அவரது சிறுகதை பிரசுரமான விஷயம் நினைவுக்கு வந்தது.

"தவறுக்கு வருந்துகிறோம் போட்டாங்களே சேர்..." என்றேன்.

"அவங்கட... தவறுக்கு... நாங்க வருந்துறம்" என்றார், சேர்.

"இதெல்லாம் ஒரு தவறா சேர்...?"

"நம்ம, ஆனா சூனா தங்கச்சியக் காட்டிப்போட்டு தாத்தாவக் கட்டிக் குடுத்த கதய விடவா சேர்..."

"அவன தாரு ராவையில... பொண்ணு பார்க்கப் போகச் சொன்ன..." என்று சொல்லிச் சிரித்தார் அலி அக்பர் சேர்.

"ஓ சேர்... ராவையில... பொண்ணும் பொடவையும் பார்க்கப் படாதுன்னு எங்க உம்மம்மா அடிக்கடி சொல்லுவாங்க..." என்றேன்.

"சேர், ஒரு கவிதை சொல்லட்டுமா...?"


"ம்... சொல்லுங்க அமீர் அலி...?" என்றார்.

சொன்னேன்:

"தவறித்
தவறித்
தவறுந்
தவறைத்
தவறித்
தவறித்
தவறுந்
தவறே
தவறு...!"

# இல்லத்தரசிகள் கடைப்பிடிக்க வேண்டிய 40 நற்பண்புகள்




அப்துல் வஹ்ஹாப்

திருமண வாழ்க்கைக்குள் உட்பிரவேசிக்கும் ஒவ்வோர் இஸ்லாமியப் பெண்ணும் அறிந்து அவசியம் கடைப்பிடிக்க வேண்டிய அழகிய, உயரிய நாற்பது நற்பண்புகளை விவரிக்கும் நூல் இது. துவக்கத்தில் குர்ஆன் கூறும் நற்குணங்கள் கொண்ட பத்து நபர்கள் எவர்கள் என்பதை எடுத்துக் கூறும் வசனம் இடம்பெறுகிறது. மேலும், பெண்ணின் மகிமை எதுவென்பது பற்றியும் கூறப்படுகிறது.

ஒரு பெண் வீட்டுத் தலைவியாகும் போது அவள் அதிகாலையிலேயே எழுவது அவசியமாகும். அதன் முக்கியத்துவம் ஆரம்பமாக கூறப்படுகிறது. அன்றாட வீட்டுச் செலவைக் குறைத்து வீண் விரயங்களைத் தவிர்த்துக் கொள்வது, வீட்டு வேலைகளை குறித்த நேரத்தில் செய்து முடிப்பது, அதற்காக அன்றாடம் செய்ய வேண்டிய கடமைகள், வேலைகளைக் குறித்துக் கொள்ள குறிப்பேடுகளைப் பயன்படுத்துவது, வீட்டை சுத்தமாக வைத்திருப்பது போன்றவை நூலின் ஆரம்பத்தில் கூறப்படும் ஏனைய முக்கிய அம்சங்களாகும்.

ஹலால் உணவு-பானங்களையே அனைவரும் உண்ண, [illegible] தன் முக்கியத்துவத்தை ஓர் உண்மைச் சம்பவத்தைக் கொண்டு விளக்கப்படுகிறது. வீட்டில் அவசியம் மருந்தாக இடம்பெற வேண்டிய ஸம் ஸம் நீர், தேன், கருஞ்சீரகம், ஸைத்தூன் எண்ணெய், பேரீத்தம்பழம் போன்றவற்றின் சிறப்பம்சங்களைப் பற்றியும் ஆசிரியர் இந்நூலில் விலாவாரியாக விபரிக்கிறார்.

கணவர்-மனைவி ஆகிய இருவருக்கும் மத்தியில் அன்பு, பாசம் நிலைத்திருக்கச் செய்யும் அழகிய நற்பண்புகளையும் நூல் மேலும் விபரிக்கிறது. ஒரு மனைவி கணவரை தொழிலுக்கு வெளியனுப்பும் போது துஆப் பிரார்த்தனையுடன் வழியனுப்புவது, ஆகுமானவற்றில் கணவரை முழுமையாக வழிபடுவது, கணவருக்குச் செய்ய வேண்டிய மனைவியின் கடமைகள், மனைவியானவள் கணவரின் பார்வையில் தன்னை தாழ்த்தும் செயல்களைச் செய்யாதிருத்தல், [illegible]களைப் பூர்த்தி செய்து கொடுப்பதில் மனைவி தயக்கம் காட்டா திருத்தல், கணவருக்கு மதிப்பை, உயர்வைக் கொடுத்தல், மனைவி கணவரின் முன் தன் தவறை ஒப்புக் கொள்வது, கணவருக்கே சுத்தம்-அழகை பிரதானமாக கடைப்பிடித்தல், கவலை தரும் நேரங்களில் கணவருக்கு ஆறுதல் கூறுதல், கணவரின் உறவினர்களுடன் நல்ல அணுகுமுறையை கடைப்பிடித்தல், பிள்ளை வளர்ப்பில் கணவரின் ஆலோசனை கேட்டல் முதலான நற்பண்புள்ள அம்சங்கள் இந் நூலில் கூறப்படுகின்றன.


மேலும், பர்தாவின் அவசியம், மஹ்ரம் பேணுவதன் அவசியம் குறித்தும் நூலாசிரியர் கூறத் தவறவில்லை.

வயது வந்த ஒவ்வொரு பெண்ணும் குறிப்பாக, இல்லத்தரசிகள் தத்தம் கைகளில் வைத்து வாசித்து, வாசித்து இல்லற வாழ்வை மணமாக்கிக் கொள்வதற்கு வழிகாட்டும் நூலிது. தோழியருக்கு அன்பளிப்புச் செய்ய நல்லதொரு நூல் என்பதிலும் சந்தேகமில்லை.

| | |
|---|---|
| நூலின் பெயர் | : இல்லத்தரசிகள் கடைப்பிடிக்க வேண்டிய 40 நற்பண்புகள் |
| ஆசிரியர் | : மௌலவி முகம்மத் ரஸீன் (மழாஹிரி) |
| வெளியீடு | : தாருல் குர்ஆன், இல:100, காண்டி வீதி, மல்லவபிடிய, குருணாகல். |
| தொ.இ. | : 071 685 98 30 |
| விலை | : ரூபா 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதத்தின் சிதைவுகள்



மினுவங்கொடை
றுவைதா மதீன்

*மரணித்து மரணித்து*
*உயிர் பெறும் மனிதம்*
*மரணத்தின் வாயிலில்*

*கணப்பொழுது மாற்றத்தில்*
*அப்பாவிகளின் உயிரைக்*
*குடிக்கும் இயற்கை*

*அனாச்சாரமும் அட்டூழியமும்*
*மலிந்த இப்புவியில்*
*தன்னைத் தானே*
*வெடிக்க வைக்கும் பூமி*

*விரட்டி விரட்டி*
*வேலை வாங்கும்*
*மாமியாரின் ஈனம்*

*சீதனம் கேட்கும்*
*பேயைக் கண்டு*
*விரண்டோடும் கன்னியர்*

*தம்மைக் கடத்தி*
*ஈனம் புரியும்*
*மனித மிருகத்திற்குப்*
*பயந்தோடும் சிறுவர்*

*அனாச்சாரப் புழுக்களை*
*அகிலத்துக்குப் பரப்பும்*
*தொடர்பாடல்*

*செல்லடி பட்டு சிதைத்த*
*கண்ணாடித் துண்டாய்*
*அவளது வாழ்க்கை*

*விஞ்ஞான வளர்ச்சி*
*விண்ணைத் தொட்டபோதும்*
*அந்தராக்ஸும் சார்ஸும்*

*ஆங்காங்கே பரப்பிவிடும்*
*பெரு முயற்சி*

*இரத்த ஆறு ஓடியும்*
*எந்த சமூகம் அழிந்தும்*
*எண்ணெய் வளம்*
*எனக்கென்ற இறுமாப்பு*

*துரு ஏறிய*
*மனித உரிமையின்*
*வாயிற் பூட்டு*

*அனாச்சார விரிசலில்*
*சிக்குண்டு*
*வீதியில் கிடக்கும்*
*மனிதத்தின் சிதைவுகள்*

*சதையும் இரத்தமும்*
*சப்பித் துப்பிய*
*வீதியின் விதிகள்*

*இத்தனையும் அற்று*
*இத்தரையில்*
*மரணித்த மனிதம்*
*உயிர் பெறும் உதயம்*
*தரணிக்கு வருமா*
*இத்தாரகையாய்?*




## சீரிய மார்க்கத்தில்

*சீரிய எமது மார்க்கத்தை*
*சீரழிக்க சிதறிய யுதர்களின்*

*சிறிய ஒரு கைப் பொருளே...!*
*சிணுங்கும் இந்த தொலைபேசி...*

*பாவிக்காது இருந்திடுவோம்...*
*பாவிப்பதை குறைத்திடுவோம்*
*பாவிகளின் வழியில்*
*பலதையும் பெற்றிடுவோம்*
*சீரிய வழியில்*

பாயிஸ் ஹரீஸ் [தோப்பூர்]
இஸ்லாஹிய்யா வளாகம்

# "என் எழுத்துக்களை அடையாளப்படுத்தியது முல்லைத்தீவே"

ஐ.எம். இர்சாத்



முஹம்மது முஸ்தபா மஃஸுர் என்ற இயற் பெயரையுடைய முல்லை முஸ்ரிபா இலக்கியப் புலத்தில் நன்கு அறியப்பட்டவர். முதுமாணிப்பட்டம் (M.A. Tamil), பட்டப் பின் கல்வியியல் முகாமைத்துவ டிப்ளோமா ஆகியவற்றை நிறைவு செய்துள்ள இவர், இலங்கை அதிபர் சேவையில் உள்ளீர்க்கப்பட்டுள்ளார். முதன்மை ஆசிரியர் விரிவுரையாளர் வளவாளர், பாட நூலாக்குனர், ஒலிபரப்பாளர் என பல ஆளுமைத் தளங்களில் முல்லை முஸ்ரிபா இயங்குகிறார். இவரின் சொல்லில் உறைந்து போதல் என்ற கவிதை நூலுக்கு அண்மையில் சாகித்திய விருது கிடைத்தமை தொடர்பாக அவருடன் எங்கள் தேசம் சந்திப்பொன்றை மேற்கொண்டது. இதன்போது அவர் எம்மோடு பகிர்ந்து கொண்ட கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

**எங்கள் தேசம்:** உங்களது எழுத்துக்கள் பெரும்பாலும் உங்களது ஊரான முல்லைத் தீவை தளமாகவே கொண்டுள்ளன. இதன் பின்னணி குறித்தும் உங்களது ஊரின் சிறப்புகள் குறித்தும் கூற முடியுமா?

**முல்லை முஸ்ரிபா:** என்னை அடையாளப்படுத்தியது என் எழுத்துக்கள்தான். என் எழுத்துக்களை அடையாளப்படுத்தியது முல்லைத்தீவே. ஊர் என்கிற உடலிலும் உள்ளத்திலும் உணர்விலும் வேர்விட்டுத் திரிகிற நரம்புகள் பேனாவில் நிரம்புகிற போது என் எழுத்தும் என் ஊரும் ஊர் மீதான காதலும் ஒன்றாகிப் போகிற இடமாக எனது கவிதைகள் வெளிப்படலாயின. பிரிந்துபோன மண் மீதான தீராக் காதலும் ஏக்கமும் பிஞ்சு வயசில் பிசைந்து விளையாடிய மண் மீதான பற்றும் மண் சார் எழுத்துக்களை என்னுள் விதைத்து விட்டிருக்கின்றன. அதன் அறுவடையைத்தான் இருத்தலுக்கான அழைப்பு முதல் மேற்கொண்டு வந்திருக்கிறேன்.

கிராமத்துக் காற்றை சுவாசித்துக் கொண்டு சலனமற்று ஓடும் நீராவியில் கால் கழுவிய படி, வயல்வெளிப் பறவைகளோடு கலந்து குரலிசைத்துத் திரிந்த பால்ய பருவத்தின் கல்வெட்டு, பலரையும் போல எனக்குள்ளும் உறைந்திருக்கிறது. கரையாத அந்தக் கல்வெட்டிலிருந்துதான் எனது எழுத்து ஊறத் தொடங்குகிறது. தவிரவும், தொண்ணூறுகள் தந்த வடுவும் வலியும் கவிதைக்குள் வலிமையாயின.

ஊரின் சிறப்புகள் குறித்துக் கேட்கிறீர்கள். எனது ஊர் நானிலம் தழுவியது. புண்ணியாராங் குளத்து வயல்வெளியாய் விரியும் மருதம், நந்திக் கடலாய் பரந்த நெய்தல், பாலையும் வீரையும் தேக்கும் கருங்காலியும் எனப் படர்ந்த முல்லை, சிறு சிறு மலைக் குன்றுகளும் அடர்ந்த குறிஞ்சி என அமைந்த இயற்கையின் மடி எனதூர்.

தொண்ணூறுகளில் தொடர்ந்து முள்ளி வாய்க்கால் வரை வதைப்பட்டுப் போய் நிமிர்ந்தது வலி கொண்ட தளிர். அந்த வேர் நீண்ட காலடியின் வலியிருந்தே எனது எழுத்துகள் பிறந்தன.

அதனால்தான் வ.ஐ.ச ஜெயபாலன், ''மண் மீதான வேர் மண்டிய ஈரமான காதலுக்கும் ஏக்கத்துக்கும் ஈழத் தமிழர் கவிதைகளை விடவும் வட ஈழத்திலிருந்து அறுத்தெறியப்பட்ட முல்லை முஸ்ரிபா போன்ற கலைஞர்களது சிருஷ்டிகள் உயிர்ப்புள்ள சாட்சிகள்'' என 'இருத்தலுக்கான அழைப்பின்' பின் அட்டையில் எழுதினார்.

**எங்கள் தேசம்:** வடக்கிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்கள் வெளி மாவட்டங்களில் நெருக்கடியான நிலையில் குடியேறி இன்று 25 வருடங்களாகி விட்டன. அவர்களின் தனிப்பட்ட முயற்சியால் நல்ல நிலையை அடைந்திருப்பதாகவும் அவர்கள் இடம்பெயராமல் இருந்திருந்தால் இந்த அடைவுகளைப் பெற்றிருக்க முடியாது எனக் கூறுவோரும் உளர். உண்மை நிலை குறித்த உங்களது கருத்து என்ன?

**முல்லை முஸ்ரிபா:** இந்த முரண்பாடான அல்லது பக்கச்சார்பு குறித்த அல்லது ஊகித்துக் கூறுவதான கருத்து நிலை பற்றி சற்று விரிவாகத்தான் பேச வேண்டும்.

ஒரு சிறுபான்மைச் சமூகம் இன்னொரு சிறுபான்மைச் சமூகத்தின் அதிகார பீடத்தால் துரத்தியடிக்கப்பட்ட துரோக வரலாற்றுக்கு முன்னால் இத்தனை பேச்சுகள் உயிர்ப் பற்றுப் போகின்றன. எனினும், துரத்தியவர்களே அத்தவறுக்கான வருத்தத்தை உணர்ந்த நிலையில், அதன் விபரீதத்தை வரலாறு கண்டடைந்த பின்னரும் 25 வருடங்களாக புத்தளம் உள்ளிட்ட பிற பகுதிகளில் அகதிகளாக முகாம் வாழ்வு அனுபவித்துத் துயர் மண்டிப்போன நிலையில், இத்தகைய கருத்துக்கள் துரத்தப்பட்டவர்களுக்குள் உள்ளிருந்தும் வெளியிருந்தும் சுமார் ஒரு தசாப்தத்துக்கு மேலாக நிலவி வருகின்றன.

வெறும் கையோடு வெளியேற்றப்பட்டவர்களில் சிலர் தமது தனிப்பட்ட முயற்சியால் பொருளாதார ரீதியில் முனைப்பு பெற்றனர் என்பது உண்மைதான். இதற்குள் ஒரு பொருளாதார மாற்றம் நிகழ்ந்துள்ளது. ஊர்களில் வாழும்போது செல்வந்தர்களாக இருந்த பலர் வறுமைக் கோட்டிலிருந்து மீள முடியாது போனதும் ஊர்களில் பொருளாதாரத்தில் மிக அடிமட்டத்தில் இருந்தவர்கள் ஏற்றம் கண்டதும் நடந்தேறியவை.

நாம் வெளியேறா விட்டிருந்தால் அங்கு உக்கிரமடைந்த யுத்தத்தின் கோரத்தில் பலியாகியிருப்போம். யுத்த பூமியின் அனைத்துத் துயரங்களி[illegible] வாக எமது இருப்புச் சிதிலமடைந்திருக்கும் என்ற கருத்து நிலையும் உண்டு.

உண்மையில், முல்லை முஸ்லிம்களை வைத்துப் பேசும்போது இப்பின்னணியின் சாதக பாதக விளைவுகள் நிறையவே உண்டு என்பதனை உணர முடியும்.

**எங்கள் தேசம்:** அரச பாடசாலைகளின் பாடவிதான ஆலோசனைக் குழுவில் நீங்களும் இருக்கிறீர்கள். அதன் மூலம் என்னென்ன மேம்பாடுகளைச் செய்ய முடிகிறது?

**முல்லை முஸ்ரிபா:** என்னைப் பொறுத்தவரையில் மாறும் உலகின் 'நவீனத்தை' மாணவர் பாடநூல் வழி பெறுவதற்கான ஒரு தூண்டியாக நூலாக்கம் அமைய வேண்டுமெனக் கருதினேன். பண்டைய இலக்கியங்கள் மட்டும் போதாமைக்குரியன. எனவே, இலக்கிய, மொழிச் செல்நெறியை ஒட்டி நவீன இலக்கியங்களை அறிமுகப்படுத்தும் ஓர் ஊடகமாகப் பாடநூல்கள் அமைப்பதில் கரிசனை செலுத்தி வருகின்றோம்.

பாடத்திட்டம், பாட உள்ளடக்கம், பாட நூலாக்கம், வகுப்பாய்வுச் செயற்பாடுகள், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் தொடர்பிலான பல்வேறு கருத்து நிலைகள் உள்ளன. இவை விரிவாகப் பேசப்பட வேண்டியவை.

**எங்கள் தேசம்:** 'சொல்லில் உறைந்து போதல்' கவிதைகள் மூலம் இரண்டாவது முறையாகவும் சாகித்ய விருது கிடைத்துள்ளது. என்ன சிறப்புகள் கொண்டமையால் உங்களது கவிதைகள் தெரிவு செய்யப்பட்டதாகக் கருதுகிறீர்கள்?

**முல்லை முஸ்ரிபா:** நான் கவிதைகளை உற்பத்தி செய்வதில்லை; எழுத வேண்டும் என்பதற்காக எழுதுவதில்லை; அதிகம் எழுதிக் குவிப்பதுமில்லை. என் நினைவில் என் மனதுக்குள் ஊறப்போட்ட சொற்கள் உள்ளே கிடந்து ஊறி ஊறி பக்குவமடைந்து தானாக ஊற்றத் தொடங்கியவுடன் அது பேனா வழியாகக் கட்டமைகிறது.

உருவச் செழுமை, உள்ளடக்க வீச்சு என்ற கவிதையில் பிரிக்க முடியாத-அவயவியான இரண்டு கூறுகள் மீதும் நான் எப்போதும் கவனிப்புச் செய்வதுண்டு.

இவ்வாறு என்னிலிருந்து அவ்வப்போது வெளிப்படுகின்ற கவிதைகள் அல்லது கவிதை மாதிரிகள் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவருகின்றன.

காலம் வாய்க்கும்போது கால ஒழுங்கில் அவற்றினைத் தொகுத்து பொதுத் தலைப்பு மற்றும் துணைத்தலைப்பின் கீழ் பிரதியாக்கி விடுவேன். அவ்வாறுதான், 'இருத்தலுக்கான அடைவு' 2003 ஆம் வருடத்துக்கான தேசிய சாகித்ய விருதையும், 'அவாவுறும் நிலம்' 2009 ஆம் வருடத்துக்கான தேசிய சாகித்திய மற்றும் கொடகே விருதுகளையும், 'சொல்லில் உறைந்து போதல்' 2014 ஆம் வருடத்துக்கான தேசிய சாகித்ய விருதையும் பெற்றன. இம்மூன்று பிரதிகளுக்கும் வடக்கு-கிழக்கு மற்றும் வட மாகாண இலக்கிய விருதும் கிடைத்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தேசம்

மலர்: 14 இதழ்: 21 நவம்பர் 01 - 14

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com



உங்களது நிறுவனங்களின் பெயர் பொறித்த கலண்டர்களை அச்சிடுவதற்கு...

JMF இன் 2016 ஆம் ஆண்டுக்கான Calendar

100/=



தொடர்புகளுக்கு: 0772649151 / 0718655873



CONQUER THE WORLD WITH GLOBAL QUALIFICATIONS!



Courses at BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
KALMUNAI

QUANTITY SURVEYING (FULL TIME & PART TIME)
LAW (LLB)
HND IN COMPUTING & SYSTEMS DEVELOPMENT (IT)
CAD & BS
MEP & INTERIOR DESIGNING
ACCESS PROGRAMME (IT + ENGLISH)
DIPLOMA IN ENGLISH



16 YEARS

Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD

For Details
Faizer : (+94) 771 620 407
Rizod : (+94) 773 247 711
Mufeeda : (+94) 766 693 684

392/1, Main Street, Kalmunai, Sri Lanka. | Tel : 067 2226899

COLOMBO | MT.LAVINIA | KANDY | BATTICALOA | KURUNEGALA | JAFFNA | KALMUNAI | QATAR


## குச்சவெளி இலந்தைக் குளம் முஸ்லிம் வித்தியாலயம் வரலாற்றில் சித்தி



அலுவலக நிருபர்

திருகோணமலை வலயத்தில் அமைந்துள்ள குச்சவெளி இலந்தைக் குளம் முஸ்லிம் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 39 வருடங்கள் முடிவடைந்துள்ள நிலையில், 2015 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் என். அப்றிஸ் என்ற மாணவன் 167 புள்ளிகளைப் பெற்று குச்சவெளி கோட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளதுடன், இம்மாணவனே இப்பாடசாலையின் வரலாற்றில் 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற முதல் மாணவனுமாவான்.

1985 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த இம் மக்கள் இன்று வரை மீள்குடியேற்றப்படவில்லை. இதன் காரணமாக இப்பாடசாலை குச்சவெளியில் சல்லிமுனை பல்வக்கைக் குளம் எனும் இடத்தில் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

படத்தின் இடது புறத்தில் பாடசாலையின் அதிபர் ஏ.ஏ. சிபுனிஸ் அவர்களும் வலது புறத்தில் எஸ். நிலாம்தீன் ஆசிரியரும் காணப்படுகின்றனர்.


பிஸ்மி ஆரோக்கியமான கூந்தலுக்கு ஹேர்பல் ஹெயார் ஓயில் III

Bismi Herbal Hair Oil

இயற்கை பச்சை மூலிகை மாத்திரம் உபயோகித்து, தயாரிக்கப்பட்ட பிஸ்மி ஹெர்பல் ஹெயார் ஓயில் டிரிபல்வன் III இந்தியாவில் கேரளா பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் மூலிகை மருந்தாகும்



(கை கண்ட பலன், உண்மையானது)
பிஸ்மி ஆயுர்வேத ஹெயார் ஓயில் 111

இந்தத் தைலம் முடி உதிர்வதைத் தடுக்க சிறந்தது என்பது பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக, இதனை விநியோகம் செய்யும் கண்டி பிரின்ஸ்கோனர் உறுதிப்படுத்துகின்றது. கேரளாவில் உற்பத்தியாக்கப்படும் இத்தைலம், இலங்கைக்கு இறக்குமதியாக்கப்பட்டு, கொழும்பில் 200அட அளவிலான போத்தல்களில் அடைக்கப்படுகின்றது. பிஸ்மி ஹேர்பல் ஹெயார் ஒய்ல் இலங்கையில் மிக நீண்ட காலமாக கொழும்பு, கண்டி, அக்குறணை ஆகிய மூன்று நகரங்களிலும் உள்ள, குறித்த முகவர்களிடம் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும்.

பிஸ்மி ஹேர்பர் ஹெயார் ஒய்ல் பாவணையாளர்கள் போலிகளில் இருந்து பாதுகாப்பதற்காக தெரிவு செயயபபட்ட மூன்று இடங்களில் மாத்திரமே விற்பனை செய்யப்படுகின்றது.

பிஸ்மி ஹேர்பல் ஹெயார் ஒய்ல் ட்ரிபல்வன் பாவிப்பதால், குறுகிய காலத்தில் மிகச்சிறந்த பிரதிபலனை பெற்றுக் கொள்ளலாம். இதனை பாவிப்பதன் மூலம் 15 நாட்களில் 70மூ பலனையும், 30 நாட்களில் ஆரோக்கியமான கூந்தலையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பது வைத்தியர்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தைலத்தை வாங்கிய பின்னர், நாம் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, முழு விபரங்களையும் பெற்றுக்கொண்டு பாவிப்பதன் மூலம் குறுகிய காலத்தில் மிகச் சிறந்த பலனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை நாம் உங்களுக்கு உறுதிப் படுத்துகின்றோம். எம்முடன் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:.

077-3735705 / 081-3820404

Reg.No. 128458

அற்புதம்!!! ஆனால் உண்மை

உதிர்ந்த தலை முடிகளை மீண்டும் பெற்றுக கொள்ள நீங்களும் இன்றே "பிஸ்மி ஆயுர்வேத ஹெயார் ஒய்ல் 111" பாவித்து முழுமையான பயனைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

- தலை முடி உதிர்வதைக் கட்டுப்படுத்தும்.
- தலை முடி உடைவதைக் கட்டுப்படுத்தும்.
- தலை முடியைக் கறுப்பாக்கும்.
- தலை முடியை அடர்த்தியாக்கும்.
- தலை முடி நரைப்பதை (வெள்ளையாவதைக்) கட்டுப்படுத்தும்.
- பொடு முற்றாக இல்லாமல் போகும் (எந்த மருந்துக்கும் பயனளிக்காத பொடுத் தொல்லை, இந்த ஒயிலைப் (Oil) பாவிப்பதன் மூலம் குறுகிய நாட்களில் முற்றாக இல்லாமல் போய் விடும்)
- மிகச் சிறப்பாகவும், வேகமாகவும் முடி வளரக்கூடிய ஒன்று பிஸ்மி ஹெயார் ஒயில் மட்டுமே

நீங்களும் இன்றே பாவித்துப் பாருங்கள்

Triple one Bismi Herbal Hair Oil

இதோ அரசாங்க வைத்தியரின் நற்சான்றிதழ்

பிஸ்மி ஹேர்பல் ஹெயார் ஒய்ல் (III) 40வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண், பெண் இருபாலாரதும் வழுக்கைத் தலையில் பிஸ்மி எண்ணெய்யை தொடர்ந்து 40 நாட்கள் பூசி வர முடி செழிப்பாக வளரும். எவ்வித பக்க விளைவுகளும் அற்றது.
65 வயதுக்குட்பட்டவர்களின் முடி உதிர்வதை 10-15 நாட்கள் பாவிப்பதன் மூலம் முற்றாகக் கட்டுப்படுத்தலாம். முடி உதிர்வது முற்றாக நின்று விடும். உதிர்ந்த முடியை மீண்டும் வளரச் செய்ய, உங்களது நீண்டகாலக் கவலையைப் போக்க Bismi Herbal Hair Oil (111) ஐ நீங்களும் பாவித்து, உண்மையான பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

Reg. No. 7755
Dr. (Mrs) D. M. I. Kumarihamy
D.A.M.S. (Lanka) M.Ac.F. (Lanka)
Bandaranayake Dispensary
Kandy

Kandy Prince Corner
#191, 1st Floor, Central Market, Kandy.
கண்டி பிரின்ஸ் கோர்னர்
191,1ம் மாடி, மத்திய சந்தை, கண்டி

CITY PHARMACY
அக்குறணை சிடி பாமசி
(அஸ்னா பள்ளிவாயலுக்கு முன்னால்)
124, Asna Mosque Road, Akurana - 06.

Rusan Trade Centre
211-213, 2nd Cross Street, Colombo-11.
ருஸான் டிரேட் சென்டர்
(முஸ்லிம் சிவப்புப் பள்ளி,சம்மான் கோட்டை பள்ளி வாயலுக்கு முன்னால்)

Rs 200ml ரூபா 1950/=
Imported from Kerala



பாவிக்க முன் பாவித்த பின்

பெற்றுக் கொள்ள முடியாத தூரத்திலுள்ளவர்கள் பார்சல் கொரியர் மூலம் பெற்றுக் கொள்ளலாம்

நீண்ட காலமாக, பிஸ்மி ஆயுர்வேத தைலம் விற்பனையாளர்கள் கொழும்பிலும், கண்டியிலும், அக்குறணையிலும் மட்டுமே...மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களைத் தவிர, இலங்கையில் வேறு கிளைகள் இல்லை. போலிகளுக்கு ஏமாற வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Published by: Just Media Foundation, Printed at AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.